# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-17 Issue-6 ஜூன்-2024 துல்காயிதா-துல்ஹஜ் 1445





## INTELLECTUAL INDIFADA

## பாலஸ்தீன மக்களுக்காக.... உலகெங்கும் கிளர்ந்த மாணவர்கள்

## அறிவுலக எழுச்சி..!



இஸ்லாத்திற்கு

## வாருங்கள்

## விடுதலை நிச்சயம்! வெற்றி நிச்சயம்!!

வழக்கறிஞர் சின்னசாமி பேருரை...






ஈரான் தலைவர்கள் மரணம்... இஸ்ரேலின் சதியா..?

# வைகறை வெளிச்சம்

ஜூன்-2024, துல்காயிதா-துல்ஹஜ் 1445

- தனிஇதழ் - ரூ. 40
- ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ.480
- வெளிநாடு - ரூ. 5000



மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.
49:13.

All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only

## உள்ளே...!




சிலுவைப் போர் 2.0 - 12

முதுமைக்கு முதல் மரியாதை - 22

ஃபாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு - 26

இந்தியாவில் முஸ்லிம்கள் - 32

பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் - முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 35

கையில் கிடைத்தப் போராளி - 40

மகளிர் மன்றம் - 47

குழந்தை வளர்ப்பு - 51

இஸ்லாம் : நேற்று... இன்று... நாளை... - 55

தலையங்கம் - 58




# அறிவுலக எழுச்சி....

# பாலஸ்தீன மக்களுக்காக....
# உலகெங்கும் கிளர்ந்த மாணவர்கள்

**"காஸா மக்களே! நீங்கள் தனித்து விடப்பட வில்லை. நாங்கள் உங்களோடு இருக்கின்றோம் – மாணவர்கள்"**

உலகம் இன்றளவும் கண்டிராத ஓர் ஒற்றுமை ஒருமைப்பாடு. இதனை அறிவுலக எழுச்சி என்றும் அழைத்தார்.

உலகில் வாழும் 840 கோடி மக்களும் ஒரே அணியில் நிற்கின்றார்கள். பாலஸ்தீனின் விடுதலைக்காகப் போராடும் முஹாஜித்களுக்காக.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்புகள் இன்றளவும் மறைக்கப்பட்டே வந்தன.

அதனால் பாலஸ்தீன மக்களின் அவலங்கள் உலக மக்கள் அறிந்திராத ஒன்றாகவே இருந்து வந்தன.

ஆனால் இஸ்லாமிய இயக்கங்கள் எடுத்த முயற்சியில் பல ஊடகங்கள் இன்று எழுந்தன. Print Media என்ற பத்திரிகை உலகம், Electronic Media என்ற மின்னனு ஊடகம், News Media என்ற சமுதாய ஊடகங்கள் / இணையதள ஊடகங்கள் என அனைத்து வகை ஊடகங் களையும் வளர்த்து எடுத்தார்கள்.

இந்த ஊடங்களின் மகத்தான சேவையால் உலகம் யதார்த்தங்களைப் புரிந்துகொண்டது.

இந்த உலகிற்கு உண்மை நிகழ்வுகளைக் கொண்டு செல்வதில், நேர்மையையும், நடுவுநிலை தவறாமையும் தவறாமல் கடைபிடித் தார்கள்.

உணர்ச்சிகளுக்குக் கிஞ்சிற்றும் இடந்தந் திடாமல், உண்மையின் பக்கமே நின்றார்கள். இதனால் உலகில் இன்று நம்பத்தகுந்தவை என்ற நன்மதிப்பைப் பெற்றுள்ளன மக்கள் மத்தியில்.

மேலைநாட்டு ஊடகங்கள் இன்றளவும் பொய்களையே சொல்லிக்கொண்டிருக்கின்றன. ஆனால் அவற்றைக் கடந்து இஸ்லாத்தை லட்சியமாகக் கொண்ட ஊடகங்கள் மக்களைச் சென்றடைந்திருக்கின்றன. சென்றடைந்தன என்பது மட்டுமல்ல நம்பிக்கைக்குரியன என எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதில் பெரும்பங்கு பெருமையும் பெருமதிப்பும், டாக்டர் யூசுஃப் கர்ளாவி அவர்களைச் சாரும். அதேபோல் ஈரானில் 1979இல் ஏற்பட்ட இஸ்லாமிய எழுச்சியையும் சாரும்.

டாக்டர் யூசுஃப் கர்ளாவி அவர்களின் பெரும் முயற்சிதான் அல்ஜெஸீரா நிறுவனம்.

இதனைப் பற்றிய விளக்கமான கட்டுரைகளை வைகறை வெளிச்சம் இதழில் நிரம்பவே தந்திருக்கின்றோம்.

இந்த முயற்சிகளை மெச்சுவதை விடவும், மனிதம் இன்னும் மரணித்துவிடவில்லை. அது எங்களிடம் நிரம்பவே இருக்கின்றது எனக் காட்டிய உலக மக்களை எவ்வளவு மெச்சினாலும் தகும்.

இந்த உலகில், பாலஸ்தீன மக்களுக்காக அதில் உயிரைத் தந்த 35,000க்கும் அப்பாற்பட்ட அப்பாவிகளுக்கு அனுதாபத்தைக் காட்டாத மனிதர்களே இல்லை எனலாம். அவர்களுக்காக போராடும் மக்கள் குவியாத நகரமே இல்லை எனக்கூறலாம்.

**யூதர்கள்**

யூதர்களே எங்களுக்கும், எங்கள் வேதத்திற்கும், இஸ்ரேலிலிருந்து இனப் படுகொலைகளைச் செய்து கொண்டிருக்கும் ஜியோனிஸ்ட்டுகளுக்கும் எள்ளளவும், எள் மூக்கின் முளையளவும் சம்மந்தமுமில்லை என்பதைப் பிரகடனப்படுத்திட்டனர்.

நாங்கள் மனிதர்கள்தாம், எங்களிடம் மனிதம் நிரம்பவே இருக்கின்றது எனக்காட்டினார்கள்.

உலக மக்கள் வெகுவாகத் திரண்டு வீதிக்கு வந்தபோது, இந்த யூத பெருங்குடி மக்களும் வந்தார்கள். இஸ்ரேலுக்கு எதிரான கோஷங்களை உள் மனதின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தினார்கள்.

**"ஜியோனிஸம் வேறு, யூத மதம் வேறு"**

இப்படியாகும் எதிர்பாராத கோஷம் ஒன்றை உலக அரங்கில் உரக்க முழங்கினார்கள் யூதர்கள்.

ஜியோனிஸம் தோன்றிய 1895இல் யூதர்களுக்கு ஒரு தனி நாடுகூடாது. அது மெஸையா வந்த பிறகே வரும் என்றார்கள்.

அதன்பின்னர் இப்போதுதான் உரக்க முழங்குகின்றார்கள்.

ஆமாம் எங்கள் யூதமதம் 2500 வருட பாரம்பரியத்தைக் கொண்டது. இஸ்ரேலில் இருக்கும் ஜியோனிஸசமோ 150 ஆண்டுகளே வாழ்ந்தது. இந்த ஜியோனிசம் யூதர்களின் பெயரால் அப்பாவிகளைக் கொலை

**அமெரிக்க அரசும் பல்கலைக்கழகங்களும் இந்த ஆய்வுகளில், இதுவரைக்கும் இந்த இனப்படுகொலைகளுக்கு 320 பில்லியன் டாலர்களைத் தந்திருக்கின்றது என்பதை கண்டுபிடித்தார்கள்.**

செய்கின்றது. குழந்தைகளையும் பெண்களையும் கொலை செய்கின்றது.

இந்தக் கொலைகளின் வழி ஜியோனிசம், யூத மதத்திற்குத் தீவிரவாத சாயத்தை பூசுகின்றது. ஆனால் யூத மதம் இதற்கு - இந்தத் தீவிரவாதங்களுக்கு அப்பாற்பட்டது எனப் பிரகடனப் படுத்தியது, மட்டுமல்ல, ஜியோனிசத்தை யூதர்கள் மத்தியிலிருந்து அப்புறப்படுத்திட வேண்டும் என்றும் குரல் கொடுத்தார்கள். செயல்முறைகளிலும் இறங்கியுள்ளார்கள்.

ஏனெனில் இவர்களின் கூற்றுப்படி யூதர்களுக்கென ஒரு நாடு கூடாது, 'மெஸைய்யா' என்ற இறுதிதூதர் இரட்சகர் வரும்வரை என்பது அவர்களின் ஆணித்தரமான நம்பிக்கை, அழுத்தமான மத நம்பிக்கை.

இதற்கு அவர்கள் வேதநூல் ஆதாரமாக இருக்கின்றது என்கிறார்கள.

இப்படிச் சொல்லிக்கொண்டே பாலஸ்தீனர்களுக்கு ஒரு தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கையை முன்னே கொண்டு சென்றார்கள் உலகெங்குமுள்ள மக்கள்.

அந்த ஊர்வலங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் கலந்துகொண்டார்கள் யூதர்கள்.

இத்தோடு நிறுத்திக்கொள்ளாமல் இன்னும் ஒருபடி மேலே போய் "Not in our names" எங்களுடைய பெயரால் அப்பாவிகளைக் கொல்லாதே" எனக் கோஷம் போட்டார்கள். பின்னர் இந்தப் பெயரிலேயே ஓர் இயக்கத்தைத் தொடங்கிவிட்டார்கள்.

இப்படி மதம், நிறம், நிலம், இவற்றைக் கடந்த ஒருமித்த கருத்தும் ஒத்துழைப்பும் ஒருமைப்பாடும் மனித வரலாற்றில் எப்போதும் நிகழ்ந்ததில்லை.

பாலஸ்தீன - காஸா பகுதியில். உயிரை இழந்த 36,000 பேர், காணாமற்போன 11,000

பேர், அநாதை ஆக்கப்பட்ட 19,000 குழந்தைகள் இவர்களுக்கு மனிதஇனம் இதேபோல் திரண்டதில்லை.

இப்படி மக்கள் ஒன்று திரண்டியதால் இஸ்லாமோ போஃபியா என்ற இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை வளர்த் தவர்கள், முகவரி இல்லாமல் போய்விட்டார்கள்.

அவர்கள் இந்த வெறுப்பை வளர்க்க அவர்களிடம் கொட்டிய பணம், எழுதி குவித்த எழுத்துக் குப்பைகள் பெரும் செலவில் தயாரித்து திரையிட்ட திரைப்படங்கள் இவையெல்லாம் மண்மூடிப் போய்விட்டன. வீண் விரயம் என்றாயின.


**மாணவ மணிகள் - சாட்சியங்கள்**

உலக மக்களின் இந்த எழுச்சியைத் தொடர்ந்து - மாணவ மணிகள், நாங்கள் இந்த இனப்படுகொலைகளை பார்த்துக்கொண்டு "சும்மா" இருந்தோம் என்ற இழிமொழியைச் சுமக்க தயாராக இல்லை எனக் கிளரந்தார்கள். அவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றி விட்டதாக உணருகின்றார்கள்.

இதைத் தெளிவாகவே அறிவிக்கவும் செய்தார்கள். அதில் நாங்கள் இரண்டு சாட்சி யங்களை வரலாற்றில் பதிவு செய்கின்றோம்.

அப்பாவி மக்கள் கொலை செய்யப்படுவதை நாங்கள் கண்டும், காணாததைப்போல் இருக்கவில்லை. எதிர்த்தோம்.

அதில் பல சங்கடங்களையும் சந்தித்தோம், தியாகங்களையும் செய்தோம். இதற்கு இன்றைய தலைமுறையினர் சாட்சி என்று பறைசாற்று கின்றார்கள்.




அமெரிக்காவின், கொலம்பிய பல்கலைக் கழகத்தில் தொடங்கியது முதலில். பின்னர் அந்தப் பல்கலைக்கழகத்தின் பள்ளி மாணவர் களிடையே பரவியது.

பின்னர் ஐம்பது பல்கலைக்கழகங்களுக்குப் பரவியது.

கொலம்பியா பல்கலைக்கழக மாணவர்களை அமெரிக்க அதிகார வர்க்கம் கைது செய்தது. மாணவர்கள், கலங்கவில்லை இன்னும் அதிக அளவில் கலந்துகொண்டார்கள்.

**உள்ளிருப்புப் போராட்டங்கள்**

SITINS சிட்-இன்ஸ் என்ற உள்ளிருப்புப் போராட்டங்களைத் தொடங்கினார்கள். முகாம்களை அமைத்தார்கள்.

கல்லூரி வளாகம் மூடப்பட்டது. உள்ளிருப்பு மாணவர்களை மிரட்டிட சதாசர்வ காலமும், காவல்துறையின் வாகனங்கள் வந்து காத்திருந்தன. அஃது ஓர் முற்றுகையாகவே ஆனது.

மாணவர்கள் Cops off Camps என ஓர் இயக் கத்தைத் தொடங்கினார்கள். காவல்துறை கல்லூரி வளாகங்களுக்கு எதிரே இந்த இராணுவ முற்றுகையிலிருந்து விடுதலை வேண்டும் என கோஷங்களை எழுப்பினார்கள்.

இந்நிலையில் போராட்டம் Gaza Solidarity நாடுகள் எனப் பெயர் பெற்றது.

இந்நிலையில் New York University என்ற நியூயார்க் பல்கலைக்கழகத்திலும் போராட் டத்தை தொடங்கினார்கள். மாணவர்கள் அங்கே போராட்டங்களை கலைக்க New York நியூயார்க் மாநகராட்சித் தலைவர், காவல்துறையை அனுப்பினார். அத்தோ சில குண்டர்களும் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் அதாவது குண்டர்கள் மாணவர்களைக் கண்மூடித்தன மாகத் தாக்கினார்கள். தடுத்திருக்க வேண்டிய காவல்துறை, வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நின்றது. காவல்துறையின் பாதுகாப்பின்கீழ் மாணவர்கள், தாக்கப்பட்டார்கள். வலுக் கட்டாயமாகத் தூக்கிச் செல்லப்பட்டார்கள்.

பல யூத மாணவர்களும் கைது செய்யப் பட்டார்கள்.

இந்த மாணவர்களையெல்லாம் நடப்பி லிருக்கும் சட்டத்தைப் பின்பற்றவில்லை என்ற

அடிப்படையில் கைது செய்யப்பட்டார்கள். பலர் விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்களிடம் கல்லூரி வளாகத்திற்குப் போகக்கூடாது என எழுதி வாங்கினார்கள்.

அடுத்தநாளே மாணவர்கள் கல்லூரி வளாகத்திற்குச் சென்றார்கள். உள்ளிருப்புப் போராட்டங்களை நடத்தினார்கள்.

இந்நிலையில் 13.5.2024இல் 3000 மாணவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

ஜெனிவாவில், ஜெனிவா பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் இறங்கினார்கள்.

இதனிடையே அமெரிக்க நாடாளு மன்றம், இஸ்ரேலிய இராணுவத்திற்கெதிராகப் பேசுவது Hate Speech என்ற வெறுப்புப் பிரச்சாரத்தின் கீழ்வரும். அதுதான் தண்டனைக்குரிய குற்றம் எனப் பிரகடனம் செய்தது.

மே-12,2024 அன்று அமெரிக்கா மாணவர்களை இஸ்ரேலுக்கு எதிராகப் போராடக் கூடாது என்றது.

அதை எதிர்த்து அமெரிக்காவின் உச்ச நீதிமன்றம் சென்றார்கள் சமூக ஆர்வலர்கள். ஆனால் உச்ச நீதிமன்றமும் கைவிட்டது.

இப்போது பேச்சு சுதந்திரமும் வேண்டும் எனக் கேட்டு மாணவர்கள் போராடினார்கள்.

அத்தனைப் பல்கலைக்கழக மாணவர்களும் இதில் கலந்துகொண்டார்கள்.

**TEACH-IN கற்போம் உள்ளிருப்பு**

கல்லூரி வளாகங்கள் முற்றுகைக்கு உள்ளாகவே மாணவர்கள் இன்னொரு போராட்டத்தைத் தொடங்கினார்கள். அது கற்போம் அல்லது அறிவைப் பெருக்குவோம் என்ற போராட்டம்

இப்போது மாணவர்களின் Gaza Solidarity Movements காஸா ஒற்றுமை இயக்கம் SIT-IN / Teach-IN என்ற இன்னொரு அறிவார்ந்த வடிவமைபைப் பெற்றது.

இந்த TEACH-IN கற்போம் என்ற முகாம்களில் அவர்கள் கற்றவை இனிவரும் உலகை வடிவமைக்கும். ஏனெனில் இந்த மாணவர்கள் எதிர்கால உலகை வழிநடத்தவே அவர்கள் கற்றவை.

**1. பாலஸ்தீனத்தின் வரலாற்றைக் கற்றார்கள். அதில் இஸ்ரேல் என்ற ஜியோனிச நாடு எப்படி தீவிரவாதத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது என்பதைக் கற்றார்கள்.**

**அதில் அமெரிக்காவின் உதவியோடு இன்றளவும் நடந்த கூட்டுக் கொலைகள் பற்றி விரிவாகவே கற்றார்கள்.**

**2. அமெரிக்காவில் நிறவெறி தலை விரித்தாடுகின்றதோ, அதேபோல் இஸ்ரேலிலும் நிறவெறி தலைவிரித்தாடுகின்றது என்பதையும் கற்றார்கள். தங்களுடைய கற்றல் முகாம்களில் வழி. அமெரிக்காவும் இஸ்ரேலும் நிறவெறி நாடுகள் என அறிந்தார்கள். அதனை சற்றும் தயங்காமல் உலகுக்கு அறிவித்தார்கள். மாணவர்கள் இந்தக் கண்டு பிடிப்பும் அறிவிப்பும் உலகின் கண்களைத் திறந்தன.**

**மாணவர்கள் இன்னொரு உண்மையையும் கண்டுபிடித்தார்கள். அதில் அதிர்ச்சி அடைந்தார்கள்.**

**அதிர்ச்சிக்குக் காரணம்**

1914-1917, 1947-1948 முதல் இன்று வரைக்கும் இஸ்ரேல் லட்சக்கணக்கான பாலஸ்தீன பூர்வீக குடிமக்களை, முஸ்லிம்களை அகதிகளாக வெளியேற்றி இருக்கின்றார்கள். பல லட்சம் பேரைக் கொலை செய்திருக்கின்றார்கள்.

அத்தனையும், அமெரிக்காவின் நிதியோடும் ஆயுதங்களோடும், அமெரிக்காவின் உளவு நிறுவனங்களின் உதவியோடும் நடந்திருக்கின்றன என்பதையெல்லாம் அறிந்தார்கள். தங்களுக்குள் இந்தக் கண்டுபிடிப்புகளைப் பகிரிந்துகொண்டார்கள்.

கோடிக்கணக்கில் அமெரிக்க தொழில் முதலைகளின் பணம், இஸ்ரேலில் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் ஆய்ந்தறிந்தார்கள்.

அத்தோடு அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும், இஸ்ரேலுக்கு பல தொழில் நிறுவனங்களும், குரூரமான ஆயுதங்களை உற்பத்தி செய்யும் ஆலைகளுமிருக்கின்றன என்பதையும் கண்டுபிடித்தார்கள்.

இந்தக் கண்டுபிடிக்களுக்குப் பின் ஒரு பெரும் முழக்கத்தை முன் வைத்தார்கள். அதில்

Disclose, Divest, Disinvest உண்மையைச் சொல்; Disclose

அதாவது எவ்வளவு பணத்தை இஸ்ரேலுக்குத் தந்திருக்கின்றீர்கள், எவ்வளவு பணத்தை இஸ்ரேலில் முதலீடு செய்தீருக்கின்றீர்கள் என்ற எல்லாத் தகவல்களையும் வெளியிடுங்கள்.

**Divest -** திரும்புங்கள் : இந்தப் பணங்களை பாதை மாற்றுங்கள், வேறு நாடுகளில் முதலீடு செய்யுங்கள். இஸ்ரேலிலிருந்தும் இஸ்ரேலின் தொழில் நிறுவனங்கள், ஆயுதங்கள் உற்பத்திச் செய்யும் ஆலைகள் இவற்றிலிருந்து திரும்பப் பெறுங்கள்.

**Disinvest -** இனி இஸ்ரேலிலும், இஸ்ரேலிய தொழில் நிறுவனங்களிலும், ஆலைகளிலும் முதலீடு செய்யாதீர்கள் எனக் கோரிக்கைகள் வைத்தார்கள். போராட்டங்களை நிறுத்த வேண்டும் என்றால், இந்த முக்கியக் கோரிக் கைகள், நிறைவேற்றப்பட வேண்டும் என எல்லா இணைய தளங்களிலும் செய்தியை பரப்பி னார்கள்.

அமெரிக்க அரசுக்கு வரி பணம் செலுத்து பவர்களின் பணம், இஸ்ரேலின் கூட்டுப்படு கொலைகளுக்கும், மனித இனத்திற்கெதிரான குற்றங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன என்பதை அமெரிக்க மக்களும், அகிலத்தில் எல்லோருக்கும் தெரிவித்தார்கள்.

ஏற்கெனவே அமெரிக்க மக்கள் வீதியிலே இறங்கி அமெரிக்காவும், இஸ்ரேலும் காஸாவில் நடத்தும் படுகொலைகளுக்கெதிராகப் போராடி வந்தார்கள். இப்போது தங்கள் போராட்டம் எத்துனைப் பொருள் பொருந்தும் என்பதை உணர்ந்தார்கள். மீண்டும் வீதிகளிலே குவிந்து போராட்டங்களை நடத்தினார்கள்.

**அமெரிக்க பல்கலைக்கழகங்கள்**
**City Council என்ற மாநகர கழகங்கள்**
**இவற்றின் - இஸ்ரேலிய முதலீடுகள்**

Teach-in உள்ளிருப்போம் கற்போம் என்ற போராட்டங்கள் தொடர்ந்தன.

இந்த கற்போம் நிகழ்ச்சிகள் வழியாக ஒரு பெரிய உண்மை தெரியவந்தது. அமெரிக்காவின் பல்வேறு மாநகர கழகங்கள், தங்களிடமுள்ள




உரிய பணத்தை இஸ்ரேலிய நிறுவனங்களிலும், தொழிற்சாலைகளிலும் முதலீடு செய்கின்றன.

இந்த வகையில் இஸ்ரேலுக்கு மிகப்பெரிய தொரு தொகை முதலீடாக கிடைக்கின்றது.

அமெரிக்காவின் கேலிபோஃர்னியாவிலுள்ள ஒரு மாநகரம் மட்டும் 600 மில்லியன் டாலர்களை இஸ்ரேலில் முதலீடு செய்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மாணவர்கள் உடனேயே Disclose எல்லா முதலீடுகளையும் வெளியே சொல்லுங்கள் என்றொரு போராட்டத்தைத் தொடங்கி னார்கள். அத்தோடு பின்வாங்குங்கள் DIVEST என்ற முழக்கத்தையும் முன் வைத்தார்கள்.

இப்படிப் பலநூறு மாநகர கழகங்கள் இஸ்ரேலில் முதலீடு செய்திருந்தன. அவை அம்பலமாயின.

இந்த முதலீடுகள், சந்தடி இல்லாமல் இஸ்ரேலுக்கு கிடைப்பவை. இந்த சலசல பில்லாத முதலீடுகளால்தாம் இஸ்ரேல் தன்னை பொருளாதாரத்தில் வளப்படுத்திக் கொள்கின்றது. உலகில் வளர்ச்சியால் விஞ்ச முடியாத நாடு எனக் காட்டிக்கொள்கிறது.

ஆனால் மாணவர்களின் போராட்டங்கள், அந்த முதலீடுகளை அம்பலப்படுத்தியதோடு, அவற்றில் பலவற்றைப் பின்வாங்கச் செய்வதிலும் வெற்றி பெற்றன.

**ஹாவார்டு பல்கலைக்கழக மாணவர்கள்**

போராட்டத்தில் ஹாவார்டு பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டார்கள்.

அமெரிக்காவிலிருக்கும் இந்தப் பல்கலைக் கழகம் மிகவும் அறிவுத்துறையில் பெரும் பேரும், புகழும் பெற்றது.

இந்தப் பல்கலைக்கழக மாணவர்கள் இந்தப்


vaigarai velicham official

# மே 1948 முதல் மே 2024 வரை

ஜியோனிஸ்டுகள் என்ற யூதர்கள் தீவிர வாதிகள் 05,மே 1948ஐ, ஐக்கிய நாடுகள் சபையின் உதவியோடு இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்கினார்கள்.

அந்த நாளை அவர்கள், இஸ்ரேலின் விடுதலை நாள் என அறிவித்தார்கள்.

அதே நாளை பாலஸ்தீன பூர்வீக குடிகள் "நக்பா" அல்லது பேரழிவு நாள் என அறிவித் தார்கள்.

ஏனெனில் அந்த நாளில் முந்தைய நாள்களிலும் ஏறத்தாழ 8,00,000 எட்டு லட்சம் பேர், பாலஸ்தீனிலிருந்து தாங்கள் பலநூறு ஆண்டு களாக வாழ்ந்து வந்த பூர்வீக குடிகளிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். 1,34,000 பேர் கொலை செய்யப்பட்டார்கள்.

அந்த மே 15,1948ஆம் நாள் முதல் மே,15,2024 வரை அவர்கள் செய்த அட்டூழியங்களையும், அநீதிகளையும் பாலஸ்தீன முஸ்லிம்களில் சிலர் சேகரித்து வைத்துள்ளார்கள்.

அவையாவன

1948 மே கொலை செய்யப்பட்ட / ஹஷீ தாக்கப்பட்ட பாலஸ்தீன முஸ்லிம்கள் 1,34,000 ஒரு லட்சத்து முப்பத்து நாலாயிரம் பேர்.

மேற்கு கரையில் மட்டும் 7,45,467 ஏழு லட்சத்து நாற்பத்தய்யாயிரத்து, நானூற்று அறுபத்து ஏழு யூதர்களை கொண்டுவந்து குடியேற்றப்பட்டார்கள்.

இவர்களில் 774 பாலஸ்தீன கிராமங்களி லிருந்து, பூர்வீக குடிகள் வெளியேற்றப்பட்டு, யூதர்கள் குடியமர்த்தப்பட்டார்கள்.

அத்தோடு 531 ஐநூற்று முப்பத்து ஒரு நகரங்களை கைப்பற்றினார்கள், தீயைப்பற்ற வைத்தார்கள், பூர்வீக குடிகளை விரட்டினார்கள்.

அக்டோபர்,7,2023 க்குப் பின்னர் அதாவது ஹமாஸ் போராளிகள் காஸாவில் விடுதலைப் போரை தொடங்குவதற்கு முன்னால் வரைக்கும் இஸ்ரேல் நடத்திய தாக்குதல் 12,161 பாலஸ்தீன பூர்வீக குடிகள் மீது,

3808 இஸ்லாமியச் சொத்துக்களை அழித்துள் ளார்கள். 27,500 மரங்களை வீழ்த்தி இருக்கின் றார்கள். 18,964 ஒலிங் மரங்களை அழித்திருக் கின்றார்கள்.

Source : Palestinian Central Bureau of Statistics /////// news Agency

- MGM

போராட்டத்தில் குதித்தது மிகப்பெரியதொரு விழிப்புணர்வை உலகெங்கும் உருவாக்கியது.

இதைத் தொடர்ந்து ஹவேர்டு பிசினஸ் ஸ்கூல் என்ற பெரும் பொருளாதார கல்வி நிறுவனத்தின் மாணவர்களும் இதில் கலந்து கொண்டார்கள். இவர்கள் தங்கள் அறிவுத் திறனை உலகுக்குப் பறைசாற்றிடும் அளவில் மாபெரும் வேலை ஒன்றைச் செய்தார்கள்.

அது, 116 பக்கத்திற்கு ஒருநூலை வெளி யிட்டார்கள். அதில் அமெரிக்கா ஓர் அரசாக எவ்வளவு பணத்தை இஸ்ரேல் செய்யும் இனப்படுகொலைகளுக்குக் கொட்டிக் கொடுக்கின்றது என்பதைப் பட்டிய லிட்டார்கள்.

அதேபோல் அமெரிக்காவின் பல்வேறு பல்கலைக்கழகங்களும் எவ்வளவு பணத்தை இஸ்ரேலில் முதலீடு செய்கின்றன என்பதையும் கண்டெடுத்தார்கள், பட்டியலிட்டார்கள்.

அமெரிக்க அரசும், அமெரிக்காவின் பல்கலைக்கழகங்களும் தரும் பணத்தால் இஸ்ரேல் வீழ்த்தும் அப்பாவிகளின் பிணத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டினார்கள். ஆப்படித்த குரங்குபோல் ஆகியது.

அமெரிக்க அரசும் பல்கலைக்கழகங்களும் இந்த ஆய்வுகளில், இதுவரைக்கும் இந்த இனப் படுகொலைகளுக்கு 320 பில்லியன் டார்களைத் தந்திருக்கின்றது என்பதை கண்டுபிடித்தார்கள்.

உலகிற்கு அமெரிக்காவின் இன்னொரு முகம் தெரியவந்தது.

**ஜெனிவா பல்கலைக்கழகம்**

இந்த அநியாயங்கள் உலகெங்குமுள்ள மாணவ மணிகளின் கண்களைத் திறந்தன. ஜெனிவா நாட்டிலுள்ள ஜெனிவா பல்கலைக் கழகம் போரில் குதித்தது.




**பல்கலைக்கழகங்களும் பட்டமளிப்பு விழாக்களும்**

பாலஸ்தீனை மீட்டும் இந்தப் போர் - அதில் நடக்கும் இனப்படுகொலைகள், இவையெல்லாம் உலகெங்குமுள்ள பல்கலைக் கழகங்களின் பட்டமளிப்பு விழாக்களின்போது நடைபெற்றன.

இதனால் மாணவர்கள் பட்டமளிப்பு விழாக்களையே போர்க்களமாக்கினார்கள்.

பட்டமளிப்பு மேலாடையாக பாலஸ்தீன் கொடியைப் போர்த்தினார்கள். பட்டமளிப்பிற்கு தலை வைத்திடும் கீரிடத்திலும் பாலஸ்தீன் கொடியை அணிந்தார்கள்.

பேசிட வாய்ப்புக் கிடைத்ததால், அமெரிக் காவின் நிறவெறியையும் அது காஸாவில் நடத்தும், கூட்டுப் படுகொலைகளையும் கண்டித்துப் பேசினார்கள், அரங்கமே அதிர்ந்தது. அவர்களது பேச்சைக் கேட்டு அமோக வரவேற்பு.

**ஹாவார்டு உனக்குக் கேட்கின்றதா?**

அதில் ஹாவார்டு பல்கலைக்கழகத்தில் பேசிய JONES என்ற பெண்மணி பேசிய உரை, கருத்தாழம் மிக்கதாகவும், உணர்ச்சிப்பூர்வமாக அமைந்தது. அந்த உரை ஹாவார்டு உனக்குக் கேட்கின்றதா? என்ற தலைப்பில் உலகெங்கும் உலாவந்தது.

“மாணவர்கள் பலர் தங்கள் உரைகளில் தீமைகள் இந்த உலகில் எப்போது தழைத்து வளரும் என்றால் நல்லவர்கள் அதைக் கண்டு கண்ணைப்பொத்திக் கொண்டிருக்கும் போதுதான்” அதற்குக் காரணம் நாங்கள் அந்த வகையைச் சார்ந்தவர்கள் அல்ல என்பதைத் தெளிவுப்படுத்தினார்கள்.

**பட்டமளிப்பு விழாக்கள் ரத்து**

பட்டமளிப்பு விழாக்களின்போது மாணவர்கள், பாலஸ்தீனில் பட்டினி, மரணம், இவற்றால் துயரறுந்து நிற்கும் மக்களிடம் “you are not alone we are with you” நீங்கள் தனித்து விடப்பட்டிடவில்லை. நாங்கள் உங்களோடு என்ற கோஷங்கள் அதற்கு பட்டமளிப்பு விழாவில் குழுமிய கற்றோர்களிடம் கிடைக்கும் வரவேற்பும், பல்கலைக்கழகங்களை வெறுப் பிற்கு உள்ளாக்கின. இதனால் பல பல்கலைக் கழகங்கள் பட்டமளிப்பு விழாக்களை ரத்து செய்தன.

இதிலும் முன்னோடியாகக் கொலம்பியா பல்கலைக்கழகமே நின்றது.

ஓரிரு கசப்பான விழாக்களுக்குப் பின் அது, எல்லா பட்டமளிப்பு விழாக்களும் ரத்து என அறிவித்தது.


vaigarai velicham official

மாணவர்கள் தங்கள் பட்டங்களைத் தனித் தனியாக வந்து பெற்றுக்கொள்ளாம் என அறிவித்தது.

**பட்டங்களைக் கிழித்தெறிந்த மாணவர்கள்**

பட்டமளிப்பு விழாக்களை நடத்திட விரும்பாத பல்கலைக்கழகங்கள் தங்கள் மாணவர்களை அழைத்துப் பட்டங்களை வழங்கினார்கள்.

இதில் வெறுப்படைந்த மாணவர்கள் பட்டங்களை கிழித்துப் போட்டார்கள்.

பட்டங்களைக் கிழிப்பது அவர்களின் எதிர்காலத்தை கிழித்துப் போடுவது என்பதாகும். அவர்களிடம் கேட்டபோது,

“எங்களுக்குப் பொய்யையும் புனைந்துரை களையுமே, கற்றுத்தந்திருக்கின்றார்கள். இப்போது இந்த உள்ளிருப்பு முகாம்கள் SIT-IN மற்றும் உள்ளிருப்புக் கல்வி இவற்றின் மூலமே உலகை முறையாகப் புரிந்துகொண்டோம்” என்றார்கள்.

**இஸ்லாத்தைப் பற்றிய பாடம்**

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தங்கள் பாடங்களின்வழி ஓர் ஆய்வை மேற் கொண்டார்கள்.

அது, எப்படி இத்தனை உயிர்ச் சேதங்களுக்குப் பின்னரும், எப்படி உணர்வும் உற்சாகமும் குன்றாமல் போர் களத்தில் மிகப்பெரிய வல்லரசுகளை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும் கற்றார்கள்.

இந்த ஆய்வுகளின் வழி தங்கள் மனதில் போராளிகளின் உறுதியினை நிலை நிறுத்தினார்கள்.

65% விழுக்காடு மாணவர்கள் பாலஸ்தீன மக்களை மட்டுமல்ல, ஹமாஸ்-ஐ நாங்கள் எந்தத் தயக்கமுமின்றி ஆதரிக்கின்றோம் என்றார்கள்.

அக்டோபர்-7,2023இல் அவர்கள் அதாவது ஹமாஸ் நடத்தியது ஒரு திவிரவாதத் தாக்குதல் தானே? எனக் கேட்டபோது, அது வேறு வழியில்லாமல் ஒரு தேவையை முன்னிட்டு நடத்தியத் தாக்குதல் என்றார்கள்.

இப்போது மாணவர்கள், இந்த பாலஸ்தீன பொதுமக்களையும், இஸ்லாமியப் போராளிகள் குழுவுக்கும் ஊட்டந்தரும் திருக்குர்ஆன் வசனங்களைப் படிக்கத் தொடங்கினார்கள்.

அதில், இஸ்லாம் அநீதிக்கு எதிராகப் போர் புரியச் சொல்லுகின்றது என்பதையும், அதில் எதிர்படும் இழப்புகளைப்பற்றி எள்ளளவும் கவலை கொள்ளாமல் அநீதியை எதிர்க்கச் சொல்லுகின்றது என்பதையும் கற்றார்கள்.


முற்றாக முடிவாக, உலக மக்களை நோக்கி ஒன்றை ஹக்கை கூறினார்கள்.

முஸ்லிம்கள் அநீதிகளை எதிர்க்கவே படைக்கப்பட்டுள்ளார்கள்.


**பேராசிரியர்கள்**

இந்நிலையில் பல பல்கலைக்கழக பேராசிரி யர்கள், இந்த மாணவர்களோடு போராட்டத்தில் கலந்துகொண்டார்கள். உண்ணாவிரதப் போராட்டத்திலும் கலந்துகொண்டார்கள். பலர் கைது செய்யப்பட்டார்கள் ஆனாலும் அவர்கள் பாலஸ்தீன மக்களோடு உறுதியாக நின்றார்கள்.

- MGM

ஆங்கிலம் : JOHN FEFFER
தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




அன்பார்ந்த வாசகர்களே!

இஸ்லாமோஃபோபியா என்ற இஸ்லாமிய எதிர்ப்பு, இதற்காக மக்கள் மன்றத்தில் இஸ்லாத்தின் மீது வெறுப்பு, அதனை ஏற்படுத்திட கோடிக்கணக்கில் பணம் அனைத்து ஊடகங்களையும் அதற்காகப் பயன்படுத்துவது. இவற்றையெல்லாம் எதிர்கொள்ளவியலாத முஸ்லிம்கள்.

ஏன்? இஸ்லாமோஃபோபியா பலகோடி முதலீட்டில் வளர்க்கப்படுகின்றது என்பதை முஸ்லிம்களே அறிந்திருக்கவில்லை.

இப்போது காஸாவில் நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகள், இந்த வெறுப்பின் உச்சம். உலகெங்கும் கிளர்ந்தெழுந்த மக்கள் அதன் ஆழத்தை அழகாகப் புரிந்துகொள்கின்றார்கள். இதனை நாம் இந்த இதழில் இடம்பெற்ற அறிவார்ந்த கிளர்ச்சி! எழுச்சி!! என்ற கட்டுரையில் தந்திருக்கின்றோம். Intellectual Indifada

இதன் 'நதிமூலம்' எங்கே என்பதை ஜான் பெஃப்பர் அவர்கள் விளக்கமாக விளக்குகின்றார்.

இஸ்லாத்திற்கெதிரான சதிகளை நன்றாய் புரிந்துகொள்ள இந்தத் தொடர் அடிப்படை ! தொடர்ந்து படித்து வாருங்கள்...

ஜான் பெஃபர் கூறுகின்றார்...

9/11 நிகழ்வுக்குப்பின் அமெரிக்க அதிபர் ஜார்ஜ்புஷ் - தனது முதல் இலக்கு, இரட்டைக் கோபுரங்களைத் தாக்கியது தீவிரவாதிகள்தாம்.

ஆனால், அவர் மனதில் வைத்திருந்தது, இஸ்லாத்தை ஒழிப்பதுதான். உண்மையைச் சொன்னால் இஸ்லாத்தை ஒழிப்பதுதான். ஆனால் உலகில் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு சொல்லைப் பயன்படுத்துவதே நடைமுறை. அதாவது அந்தச் சொல், அன்றைய பரபரப்பான சூழலில் தீவிரவாதம் என்பதே!

தீவிரவாதம் என்ற சொல்லைப் பயன்படுத்தும் போதெல்லாம் அவர் இஸ்லாத்தினை மனதில் கொண்டிருந்தார்.

இஸ்லாம் உலகெங்கும் பரவி இருப்பதால் போரை, அமெரிக்காவோடோ அல்லது இன்னும்சில நாடுகளோடோ, அந்த நாடுகளில் வாழும் முஸ்லிம் களோடோ நிறுத்திக்கொள்ள முடியாது என்பதால் அந்தப் போருக்கு Global War on Terror தீவிரவாதத் திற்கெதிரான உலகளாவிய யுத்தம் எனப் பெயர் வைத்தார்கள்.

இது ஒரு தெளிவற்ற வாதம். குழப்பான சொல்லாட்சி; எங்கெல்லாம் சண்டை, யாரோடெல்லாம் சண்டை என்பது வரையறுக்கப்படவில்லை. உலகெங்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம்களோடு போர் என்பது முதிர்ந்த முட்டாள்தனம். ஆனால் அதைச் செய்திட துணிந்தார் அமெரிக்காவின் அன்றைய அதிபர் ஜார்ஜ்புஷ்.

அன்றைய நாள்களில் இன்னும்பல தீவிரவாத இயக் கங்கள் இயங்கிக் கொண்டிருந்தன. அவற்றுள் ஒன்று Basque Father Land - பாஸ்க் தந்தை பூமி, இன்னொன்று Liberty விடுதலை. இவை அமெரிக்கா அதன் இப்போதைய நிலையில், இது முழுமையாக விடுதலை அடைந்த நாடாக இல்லை. அதை வன்முறையின் மூலம், மீட்க வேண்டும் என்று தீவிரவாத தாக்குதல்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவை. அவற்றையும் சேர்க்கலாம் என்றால் புஷ் ஒத்துக்கொள்ளவில்லை. சில நாடுகள் தீவிரவாதத் திற்குத் துணை நின்றன. எடுத்துக்காட்டாக "கியூபா" வைக் கூறலாம். அந்த நாடுகளையும், இந்தப் பட்டியலில் சேர்க்கலாம் என்றால் அதையும் புஷ் ஒத்துக்கொள்ளவில்லை. அனைத்திலும் புஷ்ஷிடம் குளறுபடி.

அதேநேரத்தில் பொத்தாம் பொதுவாகத் தீவிர வாதம் என்றால் குழப்பமாக இருக்கிறது. இஸ்லாத்தைக் குறிப்பாக, பழைமைவாத இஸ்லாத்தை


vaigarai velicham official

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என வலதுசாரிகள் குறைபட்டுக் கொண்டார்கள்.

2002ஆம் அண்டில் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், தன் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் (State of the Union Address) ஒரு பொது எதிரியைக் குறிப்பிட்டார். அது, "Axis of Evil - தீமைகளின் குழுமம்" என அதனை அழைத்தார். அதில் ஈராக், ஈரான், வடகொரியா ஆகியவற்றை வரிசைப்படுத்தினார். இவற்றில் இஸ்லாத்தை மையப்படுத்தி வளரும், இஸ்லாமிய அமைப்புகளை குறிவைத்தார். இந்த நாடுகளையும் அவற்றில் வளரும் இஸ்லாமிய இயக்கங்களையும், மையப்படுத்தியதற்குக் காரணம். தான் ஓர் "இஸ்லாமிய வெறுப் பாளர் - Islamophopics" என்ற தன்னைக் காட்டிக்கொள்ளத்தான்.

ஜார்ஜ் புஷ் அவர்களின் உரையை எழுதி யவர் டேவிட் ஃபிரம் (David Frum) என்பவர் தான். அவர் "Axis of Evil - தீமைகளின் குழுமம் என்பதற்குப் பதிலாக, Axis of Hatred - வெறுப்பின் வட்டம் என்ற சொல்லைத்தான் பயன்படுத்தினார். ஆனால் அவருடன் பணி யாற்றும் (Michael Gerson) மைக்கேல்ஹெர்சன் என்பவர், ஒரு தீவிர கிருஸ்தவ ஆதரவாளர். அவர்தான் தீமைகளின் வட்டம் என்ற சொல்லைப் பயன்படுத்தினார். அவர் வெறுப்பை நிறையவே கொட்டிட வேண்டும் என ஆர்ப்பரிப்பவர்.

அவர்கள் தங்களுக்குள் விவாதித்துக் கொண்டிருந்தபோது, "தீமைகளின் வட்டம்" என்பது ஒரு பாசிச சிந்தனையைப் பிரதிபலிப் பாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்தச் சொல்லை Axis-ஆக்சிஸ் என்ற சொல்லைப் பயன்படுத்திட வேண்டும் எனப்பேசினார்கள்.

"ஈரான், ஈராக், அல்கொய்தா (அல்காய்தா) எல்லாம் ஐரோப்பிய ஃபாசிசத்தைப் போன்றவை என்ற எண்ணத்தை மக்கள் மன்றத்தில் பதிய வைத்திட வேண்டும் என வாக்குவாதம் செய்தார்கள்"

இந்தச் சொல்லாட்சியைக் கேட்ட வுடன் மக்கள் மறுபக்கத்தைச் சிந்திக் காமல், குறிப்பிட்ட நாடுகளையும், அமைப்புகளையும் வெறுக்க வேண்டும். அறிவார்ந்த சிந்தனைகளுக்கும் இவர் களுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்ற எண்ணம் மக்கள் மன்றத்தில் வந்திட வேண்டும். அதேபோல் இவர்களுக்கெதி ரான நடவடிக்கைகளில், மனிதாபிமானம், இரக்கம் இவற்றிற்குக் கொஞ்சமும் இடம் இருக்கத் தேவையில்லை என்பதையும் மக்கள் உணர வேண்டும். அப்போதுதான் நாம் கண்ணை மூடிக்கொண்டு கண்டவர் களையெல்லாம் கொலை செய்யலாம். சட்டங்கள், நீதிமன்றங்கள் இவற்றைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்ற நிலை வரும்.

இப்படி பேசிக்கொண்ட புஷ்-ஷின் உதவியாளர்கள் அந்தப் போருக்கு - அதாவது இஸ்லாமிய உலகின் மேல் தொடுத்தப் போருக்கு Global War on Terror தீவிரவாதத்திற்கெதிரான உலகளாவிய போர் எனப் பெயர் வைத்தார்கள்.

அதைத் தொடர்ந்து இஸ்லாமேபாசிசம் - Islamofacism என்றொரு சொல்லாட்சியைப் புழக்கத்தில் கொண்டு வந்தார்கள். இஸ்லாத் தையும் (பாசிசம்) எனச் சொல்லும் சொல் வழக்கு, இது. எல்லாம் குருசேடு 2.0 - Crusade 2.0 என முடிந்தது. இந்தப் பின்னணியில் ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய நாடுகளை ஆக்கிரமித்தார்கள்.

- இன்ஷா அல்லாஹ் தொடரும்.

வாசகர்களின் பார்வைக்கு....

அமெரிக்கா, Nato நேட்டோ என்ற அமைப்பை தன் கைகளில் வைத்துக் கொண்டது. இந்த நேட்டோவில் North Atlantic Treaty Organizaiton இல் 51 நாடுகள் இருக்கின்றன.

இவற்றின் உதவியோடு முதலில் ஆப்கானிஸ்தான் பின்னர் ஈராக் அதைத் தொடர்ந்து ஈரான் என்ற நாடுகளை குறிவைத்துத் தாக்கிட படை திரட்டி வந்தது.

ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தது, அழித்தது. ஈராக்-ஐயும் ஆக்கிரமித்தது அழித்தது. அடுத்து ஈரானை நோக்கிப் பாய்ந்திட இருந்தது. ஆனால் ஈரான் அதற்குள் தன்னை எல்லா அளவிலும் வளர்த்துக்கொண்டது. இதனால் ஈரானிடம் அதன் பாட்சா பலிக்கவில்லை.

காலப்போக்கில் ஆப்கானிஸ்தானில் இஸ்லாத்தை முன் வைத்துப் போராடிய 'தாலிபான்கள் வென்றார்கள்'. ஆப்கானிஸ் தானில் இஸ்லாத்தின் ஆட்சி அமைந்தது. ஈராக்கிலும் இஸ்லாத்தை முன்வைத்துப் போராடிய முஜாஹிதீன்கள் வென்றார்கள். அமெரிக்காவும் நேட்டோ படைகளும் தோற்றன.

இந்நிலையில், ஈரான் அணு ஆயுதத்திலும் தேர்ச்சி பெற்றது. அமெரிக்காவு அதிர்ச்சி தரும் அளவில் அனைத்துத் துறைகளிலும் வளர்ந்தது. இதனால் ஈரான் பக்கம் பாய்ந்திட இயலவில்லை.

- MGM



# வாருங்கள்

## விடுதலை நிச்சயம்! வெற்றி நிச்சயம்!!

### நாகர்கோவில் தாஃவா நிகழ்ச்சியில் வழக்கறிஞர் சின்னசாமி பேருரை...

**நம்** முன்னால் இருக்கும் முதல் முக்கிய பிரச்சனை என்னவென்றால், நாம் வசித்து வரும் நாகர்கோவில், கிருஷ்ணன் கோவில் அருந்ததியர் தெருவில் உள்ள பிரச்சனை. இந்தப் பிரச்சனையாகப்பட்டது. 1956-ல் இருந்தே இருந்துத் தொடர்ந்துகொண்டு இருக்கிறது.

இந்த அருந்ததியர் தெரு என்பது தமிழக Market Value Place என்பது இடத்தின் மதிப்பு அதிக தொகை கொண்டதாக மாறிவருவதாக தமிழக வருவாய் துறை தெரிவிக்கிறது.

கிருஷ்ணன் கோவில் நாகர்கோவிலின் இதயப்பகுதி, இதனைச் சுற்றிலும் மாட மாளிகைகள் வந்துவிட்டது.

நாம் வசிக்கும் பகுதி ஓர் "சக்கிலிய சேரியாக ஆகிவிட்டது"

அதற்குக் காரணம், நமக்கெல்லாம் பார்த்த வுடன் தெரிந்துவிடும், நம்முடைய பகுதி ஒரு கழிப்பிட வசதி இல்லாத பகுதி, சாக்கடை தண்ணீர் வெளியே போக வசதி இல்லாத பகுதி.

மழை, வெள்ளம் வந்தால் வெளியே செல்ல முடியாமல் இந்த சேரிக்குள்ளேயே தேங்கி நின்று சிறியவர், பெரியவர் அனைவருக்கும் நோய் பாதிப்பை ஏற்படுத்தும் பகுதி.

இப்படி எந்த நகரின் மையத்திலாவது இப்படி ஒரு பகுது இருக்கின்றதா? என்றால் இல்லை. நம் பகுதியில் மட்டும்தான் இருக்கிறது.

இந்த பகுதியில் வசிக்கும் எங்களுக்கு "பட்டா" கொடுங்கள் (தாருங்கள்) என்ற கோரிக்கை 1955ஆம் ஆண்டில் இருந்தே வைக்கப்படுகிறது. 1955ஆம் ஆண்டில் நமது "அருந்ததியர் சேவ சங்கத்தின்" செயலாளர் இலட்சுமணன் என்பவர் அப்போது இருந்த திருவிதாங்கூர் அரசிற்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். எதற்காக எழுதினார் என்றால், இப்போது 2024ல் நாம் கேட்கும் இந்த பட்டாவிற்காகத்தான் அப்பவும் கடிதம் எழுதினார்.

ஆக ஒரு நூற்றாண்டு பிரச்சனையாக இந்த பட்டா பிரச்சனை இருந்து வருகிறது. இப்படி நம் பகுதிக்கு பட்டா தர முடியாத அளவிற்கு என்ன பிரச்சனை என்று பார்த்தால், தரவே முடியாதா என்று கேட்டால் இல்லை, இல்லை தரலாம் என்பதே பதிலாக இருக்கிறது. ஆனால் பட்டா தர மறுக்கிறார்கள்.

நமது நிலத்திற்கு பட்டா தர மறுப்பதன் காரணம் என்னவென்று பார்த்தால், நிலத்தின் விலை மதிப்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பதுதான்.

நமது பாட்டன் பூட்டன் காலத்தில் இந்த இடம் விலை மதிப்பில்லாமல் நாதிஅற்றுக்

கிடந்தது. சுப்பையா என்ற இந்த குளம் நமது நகரத்தின் சாக்கடை கலக்கும் இடமாக இருந்தது. அந்த இடத்தில் குடியிருந்த நம் மக்களை திருவிதாங்கூர் அரசு என்ன செய்தது என்றால், இவர்களை அந்த இடத்தின் "நகர சுத்தி பொருளாளர்களாக" நியமித்தது. இங்கே குடியிருந்த இடத்திலேயே வீடு கட்டி கொடுத்தது. இப்போ அதுதான் பிரச்சனை, நாமே ஒரு ஒதுக்கு புறத்திலே, சாக்கடை ஓரத்திலே, மனித நடமாட்டம் இல்லாத ஒதுக்குப் புறத்திலே குடியிருந்தோம்.

இந்த நகராட்சியிலே வேலையும் செய்தோம், இந்த நகராட்சி என்ன செய்தது. நாம் குடியிருந்த இடத்திலே நமக்கு வீடு கட்டித் தந்தது.

ஆக இப்போ அந்த இடத்தில் நாம் குடிபோன பிறகுதான் நமக்கு வீடு வருகிறது. இந்த வீட்டிற்கு வாடகையோ, (Current Bill) நகராட்சி வசூல் பண்ணவில்லை. நாம் ஒழுங்காக ஓர் வீட்டில் வசிக்கவில்லை என்ற சமூக சேவை நோக்கத்தில் இந்த வீடுகள் கட்டித் தரப்பட்டது. அவங்க கட்டித் தந்த பகுதியில் நாம் வசிக்கிறோம் என்பதற்காக, அந்த பகுதியையே நகராட்சிக்கு சொந்தமான பகுதியாக நகராட்சி கருதிக் கொள்கிறது.

சரி, இந்த நகராட்சி எப்போ வருகிறது என்று கேட்டால், திருவிதாங்கூர் அரசு அதனுடைய சிறந்த தன்மையை இழந்து, தமிழக அரசுடனும், கேரள அரசுடனும் கலந்துவிட்ட பிறகு, நகராக வரும் முன்பே அங்கு குடியிருக்கிறோம்.

இந்த நகராட்சி வருகிறது, நாமோ அதற்கு முன்பே திருவிதாங்கூர் மன்னர் சித்தையை திரு.நா. மன்னர்க்கு கடிதம் எழுதி இருக்கிறோம், அதற்கு அவர் தந்த பதில் என்னவென்று பார்த்தோமேயானால், உங்கள் குடியிருப்பு பகுதியை ஆக்கிரமிப்பு பகுதியை உங்களுக்கு (Register) செய்து தருகிறோம் என்பது முதல் Point-1, Point-2 உங்கள் கோவில்களை சீரமைத்துத் தருகிறோம், உங்கள் பகுதியில் நூலகம் அமைத்துத் தருகிறோம்.

நீங்கள் வசிக்கும் பகுதியில் நீங்கள் படிப்பதற்கு "ஏவு பள்ளி" அமைப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம். அப்படின்னு நமக்கு பதில் தந்தார். அதற்கு நம் கையில் இருக்கிறது.

அப்ப இந்த கிருஷ்ணகோவில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தோடு இணைந்து இருந்தது. அப்போ அந்த மன்னர் தூய்மைப் பணியாளர்களுக்கு இந்த இடத்தை எழுதி கொடுத்துவிட வேண்டும் என்று முடிவெடுத்தார். இந்த முடிவை எடுத்த பிறகு **1956**இல் திருவிதாங்கூர் அரசு கலைக்கப் படுகிறது. அதன்பிறகு இந்த பகுதி கேரளாவோடு கொஞ்சமும், தமிழ்நாட்டோடு கொஞ்சமும் இணைந்திருந்தது.

நாம் இதுவரையில் இந்த இடத்திற்கு பட்டா கேட்டுக் கொண்டிருக்கிறோம். நாம் கேட்பது பகுதி அரை செண்டோ, 5 செண்டோ, பத்து செண்டோ என்பது நம் கோரிக்கை அல்ல. ஏதோ நாங்கள் குடியிருக்கும் அளவிற்கு கொஞ்சம் இடத்தை அளந்து கொடு என்பதே நமது கோரிக்கை.

நம்மிடம் இருந்த ஆவணங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு சென்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நீதி பேராணை பெற்று அந்த நீதி பேராணையை வைத்து, நாம் வசிக்கின்ற இடத்தை காலி செய்யக்கூடாது என்று Stay வாங்கி இருக்கிறோம். இந்த Stay நடைமுறையில் இருக்கிறது.

ஆக, அரசு அலுவலர்களை நேரில் சந்தித்து மனுக் கொடுத்தோம். இந்த இடத்தை பட்டா போட்டுக் கொடுங்கள் என்று, அதற்கு அவர்கள் சொல்லும் பதில் என்னவென்றால், இந்த இடம் வந்து நில மதிப்பு அதிகமாகிவிட்டது. இதில் நகராட்சி தலையிடாது, அரசுதான் இதை பார்க்க வேண்டும், வருவாய் துறை அமைச்சர்தான் பார்க்க வேண்டும் என்று முதல்வர்தான் தலையிடனும் என்று கலெக்டரும் தலையிட முடியாது.

இப்ப என்ன செய்ய வேண்டும்? நாம், இந்த நீதித்துறை செயலாளருக்கும், முதல்வருக்கும் அந்த கோரிக்கையை கொண்டு செல்ல வேண்டும். அதுதானே அடுத்தகட்ட நடவடிக்கை, எனவே நாங்கள் என்ன சொல்கிறோம், ஒரு அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி எங்கள் கோரிக்கையை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்கிறோம்.






அரசுக்கு முன் வைக்கிறோம் என்று கூறி, அதற்காக வடச்சேரி காவல் நிலையத்திற்கு அனுமதி கேட்டு சென்றோம். ஆனால், அனுமதி மறுக்கப்படுகிறது. மறுபடியும் எழுதிக் கொடுக் கிறோம், கடைசி வரை அதை வைத்துக்கொண்டு சொல்கிறார்கள், நீங்கள் இந்தப் போராட்டம் நடத்தக்கூடாது என்று மீண்டும், மறுபடியும் இன்ன தேதியில் போராட்டம் நடத்த எழுதிக் கொடுத்துக் கேட்கிறோம். மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் போராட்டம் நடத்துகிறோம் என்று சொல்லவில்லை. அண்ணா ஸ்டேடியம் முன் உண்ணாவிரதம் நடத்த கேட்கவில்லை, ஏனென்றால் பொதுமக்களுக்கு போக்குவரத்து இடையூறு கொடுப்பது நம் நோக்கம் அல்ல, நகராட்சி அலுவலகம் முன் நடத்த கேட்க வில்லை.

நாங்கள் வசிக்கிற அருந்ததியர் தெருவில் வைத்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவே அனுமதி கேட்கிறோம், இதில் யாருக்காவது ஆட்சியேபனை இருக்கிறதா அல்லது யாருக் காவது இடையூறு இருக்கிறதா?

நான் சாப்பிடாமல் இருக்கும் போராட் டத்தால் யாருக்காவது இடையூறு இருக்கின் றதா? நான் சாப்பிடாமல் இருக்கும் உண்ணா விரதப் போராட்டம் மகாத்மா காந்தியின் வழியில் நடந்த போராட்டம் யாரை எதிர்த்து நடத்தினார்? ஆங்கிலேயர்களை எதிர்த்து நடத்தினார். அந்த ஆங்கிலேயர்களே அனுமதி கொடுத்தார்கள். காந்திக்கு உண்ணாவிரதப் போராட்டம் நடத்த தன்னை எதிர்த்துதான் காந்தி போராட்டம் நடத்துகிறார் என்று தெரிந்து ஆங்கிலேயர்களே அனுமதி கொடுத்தார்கள்.

ஆனால், நாம் இப்போது இருந்துக் கொண்டிருக்கும் அரசு யாருடையது?

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுடைய அரசு. நம்ம ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுத்த அரசு. திமுக என்பது யாருடையது கட்சி? ஆரம்பத்திலேயே 6% இட ஒதுக்கீடு கொடுத்த கருணாநிதியின் மகனுடைய அரசு.

இந்த அரசுக்கு நாம் கொடுத்த கோரிக்கை என்னது? மிகவும் எளிய கோரிக்கை. நான் தங்கியிருக்கும் பகுதி மிகவும் பின் தங்கியுள்ளது, எந்த முற்போக்கு நடவடிக்கையும் நாங்கள் செய்ய முடியவில்லை. சாக்கடை வழிந்து சுகாதார சீர்கேடாக இருக்கிறது, எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை, எனவே எங்களுக்கு இந்த இடத்தில் பட்டா போட்டு தாருங்கள் என்று கேட்டு உண்ணாவிரதப் போராட்டம் நடத்த அனுமதி வேண்டும், இதற்கு அனுமதி தர வடசேரி காவல்நிலையம் மறுக்கிறது, புறக்கணிக்கிறது.

சரி என்ன பண்றது என்று, மதுரை உயர்நீதி மன்ற கிளையை நாடி செல்கிறோம், ஒரு மனுவை கொடுக்கிறோம், ஐயா, இப்படி உண்ணாவிரதப் போராட்டம் நடத்த அனுமதி வேண்டும் என்று அந்த மனு ஒரு வருட காலம் ஆகியும் இன்னும் (Pendin) கிடப்பிலே கிடக்கிறது.

சென்ற ஆண்டு, காந்தி பிறந்தநாளில் அக்டோபர்-2இல் மீண்டும் உண்ணாவிரதத்திற்கு அனுமதி கேட்கிறோம், முதல்நாள் வரை தருகிறோம், தருகிறோம் என்று கூறி, வடசேரி Station Inspector திருமுருகன் DSP, Station இன்ஜார்ஜ் எல்லோரும் கடைசி வரை அனுமதி தராமலே ஏமாற்றினார்கள்.

அப்போது நாங்கள் என்ன செய்தோம், தடையை மீறி உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவோம்னு அறிவித்தோம். உடனே காவல்துறை நம்மை அடித்தது, அடித்ததும் நாங்கள் என்ன செய்தோம், பஸ் மரியல் செய்தோம். இப்ப காவல்துறை என்ன செய்தது பஸ்ஸை அவர்களே எரித்துவிட்டு, நம்ம பெண்களை மானபங்கம் செய்துவிட்டு, நம்மீது வழக்கும் போட்டது.

இதற்கு முன்னால் நமது கால்கள் காவல் நிலையத்திற்கோ, நீதிமன்றத்திற்கோ சென்று இருக்கிறதா என்றால், இல்லை எதற்காகவும் அங்கு நாம் சென்றதில்லை.

நிழலுக்காகவும், மழைக்காகவும்கூட அந்த பக்கம் நாம் ஒதுங்கியது கிடையாது. காரணம் பயம். இந்த பயத்தின் காரணத்தினால்தான் "மலம் அல்லும் தொழில் நம்மீது சுமத்தப்பட்டது. இந்த பயத்தின் காரணத்தால்தான் துப்பரவு பணியும் நம்மீது சுமத்தப்பட்டது. இந்த பயத்தின் உச்சத்தில் இருக்கும் ஒரே சமூகம் நம் சமூகம்தான்.

இப்படி பயங்கொல்லிகளான நம்மை அடித்து, பயந்த சமூகமான நம்மீது, பஸ்ஸை அவர்களே எரித்து, பெண்களை மானபங்கம் செய்து வழக்கை நம்மீது திசை திருப்பி போடப் படுகிறது. (இது 2023 அக்டோபர்-2ந் தேதி நடந்தது)

இப்ப பிப்ரவரி 2024, 15ஆம் தேதி மீண்டும் போய் அனுமதி கேட்கிறோம்.

நாம் கேட்பது என்னவென்றால், நீங்கள் எல்லோருக்கும் அனுமதி கொடுக்கின்ற, அண்ணா ஸ்டேடியம் முன்பு போராட்டம் நடத்த, ஆனால் நாங்கள் எங்க பகுதியில் போராட்டம் நடத்தத்தானே அனுமதி கேட்கிறோம். எங்களுக்கு மட்டும் அனுமதி தராமல், எங்கள் குரல்வளை மட்டும் நெறிக்கப்படுவது ஏன் தெரியுமா? காரணம் என்ன? நாம் 'சக்கிலிய' சாதியில் இருப்பதுதான். நாம் இந்த 'இந்து' மதத்தில் 'சக்கிலியர்'களாக அடிமைகளாக இருக்கும் வரை நம் மனுக்கள் நிராகரிக்கப்படவே செய்யும்.

அதேநேரம் திமுக அரசை எதிர்த்து நடத்தும் போராட்டத்திற்கு அனுமதி கொடுக்கப் படுகிறது.

நம்முடைய போராட்டம் மட்டும் ஏன் நிராகரிக்கப்படுகிறது? நாம் போராட்டம் நடத்தினால் மோடி அரசு கவிழ்ந்தா போய்விடும்?

இல்லை நாமும் 'சக்கிலியர்' சாதியில் இருக்கும் வரை இதுதான் நிலை. நாம் என்ன தீவிரவாத செயல்களையா செய்யப்போ கிறோம்? இல்லை, இல்லை, இந்த ஹிந்து மதத்தில் அடிமையிலும் அடிமையான சக்கிலியராக இருக்கும் வரை நம் மனுக்கள் நிராகரிக்கப்படவே செய்யும்.

இந்த கோரிக்கையை நிராகரித்துவிட்டு வடசேரி காவல் நிலையத்தில் நம்மை பார்த்து என்ன சொல்கிறார்கள் தெரியுமா? இந்த மக்கள் சும்மா (கம்முன்னு)தான் இருக்கிறார்கள். திருநெல்வேலியில் இருந்து ஒரு 4 பேர் வந்து (பசங்க) இவர்களை துண்டிவிட்டு சொல்கிறார்கள்.

இதுவா நிஜம் நாம வாழ வழி இல்லை. அது துருவங்குடி. அங்கே Municipality கிடையாது. Municipality வரும் முன்னே நான் அங்கே குடி இருக்கிறேன். எனக்கு பட்டா கொடுன்னு கேட்டா உங்களுக்கு கஷ்டமா இருக்கா?

அது என்ன அவ்வளவு பெரிய தீர்க்க முடியாத பிரச்சனையா? நம்ம போய் பேச்சு வார்த்தை நடத்துகிறோம். நகராட்சி ஆணையர் சொல்கிறார்.

நான் உங்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டித் தரனே், அதனால் உங்க தனி குடியிருப்புகளுக்கு மனைப்பட்டா கேட்காதீங்கன்னு.

சென்ற 2023 பொங்கல் அன்று நம்ம பகுதியில் ஒரு நிகழ்ச்சி, அந்த நிகழ்ச்சிக்கு, மாநகராட்சி மேயர் வருகிறார். அவர் நம்ம கட்சிக்காரர். நம்ம போட்ட ஓட்ல ஜெயித் தேன்னு அவர்தான் சொன்னார் அவர்தான் பொங்கலை வைக்க வந்திருக்கிறார். அவரிடம் நம்ம மக்கள் மனு கொடுக்கிறாங்க மனைபட்டா கொடுங்கன்னு, அதை அவர் வாங்கவில்லை. உடனே நிராகரிக்கிறார். இந்த இடத்தை விட்டு உங்களை நிமிஷத்திலே காலிபன்னிடுவேன் சொல்றார்.

மக்களுக்கு என்னடா! இது நம்ம ஓட்ல ஜெயித்தேன்னு சொல்லிட்டு இப்படி பேசுறா ருன்னு. இடம் தான்னு 5 செண்ட்டு, 10 செண்ட்டுன்னு கேட்கல, இருக்கிற இடத்துக்கு மனைப்பட்டா கேட்கிறோம்.

மகேஷ் (மேயர்) உடைய அப்பன் வீட்டு இடத்தை கேட்கல்ல, காலி செய்து பார்க் கட்டும், நம்முடைய எழுச்சி என்ன, வீழச்சி என்ன என்பதை அவர் பார்க்கட்டும்.

அவர் மட்டுமல்ல, இங்குள்ள அதிகாரிகள் எல்லோருமே பட்டா கொடுக்கக்கூடாது என்ற ஒரே முடிவில் இருக்கிறார்கள்.

நாங்கள் என்ன செய்தோம். சென்னை "தாழ்த் தப்பட்ட பழங்குடியினர் ஆணையத்தில்" கொண்டுபோய் ஒரு மனு-வை கொடுத்தோம். அந்த மனுவில் மாவட்ட நிர்வாகமும், மாநகராட்சி நிர்வாகமும் பதில் சொல்ல வேண்டும் என்று ஆணையம் பதில் அனுப்பியது.

அதற்கு நகராட்சி நிர்வாகம் பதில் கொடுத் திருக்கிறது, எந்த காரணம் கொண்டும் இவர் களுக்கு பட்டா கொடுக்கவே முடியாது என்று.

சரி, நகராட்சி இப்படி சொல்வதற்கு நகராட்சிக்கு தகுதி இருக்கிறதா என்று பார்த்தால், நகராட்சிக்கு தகுதி கிடையாது, ஏன் என்றால் நான் குடிவந்த பிறகுதான் நகராட்சியே வருகிறது. நானும் அங்குதான் வேலை பார்க்கிறேன்.

நகராட்சி ஒரு வீடு கட்டி தருகிறது. அது என் வீடு, அவங்க வீடு இல்லை அவங்க வீடா இருந்தால் Current Bill வரும், வாடகை வரும். ஆனால் இப்ப எல்லா வரியும் போடுகிறது. காரணம் எப்படி ஏமாற்றுகிறது என்று பார்த்தால் இந்து மதத்தில் சக்கிலிய ஜாதியில் இருப்பதால், உங்களை எப்படி ஏமாற்றினாலும் கேட்க யாரும் வரமாட்டார்கள் என்பதுதான். அந்த காலம் எல்லாம் மலை ஏறிப்போச்சி, எங்களை ஏமாற்றி விடலாம். பட்டா தராமல் இந்த இடத்தில் இருந்து விரட்டி விடலாம் என்று இந்த அரசு நினைத்தால், கனவு கண்டால், மனப்பால் குடித்தால், ஈ. காக்காவை விரட்டுவதுபோல் விரட்டிவிடலாம் என்று நினைத்தால், இந்த அரசும், அரசு அதிகாரிகளும் மனப்பால் குடிக்கிறார்கள் அது ஒருபோதும் நடக்கவே நடக்காது என்று இந்த தருணத்தில் சொல்லிக் கொள்கிறேன். ஏனென்றால் எங்களிடத்தில் (Record) இருக்கிறது. ஒரு Government எங்களுக்கு எழுதி கொடுத்து இருக்கிறது. பட்டா போட்டு தரேன், வீடு கட்டி தரேன்னு கடிதம் தந்து இருக்கிறது. We have a record.

காக்கை கூட்டத்தை விரட்டுவதுபோல் எங்களை விரட்ட முடியாது என்று இத்தரு ணத்தில் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள் கிறேன்.

சென்னை தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் ஆணையம் பதில் சொன்னபோது, இந்த மாநகராட்சி மறுத்தது, அதே நேரத்தில் இங்கு வடசேரியில், "சித்திரை ராஜபுரம்" என்று இடம் உள்ளது. அதை மாநகராட்சி தனது இடம் என்று உரிமை கொண்டாடி வருவாய் துறையிடம் இருந்து "பட்டா" வாங்கி கொடுத்து இருக்கிறது. அதே நேரத்தில் எங்கள் மனு மட்டும் நிராகரிக்கப்படுகிறது.

"சித்திரை ராஜபுரம்"ன்னு எப்ப பெயர் வைக்கிறார்கள். இங்கு மாநகராட்சி வந்தபிறகு, கேரளா "சித்திரை திருநாள், ராஜாவின் பெயர் வைத்து "சித்திரை ராஜபுரம்"ன்னு பெயர் வருது.

இந்த ஊருக்கு பட்டா கொடுக்க Order ஆகும்போது, கிருஷ்ணன் கோவில் அருந்ததியர் தெருவுக்கும் Proceeding போயிருக்கிறது. ஆனால் இன்று வரை அது Pending-ல இருக்கிறது.


vaigarai velicham official

காலகாலத்திலே எங்கள் இடத்தின் பட்டாவை தராமல், இப்போ நிலத்தின் விலை மதிப்பு ஏறிவிட்டது, இங்கிருந்து காலி செய் என்று சொன்னால் அது எந்த விதத்தில் நியாயம்?

இந்த அரசு அதிகாரிகள் எல்லாம் வெறும் மோசடிப் பேர்வழிகள். எங்கள் அன்பு தலைவர் "வெண்மயி"போய் பேசுகிறார், அவரிடம் இவர்கள் நாங்கள் உங்களை Vacate பண்ண மாட்டோம் என்று சொல்லி அனுப்புகிறார்கள்.

நீங்க யாரு எங்களை Vacate பன்றதுக்கு "பட்டா"வை கொடு நாம் கேட்கும் கோரிக்கை என்ன பட்டாவைதான் தவிர, Vacate அல்ல. எங்கள் மூதாதையர்களை போல் அஞ்சி நடுங்கி இருக்கும் காலமெல்லாம் மாறிப்போச்சி, இந்த ஜனநாயக நாட்டில் எங்கள் உரிமைக்காக எப்படி போராடானும் எங்களுக்குத் தெரியும். Vacate பற்றிய பயமும் இல்லை, ஜனநாயக நாட்டில் உங்கள் உரிமையைக் கேட்டு, உங்களை எதிர்த்து எப்படி வாழனுன்னு எங்களுக்குத் தெரியும். எங்கள் மூதாதையர் காலத்தில் அவர்கள் அடிமையாக பயந்து வாழ்ந்ததுபோல் நாங்கள் வாழமுடியாது.

இந்த நாட்டில் அரசியலில் மாற்றங்களை நிகழ்த்தப்போவது அருந்தியர்கள்தான் என்ற காலம் வரப்போகிறது. காலம் மாறிவிட்டது என்பதை அறிந்துகொள். சும்மா எங்கள் பாட்டன் பூட்டனைப் பார்த்ததுபோல் எங்களைப் பார்க்காதே எங்கள் தலைவர் வெண்மயி போய் கேட்கும் போது, மேயர் சொல்கிறார், நாங்கள் உங்களை Vacate பண்ணுவோம்-ன்னு நாங்கள் உங்களிடம் சித்திரை ராஜபுரத்திற்கு பட்டா கொடுத்ததுபோல் எங்களுக்கும் தான்னு கேட்கிறோம். இல்லை முன்பு இந்த இடம் விலைமதிப்பு இல்லாமல் இருந்தது, இப்ப Heart of the City ஆயிட்டுன்னு.

Heart of City ஆனா என்ன, நாங்க இருக்கக்கூடாதா? எப்படியோ இருந்த இடத்தை நாங்க திருத்தி சரி செய்து இருக்கிறோம். எங்களை மீண்டும் சாக்கடை பகுதிக்குதான் அனுப்புவீர்களா? சாக்கடை பகுதிக்கு செல்ல நாங்கள் என்ன நாய்களா? அல்லது பன்றிகளா?

ஒரு காட்டை திருத்தி, அதை நிலமாக்கி அதில் விழுந்து, பயிர் செய்து, அந்த இடத்திற்கு பட்டா கேட்டால், பட்டா கொடுக்கல்ல. மனிதன் வசிக்க முடியாமல் கிடந்த இடத்தை எங்கள் மூதாதையர்கள் வசிப்பிடமாக மாற்றி இவ்வளவு அழகாக ஆக்கிய பிறகு, எங்களை விரட்டினால், ஏன் நான் கேட்கிறேன். Heart of City-ல நீங்க மட்டும்தான் வாழலாமா? நாங்க வாழக்கூடாதா? இவ்வளவு ஆண்டுகளாக நாங்கள் வாழ்ந்து இருக்கிறோமே, மனிதன் வசிக்கும் இடமாக மாற்றி இருக்கிறோமே,

"குடியிருந்தவனுக்கு இடம் சொந்தம், உழுதவனுக்கு நிலம் சொந்தம்" என்பார்களே,

நாங்கள் 300 ஆண்டுகளாக குடியிருக்கிறோமே எங்களுக்கு அந்த இடம் சொந்தம் இல்லையா? அந்த சட்ட உரிமையை எங்களுக்கு மறுக்கிறியா? இதை எல்லாம் நாம் கேட்போமா? கேட்கக் கூடாதா? இப்படிப்பட்ட உரிமை எங்களுக்கு இருக்கும்போது, அதை மறுத்தால் இது என்ன? ஜனநாயகம்?

இந்த உரிமையைக் கேட்டு ஒரு அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடத்த அனுமதி கேட்டால் வடசேரி காவல்நிலைய ஜாதி வெறிப்பிடித்த காவலர்கள் அனுமதி தர மறுக்கிறார்களே அதற்கு என்ன காரணம்?

இந்த மாவட்ட நிர்வாகம் இதைக் கேட்காதா? தொட்ட 90-க்கும் நான் High Court போய்தான் மனு கொடுத்து அனுமதி வாங்கி வரணுமா? இங்கே நடக்கிறதே கண்ட கண்டதற்கெல்லாம் ஆர்ப்பாட்டம், போராட்டம்னு அவங்களுக்கெல்லாம் எப்படி அனுமதி கொடுக்கிறது? அப்ப அவர்களுக்கு ஒரு நீதி, எங்களுக்கு ஒரு நீதியா? எங்களுக்கு இழைக்கப்படுவது அநீதி.

இந்த அநீதியை எப்ப வரை நீ எங்களுக்கு செய்வேன்னா, நாங்கள் "சக்கிலியர்களாக" வாழும் வரைதான்.

நாங்கள் எப்ப இந்த இந்து மதத்தில் இருந்து சக்கியப் பட்டத்தை வேரறுத்து விட்டு வெளியே வருகிறோமோ அதன்பிறகு எங்களை ஒன்னும் செய்ய முடியாது.

இந்த வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணிக்கிறோம் என்று முடிவு செய்து இருக்கிறோமா, நீ என்ன செய்வ? ஓட்டு கேட்டு வருவேனா? அல்லது போடா உங்கள்

ஓட்டு வேண்டாம் என்று சொல்லி விடுவாயா?

இந்த ஜனநாயகத்தின் உரிமையை எப்படி காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும்.

இந்த இந்து மதத்தில் சக்கிலியனாக பிறந்தது என் தவறு, ஒரு நொடியில் நான் இந்த ஜாதியில் இருக்க மாட்டேன்னு இதைவிட்டு வெளியேறும் உரிமை எனக்கு இருக்கிறது. நான் இறக்கும்போது "சக்கிலியனாக இந்த இந்து மதத்தில் இறக்க மாட்டேன்னு சொல்ற உரிமை எனக்கு இருக்கிறது. ஜாக்கிரதை.

ஒரே நொடியில் என்னை அணைத்துக் கொள்ள இந்த "இஸ்லாம்" இருக்கிறது.

இப்ப வரை என்னை சக்கிலியன்னு சொல்வான், ஒரு நொடியில் இஸ்லாத்தில் சேர்ந்து இந்த கலிமாவை சொல்லிவிட்டால் அடுத்த நொடிநான் "பாய்" அதன்பிறகு நீங்கள் எல்லாம் "பாய் அம்மா" ஒரு பயலும் ஒன்னும் பண்ண முடியாது. இப்ப உங்களிடம் பேசுவது போல் அதன்பிறகு உங்களிடம் பேச மாட்டார்கள்.

ஒரு சக்கிலியனை தொட்டால் இன்னொரு சக்கிலியன் கேட்க மாட்டான். ஆனால், ஒரு "பாயை" தொட்டால், உலகம் முழுவதும் இருந்து பாய் வருவான் கேட்க.

இந்த ஜனநாயக நாடடில் ஒரு போராட்டம் நடத்த எங்களுக்கு உரிமை இல்லையா?

நீங்கள் கோவில் செல்வதும், சாமி கும்பிடுவதும் வரிசையாக செய்துக்கொண்டு இருக்கிறீர்கள். இதுதான் அரசு அதிகாரிகளை, உங்களை தரக்குறைவாக நடத்த காரணமாக இருக்கிறது.

நீங்கள் அடிமையாக இருப்பதை பெருமை யாக நினைப்பதால், உங்களை அடிமையாகவே வைத்திருக்கிறார்கள். நீங்கள் மெல்ல மெல்ல இதைவிட்டு, வெளியே வர வேண்டும். இந்த இடத்தை என் வாரிசு தாரர்களுக்கு உரிமை ஆக்குவேன்னு நினைங்கே, அதற்காக எவ்வளவு பெரிய தியாகத்தையும் செய்வேன்னு நான் உறுதியாக இருக்கிறேன்னு உறுதி எடுங்கள். உங்களை யாரும் வெல்ல முடியாது.

அந்த ஊரார் மீது வைத்திருந்த பயத்தில் அப்படியே இருந்தால், உங்களை, எளிதாக ஊரை விட்டு காலி செய்து விடுவார்கள்.

மீண்டும், மீண்டும் உங்களிடம் சொல் கிறேன்... உங்கள் வாரிசுகள் வளரும்போது இந்த இடத்தின் விலை மதிப்பு இன்னும் ஜாஸ்தி யாகும். அதற்கு முன் உங்களை விரட்டனும் அதுவே அவர்களின் நோக்கம். இதுதான் அரசின் முடிவு.

இது யாருடைய அரசு. இது நம்முடைய அரசு. நமது அரசு அதிகாரிகளை தாண்டி நம் கோரிக்கையை நம் அரசிடம் கொண்டு செல்லும் எங்களுடைய அன்புத்தலைவர் உதயநிதியிடம் இந்த கோரிக்கையை கொண்டு செல்லனும், விட மாட்டார்கள். என் தாயுள்ளம் படைத்த என் தலைவரிடம் எங்கள் கோரிக்கையை போய் சொல்லிவிட்டால் நிமிட நேரம் போதும் எங்களுக்கு பட்டா கொடுத்து விடுவார்கள் என் தலைவரிடம் என் கோரிக்கையை கொண்டு செல்ல இந்த அதிகாரிகள் விட மாட்டார்கள். இதுதான் நமக்கிருக்கும் பிரச்சனை.

இதை செய்ய விடாமல் தடுக்கும் இந்த அதிகாரிகளுக்கு எதிராக நாம் என்னவெல்லாம் செய்யலாம்?

நாம் முஸ்லிம்களாக மாறிவிடுவோம் என்று சொல்லலாம். அந்த அதிகாரிகளால் நம்மை தடுக்க முடியாது.

நாடாளுமன்றத் தேர்தலை புறக்கணிப் போம்னு சொல்றோம், அப்ப இவர்களுக்கு கேள்வி வரும், இவர்கள் ஏன் தேர்தலை புறக் கணித்தார்கள் என்று, அப்ப பதில் சொல்லட்டும், பட்டா கேட்டார்கள், போராட்டத்திற்கு அனுமதி கேட்டார்கள் எதுவும் நாங்கள் கொடுக்கவில்லை என்று. அப்ப நீ சொல்வே யில்ல, ஆக நாம் புறக்கணிப்படுவதற்கு ஒரே காரணம் நமது ஜாதி. இதற்கு காரணமாக இருந்த இந்து மதத்தை புறக்கணிக்க நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

இதற்கு முன்னால் சகோதரர் வாசித்த குர்ஆன் வசனம் "மனிதர்களே உங்களைப் படைத்த உங்கள் இறைவனை பயந்து கொள்ளுங்கள். அவன் உங்களை ஒரே ஆத்மாவிலிருந்தே படைத்தான். அவரிலிருந்து



vaigarai velicham official




அவன் மனைவியைப் படைத்தான், அதிலிருந்து உங்களைப் பல்கிப் பெருகச் செய்தான். எனவே உங்களை படைத்த இறைவனை அஞ்சிக்கொள்.

நீங்கள் மேலும் இரத்தப் கலப்புடைய உறவுகளைப் பேணிக் கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களை கண்காணிப்பவனாகவே இருக்கிறான்.

இன்றைக்கு இந்து மதம் எதை கண்டு பயப்படுகிறது என்று பார்த்தால், இஸ்லாத்தை கண்டே பயப்படுகிறது.

ஆகவே, பெரியார் சொன்னார், இஸ்லாமே அருமருந்து, நீங்கள் மதம் மாற வேணடும் என்று. ஒரே நொடியில் உங்கள் இழிவு ஒழிந்துவிடும், நீங்கள் எந்த சட்டையும் போட வேண்டாம். யாருக்கும் அஞ்ச வேண்டாம்.

மேல் மட்டத்தில் பாப்பான் ஒழிஞ்சி போனான் என்றால் இந்து மதம் காலியாகிவிடும். கீழ் மட்டத்தில் தாழ்த்தப்பட்டவன் இல்லாமல் போனால் இந்து மதம் இல்லாமல் போய்விடும்.

இந்த இந்து மதம் நிலைத்திருக்கும் காரணம், நாமெல்லாம் அதில் ஏறி உட்கார்ந்து இருக்கிறோம். நாமெல்லாம் அதிலிருந்து வெளி யேறிவிட்டால் இந்து மதமும் காணாமல் போய்விடும். நம்மிடம் இருக்கும் இழிவும் நம்மை விட்டுச் சென்றுவிடும்.

சாதி இழிவு நமக்கு வேண்டாம் என்றால், நாம் இந்து மதத்திலிருந்து வெளியேறனும்.

இந்த முஸ்லிம்களை பாருங்கள், இவர்கள் என்ன அரபுகளின் பிள்ளைகளோ? இல்லை நம்மைப் போன்றிலிருந்து மத மாற்றத்தை ஏற்றுக்கொண்டு, இன்று எந்த ஜாதியும் இல்லாமல் வாழ்கிறார்கள். இவர்கள் 'பாய்' அவ்வளவுதான். இவர்கள் இஸ்லாத்திற்குள்ளே இருந்துவிட்டு ஜாதியைப் பின்பற்றினால் இஸ்லாமே இவர்களை புறக்கணித்துவிடும்.

இவர்கள் இந்து மதத்தில் எந்த, ஜாதியில் இருந்து இஸ்லாத்திற்குள் வந்தார்கள் என்பதே இவர்களுக்குத் தெரியாது. அதுதான் இஸ்லாம். அதனால்தான் பாப்பான் இஸ்லாத்தை எதிர்க்கிறான். பாப்பான் எதிர்க்கனும், எதிர்த்து சாகனும் அதுக்காகவே நாம இந்து மதத்தை விட்டுவிட்டு இஸ்லாத்திற்கு போகனும். இதனால் நம்மை பிடித்த சாதி இழிவு ஒரு நொடியில் நம்மை விட்டு நீங்கிவிடும்.

நம்முடைய பிதாமகன் அறிவொளி அம்பேத்கர் என்ன சொல்கிறார் என்றால்

Ambedkar Discrible buthism has a devoted against the diserimanatry hindu social order. Equality sacrifity or not idea that follows from the french vevolution, But the esence of the master budha.

"புத்தனுடைய அறிவுறுத்தலில் இருந்துதான் நாங்கள் இந்த விடுதலை, சமத்துவம், சகோத ரத்துவம் போன்ற கோட்பாடுகளை எடுத்துக் கொண்டோமே தவிர, French புரட்சியில் இருந்து எடுத்துக்கொள்ளவில்லை என்று அம்பேத்கர் சொல்லியிருக்கிறார்.

நமக்கு விடுதலை வேண்டும், ஜாதியில் இருந்து விடுதலை வேண்டும். ஜாதியில் இருந்து Equality வேண்டும். ஜாதியில் இருந்து சகோத ரத்துவம் வேண்டும் என்று சொன்னால் நாம் புத்த மதத்தை தழுவ வேண்டும் என்று அம்பேத்கர் சொன்னார்.

கெடு வாய்ப்பாக புத்த மதமும் ஹிந்து மதத்தில் இருப்பதால் நம்மால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நாம் பெரியார் சொல்வதுபோல் இஸ்லாத்தை ஏற்றுக்கொள் வதால் நம் இழிவு உடைக்கப்படும். நம்மீது சுமத்தப்படும் தீண்டாமை ஒரு நொடியில் ஒழிந்துபோகும். இந்த மாதிரியான அரசு புறக்கணிப்புகள் நம்மிடம் வராது என்று சொல்லி, இந்த நிகழ்விலே எனக்கு வாய்ப்பளித்த தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்-ன் தோழர்களுக்கும், இந்நிகழ்வை ஏற்பாடு செய்த தோழர் அப்துல் பாசித் உட்பட தோழர்களுக்கும் இந்நிகழ்விலே கலந்து பங்கெடுத்துகொண்டு சுற்றங்களுக்கும், நம்புகளுக்கும், உறவுகளுக்கும் இந்நேரத்திலே நான் சார்ந்திருக்கும் திராவிட தமிழர் கட்சியினர் சார்பாக என் நெஞ்சார்ந்த வணக்கங்களை சொல்லி வாய்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

# முதுமைக்கு முதல் மரியாதை



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

**அவர்** ஒரு மாபெரும் இலக்கிய அனாதையாக ஒரு ரயிலடியிலே செத்துப்போகிறார். உட்கார்ந்த நிலையிலேயே அவர் உயிர் பிரிந்து போயிருக்கிறது.

அவர் சட்டைப் பையிலே ஒரு சிறு புத்தகம் இருந்தது. அது "முகம்மத் நபியின் பொன் மொழிகள் கடைசி நேரத்திலேயும் அதைக் கையிலே வைத்திருந்த அந்த மேதை லியோ டால்ஸ்டாய்.

"இஸ்லாம்" என்றால் பணிந்து நடப்பது என்பது பொருள். அதிலிருந்து பிறந்ததுதான் 'முஸ்லிம்' என்கிற வார்த்தை.

'முஸ்லிம்' என்றால் 'பணிந்து நடக்கிறவர்' என்று பொருள்.

ஆகவே நல்ல பண்புகளை போதிக்கின்ற ஒரு மார்க்கம் இஸ்லாம் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

நல்ல பண்புகள் என்னென்ன? என்று கேட்கிறார் ஒருவர்.

அதற்கு நபிகள் நாயகம் பதில் சொல்கிறார்.

ஒற்றுமையுடன் இருப்பது.

நல்ல காரியங்கள் செய்வது.

தர்மம் செய்வது.

சலாம் சொல்ல முந்திக்கொள்வது. நோயாளிகளைச் சென்று காண்பது.

நல்லவரா, கெட்டவரா என்று பாராமல் பிரேத ஊர்வலத்தில் கலந்துகொள்வது.

முஸ்லிமா. முஸ்லிம் அல்லாதவரா என்று பாராமல் அயலாருடன் அன்போடு நடந்து

முதியவர்களுக்கு மரியாதை செய்வது,

மன்னிப்பது, சண்டை சச்சரவுதளைத் தீர்த்து வைப்பது.

கோபத்தை அடக்குவது விலக்கப்பட்டதைத் தவிர்ப்பது.

உறவினர்களிடம் அன்பாய் இருப்பது. கர்வம் கொள்ளாமல் இருப்பது

இத்தகைய நற்பண்புகளோடு வாழ்ந்தவர்கள். தாம் இஸ்லாமியப் பெரியவர்கள்.

**அலியார்**

இஸ்லாமியப் பேரரசின் நான்காவது குடியரகத் தலைவர் (கலீஃபா);

நபிநாதரின் மகள் பாத்திமா அவர்களின் கணவர். அவர் ஒரு நாள் பள்ளிவாசலுக்குக் கொஞ்சம் காலதாமதமாக வந்து சேர்ந்தார். 'தாமதத்துக்கு காரணம்?' என்று நபிகள் நாயகம் கேட்கிறார்.

"நான் பள்ளிவாசலுக்கு நடந்து வந்தபோது எனக்கு முன்னால் ஒரு கிறிஸ்தவப் பெரியவர் நடந்துவந்து கொண்டிருந்தார்.

முதுமை காரணமாக அவரால் வேகமாக நடக்க முடியவில்லை.

முதுமைக்கு மரியாதை கொடுக்கும் விதமாக நான் அவர் பின்னாலேயே நடந்து வந்தேன். அது தான் சற்றுத் தாமதமாகிவிட்டது...!". நபிகள் நாயகம் அவருக்கு ஆசி கூறி பாராட்டி வாழ்த்தினார்கள்

முதுமைக்கு மரியாதை கொடுப்பது இஸ்லாமிய மரபு.

எல்லா மதங்களுமே மனிதர்களை நல்வழிப் படுத்துவதற்காக ஏற்பட்டவைதாம்.



vaigarai velicham official

பாதையைக் குறை சொல்ல முடியாது.

அதிலே பயணம் செய்கிறவர்கள் எப்படி என்பதுதான் முக்கியம்.

மூத்தா என்கிற இடத்திலே ஒரு போர் நடக்கிறது. போருக்குப் புறப்படுகிற வீரர்களைப் பார்த்து மூன்று அறிவுரைகளைச் சொல்லுகிறார் நபிகள் நாயகம்.

முதல் அறிவுரை: வயதானவர்கள் - பெண்கள் - குழந்தைகள் - இவர்களைத் தாக்கிவிடக்கூடாது.

இரண்டாவது அறிவுரை: நிழல் தரக்கூடிய மரங்களையும், பழம் தரக்கூடிய மரங்களையும் எக்காரணம் கொண்டும் வெட்டிவிடக் கூடாது.

மூன்றாவது அறிவுரை: பிற மதத்தவருடைய வழிபாட்டு இடங்களுக்கும், வழிபாட்டு நேரங்களுக்கும் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது.

அமர்நாத் குகைக் கோயிலில் சிவபெருமானைப் பார்க்க ஆயிரக்கணக்கான இந்து பக்தர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். இயற்கையின் சீற்றம் காரணமாகப் போகிற வழியிலேயே பலர் மடிந்து வீழ்கிறார்கள். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர்களை உடனடியாக வீட்டுக்குக் கொண்டு வந்து உணவு உடை - கம்பளிப்போர்வை கொடுத்து அவர்களைக் காப்பாற்றியவர்கள்

முஸ்லிம்கள். எந்த நேரமும் இல்லத்தின் கதவுகளைத் திறந்தே வைத்திருந்தார்கள். மனிதாபிமானத்துக்கு முன்னால் மதாபி மானம் பெரிதல்ல என்பது அங்கே நிரூபணமாயிற்று.

குஜராத் பூகம்பம். இடிபாடுகளில் சிக்கி இறந்துபோனார்கள் ஏராளமானவர்கள்.

உயிருக்குப் போராடியவர்களைக் காப்பாற்றுவதில் மும்முரமாகச் செயல்பட்டவர்கள் ஆர்.எஸ்.எஸ். இளைஞர்கள். அவர்களின் தோள்களிலே கிடந்தவர்கள் முஸ்லிம்கள்.

மதாபிமானம் பெரிதல்ல என்பது மறுபடியும் ஒரு முறை நிரூபணமாயிற்று.

**கபீர்தாசர்**

இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபட்டார்.

என்ன நடந்தது?

அவரை இந்துக்களும் திட்டினார்கள். முஸ்லிம்களும் திட்டினார்கள்.


அவர் சிரித்தார்.

"என்னய்யா சிரிக்கிறீர்கள்?'' - என்றார்கள். "என்னைத் திட்டுவதில் நீங்கள் ஒற்றுமையாக இருக்கிறீர்களே... அதனால்தான்!'' - என்றார்.

உண்மைதான்.

இந்த உலகத்தில் ஆயுதங்களால் காயப்படுத்திக் கொள்கிறவர்களைவிட வார்த்தைகளால் காயப்படுத்திக் கொள்கிறவர்கள் அதிகம்!

**- நன்றி தினமணி ஈகைப் பெருநாள் மலர்**


அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

"ஹஜ்" பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

16 ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குமு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி 21-1965 இல் கொலை செய்து விட்டார்கள்.

தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887

# மேட்டுப்பாளையத்தில் கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி








19.05.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10:30 மணியளவில் "தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம், மற்றும் வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம்" மேட்டுப்பாளையம் வட்டத்தின் ஏற்பாட்டில் கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பல ஆலோசனைகள் மாணவ மாணவிகளுக்கும் மற்றும் பெற்றோர்களுக்கும் வழங்கப்பட்டது.

குறிப்பாக சிறப்புரையாளரான "ஜாகிர் உசேன்" அவர்கள் மருத்துவத்துறை ஆசிரியர் துறை சட்டத்துறை போன்ற இன்னும் பல துறைகளுக்கான ஆலோசனைகளை விரிவாகவும் எளிமையாகவும் மாணவ மாணவியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் எடுத்துரைத்தார்.

தொழில்நுட்பத் துறையை பற்றியான வழிகாட்டுதல்களும் அதற்கான சந்தேகங் களுக்கும் , தொழில்நுட்பத் துறையின் எளிய வலிகளையும் விரிவாக சகோதரர் "ஹாமிம் ஷிமர்" அவர்கள் எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் 25க்கும் மேற்பட்ட மாணவர் மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# வடசேரியில்
# கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி








*02.06.2024* அன்று NVK முஸ்லிம் பள்ளிவாசல், வடசேரியல் வைத்து தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் மற்றும் NVK முஸ்லிம் ஜமாஅத் இணைந்து நடத்திய மாணவ, மாணவி மற்றும் பெற்றோர்களுக்கான கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது அல்ஹம்துலில்லாஹ். இதில் NVK முஸ்லிம் ஜமாஅத் தலைவர் தலைமை தாங்கினார், நாதிரா அஷ்ரஃபியா அவர்கள் கல்வியின் முக்கியத்துவம் குறித்து இஸ்லாம் கூறுவதென்ன என்ற தலைப்பில் உரையாற்றினார்கள், மேலும் கல்வி வழிகாட்டி என்ற தலைப்பில் மாணவ, மாணவிகளுக்கு தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் மதுரை நிர்வாகி ஜாகிர் உசைன் அவர்கள் உரையாற்றினார்கள். இதில் மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டு பயனடைந்தார்கள்

# ஃபாலஸ்தீன முஸ்லிம்கள்

## அகதிகளான வரலாறு

தொடர்...



மே மாத தொடர்ச்சி....

**டையர்யாசின் படுகொலை**

**பாலஸ்தீன் முஸ்லிம்களை அகதிகளாக்கிய குரூரம் நிறைந்த படுகொலை**

'மேனேச்சம் பிகின்' என்ற தீவிரவாதத்தின் தந்தை தனது 'இர்குன்' தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்களையும் யஷ்திக் ஷமீர் என்பவனின் "லெஹி" என்ற தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்களையும் அழைத்துக் கொண்டு ஜெரூசலம் செல்லும் வழியிலுள்ள டையர் யாசீன் என்ற கிராமத்தை நோக்கி நகர்ந்தான்.

டையர்யாசின் கிராமத்தைக் குறிவைத்து மிகவும் இரகசியமாகவே இந்தத் தீவிரவாதிகள் சென்று கொண்டிருந்தார்கள்.

1948 ஏப்ரல் திங்கள் ஒன்பதாம் நாள் (9.4.1948) காலையில் இந்தத் கிராமத்தை தாக்கிட திட்டமிட்டிருந்தார்கள். அதனால் ஏப்ரல் 8ஆம் நாள் நள்ளிரவுடையர் யாசீன் வந்தடைந்தார்கள்.

தாங்கள் வந்த ஊர்தியில், அரிவாள், வாள், நவீன துப்பாக்கிகள், கைகுண்டுகள் ஆகியவற்றை போதிய அளவில் ஏற்றிச் சென்றிருந்தனர்.

தாங்கள் அழைத்துச் சென்ற தீவிரவாதிகளில் சிலரை கிராமத்திற்குள் சென்று பதுங்கிக் கொள்ள வேண்டும் எனப் பணித்தனர்.

ஒன்பதாம் நாள் காலையில் இப்படிப் பதுங்கி இருப்பவர்கள் துப்பாக்கியால் சுட்டும், வெடிகுண்டுகளை வீசியும் கபளீகரங்களைச் செய்திட வேண்டும்.

இத்தனையையும் அவர்கள், நெடுஞ் சாலையைக் குறி வைத்துச் செய்திட வேண்டும். யாராவது நெடுஞ்சாலையில் என்ன நடக்கின்றது என்று கேட்டால், "சும்மா"போன யூதர்களை முஸ்லிம்கள் தாக்கியதாகக்



vaigarai velicham official

கூறிட வேண்டும். இந்தப் பொய்யைக் காரணங் காட்டியே முஸ்லிம்களைக் கொலை செய்திட வேண்டும்.

இந்தத் திட்டத்தின் படி காலையில் பஜர் தொழுகையை நிறைவேற்றிவிட்டு முஸ்லிம்கள் திரும்பும்போது துப்பாக்கிச் சப்தங்களும் வெடிகுண்டு ஓசைகளும் விண்ணைப் பிளந்தன. சற்று நேரத்தில் யூத தீவிரவாதிகள் டையர் கிராமத்திற்குள் புகுந்தனர். கண்ணில் கண்டவர்களையெல்லாம் சுட்டனர். வீதி யெல்லாம் முஸ்லிம்களின் பிணங்கள்.

**யாசீன்**

துப்பாக்கி சப்தம் கேட்டு வீடுகளில் இருந்தவர்கள் வீதியை எட்டிப்பார்த்தார்கள். தவறாமல் யூத தீவிரவாதிகளின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானார்கள்.

காலை 11 மணிக்கெல்லாம் கிராமவாசி களில் பெரும் பாலோர் கொலை செய்யப்பட்டு விட்டார்கள். கிராமமே நிசப்தமானது.

அந்நிலையில் கிராமவாசிகளில் எல்லோரும் கொலை செய்யப்பட்டிருக்கவில்லை. சில பெண்களும், குழந்தைகளும் வீடுகளிலும் இதரப் பதுங்குமிடங்களிலும் பதுங்கி இருந்தனர். அவர்கள் பெருமூச்சு விட்டால் கூட யூத தீவிரவாதி கள் நம்மை அடையாளங்கண்டு கொலை செய்து விடுவார்கள் என்பதை நன்றாக அறிவார்கள். அதனால் ஒதுங்கி ஒடுங்கிக் கிடந்தார்கள்.

வைகறை தொழுகைக்குச் சென்றிருந்தவர்கள் சிலர் தப்பித்து விட்டார்கள். அவர்கள் அன்று பாலஸ்தீனை விட்டு வெளியேறியவர்கள் தாம். பின்னர் இன்றளவும் பாலஸ்தீன் திரும்பவில்லை.

11மணி அளவில் டையர்யாசின் கிராமம் ஒருவித அமைதிக்கு ஆட்பட்டவுடன், மேனாச்சம் பிகின் தான் வெற்றிப் பெற்றதாக அறிவித்தான்.

தனது வெற்றியை ரோம் நாட்டவர்களின் வெற்றி என அறிவித்தான். ரோம் நாட்டவர்கள் தாங்கள் வெற்றி பெற்றால் எப்படி நடந்து கொள்வார்களோ அதேபோல் தானும் நடந்து கொள்ளப் போவதாக அறிவித்தான்.

ரோம் நாட்டவர்கள் தாங்கள் வெற்றிப் பெற்றால் தோற்றுப் போன படைவீரர்களை வாகனங்களில் ஏற்றி அல்லது கால்நடையாக வீதிகளில் ஊர்வலமாக வரச் செய்வார்கள். பின்னர் கொலைக் களத்தில் வைத்து அவர்களைக் கொலை செய்வார்கள்.

இதேபோல் தானும் டையர் யாசின் வெற்றியைக் கொண்டாடப் போவதாக அறிவித்தான். ஆனால் இங்கே தோற்றுப்போன படைவீரர்கள் இல்லை. இல்லங்களிலே சாவு முகத்தில் விநாடிகளைக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்த பெண்களும், குழந்தைகளும், வயது முதிர்ந்த ஆண்களுந்தான் இருந்தார்கள்.

**‘லெகி’**

மேனாச்சம் பிகின் இதர ‘இர்குன்’, தீவிரவாதிகளுடன் வீடுகளுக்குள் புகுந்தான். பெண்களையும் எஞ்சி இருந்த ஆண்களையும் இழுத்துவந்தான். நிர்வாணப் படுத்தினான். ஊர்திகளிலே ஏற்றினான். ஊர்வலமாக அழைத் துச் சென்றான். கர்ப்பிணிப் பெண்களைத் தனிமைப்படுத்தினான். தெருக்கோடியில் வைத்து அத்தனை பேரையும் கொலை செய்தான்.

இன்னும் சில யூத தீவிரவாதிகளை ஏவி கர்ப்பிணி பெண்களின் வயிறுகளைப் பிளந்து குழந்தைகளை வெளியே எடுத்தான். கத்தியால் கண்டதுண்டங்களாக ஆக்கினான் அந்தச் சிசுக்களை.

அந்த கோரங்களைக் காணும் வரை குழந்தைகளை வயிற்றிலே சுமந்த தாய்மார்கள் உயிருடன் இருக்கவில்லை.

அப்படி குற்றுயிரும் குலையுயிருமாக இருந்த தாய்மார்களும் இந்தக் குரூரங்களை கண்டதும் உயிரை துறந்தார்கள்.

இந்த ஈனச் செயலை வெற்றி விழா என அழைத்துவிட்டு, மேனாச்சம் பிகின் தலைமை யில் யூத தீவிரவாதிகள் அந்தக் கிராமத்திற்குள்ள வீடுகளை சோதனையிடத் தொடங்கினார்கள்.

வீடுகளில் பதுங்கி இருக்கின்றனரா எனத் துருவித்துருவித்தேடினான். அகப்பட்டவர்களை அங்கேயே வைத்துக் கொலை செய்தான்.

சில வீடுகளை ஒட்டு மொத்தமாகக் கொழுத்தினார்கள். அதில் இருந்தவர்களையும்

சேர்த்துத்தான்.

ஓரிரு வீடுகளில் ஒழிந்திருந்தவர்களை அந்த வீதியிலுள்ள ஒரு வீட்டுக்கு அழைத்து வந்தான் அந்த வீட்டுக்குள் அடைத்தான். வெடி குண்டுகளை இயக்கி வீட்டை வெடிக்கச் செய்தான். அத்தோடு அந்த வீடுகளிலிருந்தவர் களும் வெடித்துச் சிதறினார்கள். ரசித்தார்கள், நகைத்தார்கள் யூத தீவிரவாதிகள்.

இப்படி அந்தக் கிராமத்திலிருந்தவர்களில் சுமார் 50 பேர்களைத் தவிர அத்தனை பேரும் கொலை செய்யப்பட்டார்கள். இந்த 50 பேர் மட்டுந்தான் தப்பினார்கள். அதாவது அதிகாலையில் தப்பி ஓடினார்கள்.

பிணங்களை மிகவும் லாவகமாகவே அகற்றினார்கள். பின்னர் அவற்றைமொத்தமாகப் புதைத்தார்கள்.

வீடுகளை அந்தத் தீவிரவாதிகள் ஆக்கிர மித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வுகளை நேரில் பார்த்த மெய்ர் பா அர்ன் Meir Po-el - என்பவர் அந்தக் கோரங்களை உடனுக்குடன் கோர்த்து வைத்துக் கொண்டார். 24 ஆண்டுகளுக்குப் பின் தான் அவற்றை வெளியிட்டார். வெளியிட்டவர் பின்வரும் நிகழ்வை பதிவு செய்தார்.

"நானும் ஜெரூசலத்திலுள்ளவர்களும் அந்தத் தீவிரவாதி களின் தளபதிகளிடம் மண்டியிட்டுக் கெஞ்சினோம் அந்தப் படுகொலைகளை நிறுத்தச் சொல்லி, ஆனால் அவர்கள் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இதனிடையே வீடுகளிலிருந்து 25 பேரை கடத்தி வந்து தங்களது வாகனங்களில் ஏற்றிச் சென்று ஜெரூசலம் வீதிகளிலேயே ஊர்வலம் வரச் சொன்னார்கள். கிவ் அத் ஷாஹுல் என்ற இடத்திற்கும் டையர் யாசின் கிராமத்திற்கும் இடையேயுள்ள 'குவாரி' இல் வைத்துச் சுட்டுக் கொன்றார்கள். பின்னர் குழந்தைகளையும், பெண்களையும் உயிருடன் அழைத்துச் கொண்டு மேடில் பவுன் வாகில் என்ற இடத்திற்குச் சென்றார்கள். (ஜெருசலத்தின் இந்தப் பகுதியை யூதர்களின் பகுதி (Jewish part of the Jerusalem என்றழைக்கின்றார்கள்).

இங்கே வைத்துத்தான் கர்ப்பிணிகளின் வயிற்றைப் பிளந்து குழந்தைகளை கூறுபோட்டார்கள்."

Source: 1. Bitte TV Harvest:A Modern History of Palestine : Sami Hadawi PP: 85-88

2. Muslim Arab Perspective 1:4-6(1994) PP: 247-249

இந்த படுகொலைகளைப் பற்றித்தான் தீவிரவாதத்தின் தந்தை மேனச்சம் பிகின், தான் எழுதிய "The Revolt" "கிளர்ச்சி" என்ற நூலில் இப்படி எழுதினான். The Massacre was not only justified, but there would not have been a state of Isreal without the victory of Deir Yasin.

இதன் பொருள்,

"இந்தப் படுகொலைகள் நியாயமானவை, மட்டுமல்ல, டையர் யாசின், வெற்றி இல்லை யேல் இஸ்ரேல் என்ற நாடு இல்லை."

டையர் யாசின் கிராமத்தில் தங்களை நிலைப்படுத்திக் கொண்ட பின் தங்கள் தீவிரவாத தாக்குதல்களை இதர கிராமங் களுக்குப் பரப்பினார்கள்.

இதர கிராமங்களில் வாழ்ந்த மக்களை அப்புறப் படுத்துவதிலும், அவர்களின் இல்லங் களை ஆக்கிரமிப்பதிலும் அவர்களுக்கு அதிக சிரமம் இருக்கவில்லை.

காரணம் டையர் யாசின் கிராமத்தில் என்ன நடந்தது என்பது எல்லாக் கிராமங்களுக்கும் பரவி இருந்தது.

இதனால் அந்தக் கிராமத்து மக்கள் தங்கள் வீடுகளை அப்படியே போட்டுவிட்டு ஓடிவிட் டார்கள். யூத தீவிரவாதிகள் அந்த வீடுகளை அப்படியே ஆக்கிரமித்துக் கொண்டார்கள்.

டையர் யாசின் பீதியால் ஓடிய மக்கள் டையர் யாசின்! டையர் யாசின்! எனப் புலம்பிக் கொண்டே சென்றார்கள்.

9 எப்ரல் 1948 முதல் மே 14, 1948 வரை இஸ்ரேல் என்ற நாட்டை ஐரோப்பிய ஏகாதி பத்தியவாதிகள் உருவாக்கியபோது ஏழு லட்சம் முஸ்லிம்கள் தங்கள் வீடுகளிலிருந்து துரத்தப் பட்டார்கள். இவர்களில் பலர் லெபனானிலும் இதரப் பகுதிகளிலும் சென்று தஞ்சம் புகுந்தனர். இவர்களின் இல்லங்களெல்லாம் ஐரோப்பாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கிருஸ்தவ ஆட்சியாளர்களால் துரத்தி அடிக்கப் பட்ட யூதர்களுக்கு வழங்கப்பட்டன.


vaigarai velicham official

இப்படி பாலஸ்தீன முஸ்லிம்கள் யூத தீவிரவாதிகளிடம் தங்கள் சொந்த நாட்டையும், வனப்புமிகு பழத்தோட்டங் களையும் இழந்து அகதிகளாக ஆக்கப்பட்டார்கள். 1948இல் இஸ்ரேலுக்கென ஒரு இராணுவம் ஏற்படுத்தப் பட்டபோது பிகினின் அமைப்பைச் சார்ந்த தீவிரவாதிகள் அதில் இணைத்துக் கொள்ளப் பட்டனர்.

இதில் நெஞ்சைப் பிளக்கும் செய்தி என்னவெனில் 1977இல் இந்த படுகொலைகளைச் செய்த "மேனேச்சம்பிகின், 1977 முதல் 1983 வரை இஸ்ரேலின் பிரதம அமைச்சராகவும் இருந்தான்.

1978ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசையும் பெற்றான். அமைதிக்கான நோபல் பரிசின் கீர்த்தியை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

மேனேச்சம் பிகின்-ஐ போல் இன்னொரு தீவிரவாதி. அவனுடைய செயலால் யூதர்களே அதிர்ந்தார்கள். அவனைப் பற்றிய குறுகிய வரலாறு.

## யஷ்தக் ஷமீர்

இவனும் போலாந்தில் பிறந்தவன்தான். போலாந்திலுள்ள யஷ்தக் யெசனிஸ்கி இல் 1915 இல் பிறந்தான்.

ஜீயோனிசம் என்ற யூத தீவிராத இயக்கங்கள் அப்போதுதான் போலாந்தில் தளம் அமைத்து வளர்ந்தன. அதில் தன்னை இணைத்துக் கொண்டான். தனது இருபதாம் வயதில் அவன் கொலைகளைச் செய்வதில் கைதேர்ந்தவனாக ஆனான்.

1935 ஆம் ஆண்டு அவன், பாலஸ்தீனுக்குள் புகுந்து தன் படுகொலைப் படலத்தைத் தொடர்ந்தான்.

இவனும் மேனாச்சம் பிகின் என்பவனும் பள்ளிப் பருவ நண்பர்கள். இவனும் ஆங்கிலே யர்கள் தங்கள் நிருவாகத்தின் கீழ் ஒப்படைக் கப்பட்ட பாலஸ்தீனை யூதர்களிடம் ஒப்ப டைத்து விட்டு ஓடிவிட வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாக இருந்தான்.

இந்த உறுதியில் இன்னுமொரு படி மேலே சென்று யூதர்கள் தங்களுக்கென ஒரு நாட்டை



அமைத்துக்கொள்வதில் முஸ்லிம்கள் தடையாக இருப்பது போல் ஆங்கிலேயர்களும் தடையாக இருக்கின்றார்கள் எனக் கருதினான். ஆகவே அரபுக்களை - முஸ்லிம்களைக் கொலை செய்ய வேண்டும். அவர்களின் இடங்களை ஆக்கிரமிக்க வேண்டும். ஆங்கிலேயர்களின் அதிகாரத்திற்கு அடிபணியாமல் அவர்களுக் கெதிராகக் கிளர்ச்சிச் செய்ய வேண்டும் என்றும் பிரகடனப்படுத்தினான்.

தனது கொள்கைகளை நிலைநாட்ட 'ஸ்டேன் கேங்' என்ற யூத தீவிரவாத அமைப்பில்தான் முதலில் தன்னை இணைத்துக் கொண்டான்.

1942இல் இந்த அமைப்பின் தலைவன் "ஸ்டேன்" என்பவன் கொலை செய்யப்பட்ட போது இந்த அமைப்பின் தலைவனான்.

பின்னர் "இர்குன்" என்ற தீவிரவாத அமைப்பு இரண்டாக உடைந்தபோது, "லெஹி" என்ற பிரிவில் இணைந்து அதன் தலைவனான்.

இவன் பல தீவிரவாத அமைப்புகளில் இணைந்தான் என்றாலும், எல்லா அமைப்பு களின் நோக்கமும் ஒன்றாகத் தானிருந்தது.

வியாபார நிறுவனங்களைக் கொள்ளை யடிப்பது, வங்கிகளைக் கொள்ளையடிப்பது, இவையெல்லாம் தீவிரவாதத் தின் நியாயமான நிதி ஆதாரங்கள் என நம்பினான். இதனால் இடைவிடாமல் பல வியாபார நிறுவனங்களைக் கொள்ளையடித்தான்.

இவன் எந்த அளவுக்கு மனசாட்சி இல்லாமல் கொலைகளைச் செய்தான் என்றால், தனது அமைப்பின் பிரதான உறுப்பினர் எனக் கருதப்பட்ட, இலியாஹு கிளாடி

என்பவனையே கொலை செய்தான்.

யூதர்களில், ஆங்கிலேயர்களுக்குத் தனது அமைப்பைப் பற்றித் தகவல் தருபவர்கள் என்று சந்தேகப்பட்டவர்களையும் இவன் கொலை செய்தான்.

"மிகவும் ஆபத்தானவன்" என யூதர்களாலேயே அஞ்சப் பட்டவன் இவன்.

ஷமீர் செய்த கொலைகளில் மிகவும் கோரமானது எனக் கருதப்படுவது ஆங்கில நாட்டுப் பிரதமரின் எகிப்திய பிரதிநிதி லார்டு மோய்னி “Lord Moyne” என்பவனை 1944இல் கொலை செய்ததுதான்.

இவனுடைய தீவிரவாத அமைப்பு முஸ்லிம்கள் தாம் இந்தக் கொலையைச் செய்தார்கள் என தீவிரமாகப் பிரச்சாரம் செய்தார்கள். இந்த பிரச்சாரம் சூடுபிடித்துக் கொண்டிருக்கும் போதே எகிப்தின் உளவுத்துறை கொலையைச் செய்த இவனுடைய கும்பலின் இதர தீவிரவாதிகளைப் பிடித்து விட்டது. பிடிப்பட்டவர்கள் உண்மையைச் சொல்லி விட்டார்கள்.

இவர்களின் பொய்ப் பிரச்சாரம் ஒடிந்து வீழ்ந்தது. கொலையைச் செய்தவர்களை எகிப்திய நீதிமன்றங்கள் தூக்கிலே தொங்கவிட்டன.

இந்தக் கொலையும், அதன்பின்னர் புகுந்திருந்த சதிகளும் உலகச் செய்திகளாகி யூதர்களின் கோர முகத்தை உலகுக்கு வெளிச்சம் காட்டின.

தாங்கள் செய்யும் நயவஞ்சகம் உலகுக்குத் தெரிந்துவிட்டது என்பதனால், ஷமீரின் தீவிரவாத கும்பல் தங்கள் தீவிரவாதத்தைக் கடுகளவும் குறைத்துவிடவில்லை.

இரண்டாம் உலகமகா யுத்தத்தின்போது இவர்கள், அதாவது ஷமீரின் யூததீவிரவாத கும்பல் ஹிட்லருடன் இரகசிய தொடர்புகளை வைத்திருந்தது. இந்தத் தொடர்பால் பணம் கிடைத்தது. ஹிட்லர் கிழக்கு ஜெர்மனியில் வாழ்ந்த யூதர்களைப் பத்திரமாக கொலை செய்யாமல் பாலஸ்தீன் அனுப்பி வைக்கவும் ஒத்துக் கொண்டார். கைமாறாக இரண்டாம் உலகப்போரில் ஆங்கிலேயர்களுக்கெதிராக இந்தக் கும்பல் இயங்கிட வேண்டும். ஆங்கில இராணுவம் பற்றிய தகவல்களைக் ஹிட்லருக்குத் தந்திட வேண்டும். இதனை தயக்கமின்றி செய்தான் ஷமீர்.

இதனால் ஷமீரைப் பிடித்துக் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானத்தைத் தருவோம் என பிரிட்டிஷ் அரசு அறிவித்தது.

ஆங்கிலேயர்களின் உளவுத்துறை இவனை கைது செய்தது. ஆனால் மிகவும் சாதுரியமாகத் தப்பிவிட்டான்.

இப்படி மூன்று முறை கைதானவன் மூன்று முறையும் தப்பித்துவிட்டான்.

ஆங்கிலேயர்களிடம் அகப்பட்டுவிட்டான் என்பதால் இவன் அணுஅளவும் தனது கொலை பாதகச் செயல்களைக் குறைத்துவிடவில்லை.

டையர் யாசின் படுகொலையில் முழுமையாகத் தனது தீவிரவாதக் கும்பலை ஈடுபடுத்தினான்.

1948 இல் இஸ்ரேல் உருவாக்கப்பட்டவுடன் இன்னொரு உலகை உலுக்கும் கொலையைச் செய்தான். அது ஐக்கிய நாடுகளின் சபையின் பிரநிதியாகப் பாலஸ்தீன் வந்திருந்த கவுண்ட் பெர்னாடோட்டி Count Bemadotte என்பவரைக் கொலைச் செய்ததுதான்.

இவரைக் கொலை செய்தது முஸ்லிம்கள்தாம் எனப் பிரச்சாரம் செய்து பார்த்தான். எடுபடவில்லை. அதனால் ஓய்ந்துவிட்டான்.

கொலை செய்தவர்களில் சிலர் பிடிப்பட்டதால் உண்மை உலகுக்குத் தெரிந்துவிட்டது.

ஐக்கிய நாடுகளின் பிரதிநிதி கவுண்ட் பெர்னாடோட்டி சுவிடன் நாட்டைச் சார்ந்தவர். இதனால் சுவிடன் நாடு இஸ்ரேல் தன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றது.

இந்தக் கொலைக்குப் பின் ஆங்கிலேயர்கள் இவனை முழு மூச்சில் தேடிக் கண்டுபிடித்து விட்டனர்.

1948இல் இவனைக் கைது செய்து இரிட்டீரியாவிலுள்ள பிரிட்டீஷ் முகாமில் வைத்திருந்தது.

பிரான்ஸ் நாட்டிலுள்ள ஜீயோனிச அமைப்பைச் சார்ந்த சில யூதர்களின் உதவியால் பிரிட்டீஷ் முகாமிலிருந்து தப்பித்து பாரிஸ் மாநகரம் சென்றுவிட்டான்.


vaigarai velicham official

அங்கிருந்து கொண்டே தன்னுடைய தீவிரவாத செயல் களைத் தொடர்ந்தான்.

பிரான்ஸ் நாட்டில் இவன் அரசியல் அகதி என்ற பெயரில் வாழ்ந்தான். பின்னர் பிரான்ஸ் நாட்டு அதிகாரிகளே இவனை பாரிஸ் வழியாக இஸ்ரேலுக்கு அனுப்பிவிட்டார்கள்.

இஸ்ரேல் வந்த அவன் தனது தீவிரவாத செயல்களைத் தொடர்ந்தான் அவன் தான் பிரான்சிலிருந்த நாள்களில் ஏற்படுத்திய தொடர்புகள் அவன் பாலஸ்தீனில் தனது தீவிரவாத செயல்களைத் தொடருவதற்கு மிகவும் உதவியாக இருந்தன.

ஷமீர் இஸ்ரேலில் இருந்து கொண்டே இன்னுஞ் சொன்னால் பாலஸ்தீனில் இருந்து கொண்டே யூதர்களின் கொலைகார உளவு நிறுவனமான மோசாத்தின் வேலைகளை பிரான்சில் நடத்திடக் காரணமாக இருந்தான். 1948இல் இஸ்ரேலின் இராணுவம் உருவாக்கப் பட்டபோது, ஷமீரின் தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்களும் அதில் ஒரு பகுதியாயினர். இப்படி இஸ்ரேலின் இராணுவம் இரண்டு தீவிரவாத அமைப்புகளின் சங்கமம்.

1955முதல் 1965 வரை மொசாத் என்ற யூத நிறுவனத்திற்கும் அவன் உதவி செய்தான்.

இந்த வேலையை மொசாத் இன் வேலையை செய்து கொண்டே ஷமீர் முஸ்லிம் நாடுகளுக் கெதிராகவும் தன் வேலைகளைச் செய்து கொண்டிருந்தான்.

அதில் குறிப்பிடத்தக்க நிகழ்வும் ஒன்று உண்டு. அதன் சுருக்கம்:

எகிப்து தன் நாட்டின் "ராக்கெட்" மற்றும் ஏவுகணை ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்காக ஜெர்மன் நாட்டிலிருந்து பல விஞ்ஞானிகளை வரவழைத்திருந்தது.

இந்த விஞ்ஞானிகளின் வழி அதன் ராக்கெட் மற்றும் ஏவுகணை அறிவியல் வளர்ந்து கொண்டிருந்த போது ஷமீருக்கு தகவல்கள் கிடைத்தன. ஷமீர் அந்த விஞ்ஞானிகளுக்குத் தொடர்ந்து கொலை மிரட்டல் கடிதங்களை எழுதினான். இதனால் அந்த ஜெர்மன் நாட்டு விஞ்ஞானிகள் பீதியபப்பட்டவர்களாக எகிப்தை விட்டுச் சென்றுவிட்டனர்.

இப்படித் தகிடுதத்தங்களைச் செய்த ஷமீர் 1970 இல் அரசியலில் குதித்தான். 1982இல் வெளிநாட்டு அமைச்ச ரானான். அத்தனையும் மேனேச்சம் பிகினின் கட்சியில் இணைந்துதான். இவன் இஸ்ரேலில் வெளிவிவகாரத்துறை அமைச்சராக இருந்திடும்போதுதான் "ஷாப்ரா", "ஷத்திலா" என்ற அகதிகள் முகாம் படுகொலைகள் நடந்தன.

"ஷாப்ரா", "ஷத்தீலா" படுகொலைகளை நடத்திய யூத விசாரணை கமிஷன்களே இவனை வன்மையாகக் கண்டித்தன.

இப்படித் தீவிரவாத பின்னணிகளைக் கொண்ட இவன் 1983இல் மேனேச்சம் பிகினுக் குப்பின் இஸ்ரேலின் பிரதமராக ஆனான். 1986இல் மீண்டும் பிரதமரானான்.

இப்படிப் பல ஆண்டுகளாக யூதத் தீவிரவாதிகளே இஸ்ரேலின் பிரதமர்களாக ஆனார்கள்.

**தொடரும்...**

**- MGM**



- அல்லாமா அபுல் ஹசன் அலி நத்வி (ரஹ்)

- தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

**இத்தகைய** மிகப்பெரிய படுகொலைகள் நாட்டின் அனைத்து தரப்பு மக்களின் மீது நிகழ்த்தப்பட்டாலும் முஸ்லிம்களே அதில் குறிப்பாக குறிவைக்கப்பட்டார்கள். ஏனென்றால் நிறைய ஆங்கிலேய அதிகாரிகள் இந்த புரட்சி போராட்டத்தை (சிப்பாய் புரட்சி) இஸ்லாமியர்களால் திட்டமிடப்பட்ட இஸ்லாமிய புரட்சியாகவே கருதினர்.


எழுத்தாளர் ஹெண்ரி மெட் கூறுகிறார்:

"நிச்சயமாக இந்த புரட்சி சிப்பாய் புரட்சியே அல்ல. துவக்கத்தில் சிப்பாய்களால் மேற்கொள்ளப்பட்ட புரட்சியாக தெரிந்தாலும் இது முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்ட இஸ்லாமிய புரட்சி தான், என்ற இதன் உண்மை முகம் வெகு சீக்கிரத்தில் வெளிப்பட்டது".

இதனால் உயிர் பலிக்கும், அடக்குமுறைக்கும் முஸ்லிம்களே ஆளானார்கள். தற்கால வரலாற்று ஆசிரியர் ஒருவர் கூறுகிறார்: சில ஆங்கிலேய அதிகாரிகளின் வழக்கமாகவே இது மாறியது. எந்தளவிற்கு என்றால் அனைத்து முஸ்லிம் களையுமே போராட்டக்காரர்களாகவே கருதினார்கள். இதனால் ஏதாவது மனிதரை அவர்கள் கண்டுவிட்டால் உடனே நீ ஹிந்துவா? முஸ்லிமா? என்று கேட்பார்கள். முஸ்லிம் என்று பதில் வந்தால் உடனே துப்பாக்கி தோட்டாக்கள் அவனது உடலை பதம் பார்க்கும்.

ஆங்கிலேயர்கள் அழகான அல்லது உடல் வலிமை கொண்ட முஸ்லிமை கண்டால் உடனே அவனை வேட்டை ஆடி அவனை கொன்று தங்களது வெறியை தணித்து கொள்வார்கள். முஸ்லிம்களில் உயர்ந்த அந்தஸ்துடையவர்கள், பாரம்பரிய மிக்க குடும்பத்தை சார்ந்தவர்கள், செல்வந்தர்கள் ஆகியோர்களில் கணிசமான நபர்களை கொன்று குவித்தார்கள். வயது முதிர்ந்த தந்தைகளுக்கு முன்னால் அவர்களது இளமகன்களை கொன்றார்கள். பிறகு வயதான தந்தையிடம் கூறுவார்கள்: "உன்னை நீயே காப்பாற்றி கொள்!".

அழகான, சமூகத்தில் அந்தஸ்துடைய முஸ்லிம்கள் ஆங்கிலேயர்களது கைகளிலிருந்து தப்பிப்பது மிகவும் அரிது.எந்தளவிற்கு என்றால் இது அவர்களது அடுத்த தலைமுறையின் பிறப்பில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. டில்லியில் முஸ்லிம் சமூகத்தில் அழகான குழந்தைகளே பிறக்காத நிலை உருவானது. ஏதேனும் ஒரு நபர் புரட்சிக்கு முன்னால் உள்ள முஸ்லிம் தலைமுறையையும் புரட்சிக்கு பின்னால் பிறந்த தலைமுறையையும் ஒப்பீடு செய்தால் இரண்டு தலைமுறைக்கு மத்தியிலும்



# சுதந்திரப் போர்: தண்டனைகளை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்ட முஸ்லிம்கள்



vaigarai velicham official

அழகில் மிகப்பெரிய வித்தியாசத்தை உணர முடியும்.

இதற்கு பிறகு தூக்கு தண்டனை வழங்க துவங்கினார்கள். எல்லா தெருக்களிலும் சாலைகளிலும் தூக்கு மேடைகள் நிறுவப் பட்டது. தூக்கு மேடைகள் நிறுவப்பட்ட இடங்கள் எல்லாம் ஆங்கிலேயர்களின் பொழுது போக்கு மையங்களாக மாறியது.புகை பிடித்துக் கொண்டு நண்பர்களோடு பேசிக் கொண்டு தூக்கிலிடுவதை பார்த்து ரசித்து கொண்டாடிக் கொண்டிருந்தனர். தூக்கிலிடப்பட்டு அந்த நபர் தனது கடைசி மூச்சை விட்டு இறந்ததும் அனைவரும் சிரித்து கொண்டு அதனை பார்த்து ரசிப்பார்கள்.

தற்கால வரலாற்று ஆசிரியர் கூறுகிறார் :

"27000 முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டனர். இந்த கொலை வெறி ஏழு நாட்கள் தொடர்ந்து நிகழ்ந்தது. அதில் எத்துணை நபர்கள் என்று எண்ணிக்கையில் குறிப்பிட முடியாதளவு கொல்லப்பட்டனர். முஸ்லிம்களது இனத்தை வேறோடு அழிக்கவே ஆங்கிலேயர்கள் முயற்சித் தனர். குழந்தைகளையும் கொன்றனர். அவர்கள் காட்டுமிராண்டி தனமாக பெண்களை நடத்திய விதம் உரோமங்களை சிலிர்க்க வைத்து விடும்.

மாலிஸன் கூறுகிறார் :

"எங்களது காவல் அதிகாரிகள் குற்றவாளி களை பல வகைகளில் கொன்றார்கள். நாய்கள், நரிகளை போல சிறிதளவு கூட கருணை காட்டாமல் அந்த மக்களை தூக்கிலிட்டனர்.

மிக மூத்த அதிகாரியான லார்ட் ராபர்ட்ஸ் தனது தாயிற்கு ஜுன் 21, 1857ஆம் ஆண்டு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"மிகவும் கொடூரமான மரண தண்டனைகளில் ஒன்று, குற்றவாளியை பீரங்கியின் மூலம் தூக்கி எறிவது, நிச்சயமாக அந்த காட்சி பயங்கரமானதாக இருக்கும். ஆனால் இந்த நேரத்தில் அதனை யோசிக்க முடியாது. என்றென்றும் இந்தியாவின் தலைவர்கள் ஆங்கிலேயர்களே என்பதை இந்த மோசமான முஸ்லிம்களுக்கு உறுதியாக உணர்த்த வேண்டும் என்பதே எங்களது குறிக்கோள்."

இவ்வாறு தான் இந்திய சுதந்திர போராட் டத்திற்கு முஸ்லிம்கள் மிகப்பெரிய விலையை கொடுத்து போராடினார்கள். 1857 சிப்பாய் புரட்சிக்கு காரணம் முஸ்லிம்களே என்ற சிந்தனை ஆங்கிலயே அதிகார வர்க்கத்திடம் இருந்து கொண்டே இருந்தது. இது தலைமுறை தாண்டியும் தொடர்ந்தது.

வங்காளத்தின் மிகப்பெரிய ஆங்கிலேய அதிகாரி "இந்தியாவின் கடந்த கால புரட்சியும் எங்களது எதிர்கால அரசியல் கொள்கைகளும்" என்ற தனது நூலில் பின்வரும் விஷயங்களை குறிப்பிடுகிறார். இந்த நூல் 1858ஆம் ஆண்டு எழுதப்பட்டது. அதாவது புரட்சி நடந்து ஒரு வருடம் கழித்து எழுதப்பட்டது. அவரது வார்த்தைகள் ஆங்கிலேயர்களது கொள்கையை புரட்சிக்கு பிறகு முஸ்லிம்களை குறித்து அவர்கள் கொண்டிருந்த பார்வை அனைத்தையும் தெளிவாக விளக்குகிறது.

“1857இல் நடந்த சிப்பாய் புரட்சி நிச்சய மாக இந்துக்களது ஆலோசனை அல்ல. அதற்கு அவர்கள் காரணமும் அல்ல. நிச்சியமாக நான் உறுதியாக கூறுகிறேன் இந்த புரட்சி முஸ்லிம்களது சதித்திட்டமே. இந்துக்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டால் இதுபோன்ற புரட்சி போராட்டத்தில் ஈடுபட மாட்டார்கள். இதனை விரும்ப மாட்டார்கள். முஸ்லிம்கள், கலீஃபாக்களது காலம் துவங்கி இன்று வரை அவர்களது குணம் இதுதான்.அகம்பாவம் பிடித்தவர்களாக, சகிப்புத் தன்மையற்றவர் களாக, அநியாயக்காரர்களாகவும் இருப்பார்கள்.

எதையாவது பயன்படுத்தி இஸ்லாமிய ஆட்சியை நிறுவுவதே என்றென்றும் அவர்களது குறிக்கோள்.மக்களிடையே கிறிஸ்தவர்கள் மீது ஆழமான வெறுப்பை வளர்த்து வருகின்றனர். இஸ்லாமல்லாத மற்றொரு மதத்தை பின்பற்றக் கூடிய எந்த அரசாங்கமானாலும் அதற்கான உண்மையான குடிமக்களாக அவர்களினால் இருக்க முடியாது. ஏனென்றால் குர்ஆனது சட்டங்களின் அடிப்படையில் அது இயலாத ஒன்று."

முஸ்லிம்களை குறித்த இந்த அரசியல் நிலைப்பாடே ஆங்கிலேய ஆட்சியில் நெடுங் காலமாக தொடர்ந்து கொண்டிருந்தது. இதனையே மூத்த அதிகாரிகளும் தங்களது கொள்கையாக கொண்டிருந்தனர். முஸ்லிம்களை அரசு பணிகளிலிருந்து வேலைநிறுத்தம் செய்தனர். அவர்களது நல்ல வருமானத்திற்கான வாசல்களை அடைத்தனர். வக்ஃபு சொத்துக் களிலிருந்து அவர்களது பள்ளிகள் மற்றும்

நிறுவனங்கள் பெற்று வந்த நன்கொடைகள், உதவிகள் தடுக்கப்பட்டன.

முஸ்லிம்கள் எந்த பயனும் அடைய முடியாத வகையில் ஒரு கல்வி முறை நாட்டில் வேண்டுமென்றே அறிமுகப்படுத்தப்பட்டது. சில நேரங்களில், அரசு காலியிடங்களுக்கான அதிகாரப்பூர்வ அறிவிப்புகளில், ஹிந்துக்கள் மட்டுமே நியமனத்திற்கு பரிசீலிக்கப்படுவார்கள் என்று வெளிப்படையாகக் கூறப்பட்டது.

ஹன்டர் கூறுகிறார்:

"நிச்சயமாக முஸ்லிம்கள் அரசு பணிக்கான எல்லா தகுதிகள் இருந்தாலும், அவர்கள் பணிகள் வழங்கப்படாமல் தடுக்கப்பட்டார்கள்".

ஆங்கிலேயர்கள் முஸ்லிம்கள் மீதான தங்களது கடுமையான வெறுப்பை வெளிப்படையாகவே காட்டினர். சிறிய காரணத்தினாலும் அவர்களைப் பிடித்துக் கொண்டு மோசமாக நடத்தினார்கள். சந்தேகத்தின் அடிப்படையில் பிடித்து கடுமையாக தண்டிப்பார்கள். இந்தியாவின் வட மேற்கு எல்லையில் உள்ள மலைகளில் தங்கியிருந்த முஜாஹித்களின் மீது கடுமையாக போர் செய்தனர்.இதற்காக மிகப்பெரிய தொகையை ஆங்கிலேய அரசு செலவு செய்தது.

முஜாஹித்களுடன் அல்லது சையத் அஹமது ஷஹீத் அவர்களது குழுவுடன் கூட்டணியில் இருப்பதாக அவர்களால் சந்தேகிக்கப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் துவங்கப்பட்டன. பாட்னா, தானேசர் மற்றும் லாகூரில் எண்ணற்ற மதத் தலைவர்கள், வணிகர்கள் மற்றும் பிரபுக்கள் இந்த அடிப்படையில் விசாரிக்கப்பட்டனர். மேலும் கடுமையான சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர். அவர்களது சில ஆதரவாளர்களை வஹ்ஹாபிகள் என்று அழைத்தனர்.

மௌலானா யஹ்யா அலி, முஹம்மத் ஜாஃபர் தானேசரி, முஹம்மத் ஷஃபி லாஹூரி இவர்கள் மூவரும் தூக்கிலிடப்பட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினர்.

நீதிபதி கூறினார் :

"நீங்கள் அனைவரும் தூக்கில் தொங்குவதை பார்த்தால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்".

தூக்கு தண்டனை வழங்கப்படுவதற்காக காத்திருக்கும் சிறைவாசிகளின் பயத்தையும் அவர்களது மனவேதனையையும் பார்த்து மகிழ்ச்சி அடைவதற்காக, கண் குளிர்ச்சி அடைவதற்காக ஆங்கிலேயர்களும் அவர்களது பெண்களும் சிறைச்சாலைகளுக்கு வந்தார்கள்.

ஆனால் தூக்கு மேடைகளில் நிற்பவர்களோ அல்லாஹ்வின் பாதையில் ஷஹாதத் அடைய போகிறோம் என்ற ஆர்வத்தில் மிகவும் மகிழ்ச்சியோடு முழுமையான திருப்தியோடு அதற்காக காத்துக் கொண்டிருந்தார்கள். இது அவர்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தை அளித்தது. இதனால் இவர்களது தண்டனை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறினார்கள்.

இதனால் தலைமை நீதிமன்றத்திலிருந்து வெளியான மாற்று தீர்ப்பை அதிகாரி வாசித்தார், "இவர்களது தூக்கு தண்டனை ரத்து செய்யப்பட்டு அந்தமான் தீவிற்கு நிரந்தரமாக நாடு கடத்தப்பட வேண்டும்".

மேலும் கூறினார்:

"நீங்கள் மரண தண்டனையை மகிழ்ச்சியாக கருதுகிறீர்கள், அதை மிகப்பெரிய ஷஹாதத்தாக பார்க்கிறீர்கள். எனவே, நீங்கள் விரும்பும் தண்டனையை வழங்க வேண்டாம் என்று அரசு முடிவு செய்துள்ளது".

இதனால் ஷைகு யஹ்யா அலி அலீமாபாதி, அவரது சகோதரன் அஹமதுல்லாஹ் அலீமாபாதி, ஷைகு அப்துர் ரஹீம் ஸாதிக்பூரி ஷைகு முஹம்மத் ஜாஃபர் தானேசரி மூவரையும் 1865ஆம் ஆண்டு அந்தமானிற்கு நாடு கடத்தினர். ஷைகு யஹ்யா அலி மற்றும் ஷைகு அல்ஹம்துல்லாஹ் இருவரும் அந்தமானிலேயே இறந்தனர். ஷைகு அப்துர் ரஹீம் ஸாதிக்பூரி ஷைகு முஹம்மத் ஜாஃபர் தானேசரி இவர்களிருவரும் துன்பத் துயரங்களை நீண்ட காலம் அனுபவித்து 18 வருடங்கள் கழித்து நாடு திரும்பினர்.

பாட்னாவில் சாதிக்பூர் என்ற நகரத்தின் எல்லா குடும்பங்களின் முழு சொத்தும் அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்டது, அவர்களின் வீடுகள் கட்டிடங்கள் முழுமையாக தகர்க்கப்பட்டு சாலைகள் அமைக்கப்பட்டது. அவர்களது நிலங்களில் அரசின் அதிகாரப்பூர்வ கட்டிடங்கள் கட்டப்பட்டன. அவர்களது முன்னோர்களின் மண்ணறைகள் இடிக்கப்பட்டன. பழிவாங்கும் வெறித்தனமான தாகத்தைத் தணிக்க இவை அனைத்தும் செய்யப்பட்டன.

**தொடரும்.....**



vaigarai velicham official

# பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள்... முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

- தொடர்



# தில்சுக் நகர் (ஹைதராபாத்) குண்டுவெடிப்பு 2013

## உண்மையான குற்றவாளிகளின் இமெயில் முகவரியை எடுத்து அதை அப்பாவி முஸ்லிம்களின் மீது பொருத்திய வழக்கு

மே மாத தொடர்ச்சி....

### ஈ) ஒப்புதல் வாக்குமூலங்கள் – விசாரணையின் ஒரே அடிப்படை அஸ்திவாரம்

மத்திய உளவுத்துறையின் வழக்கமான வித்தையான ஒப்புதல் வாக்குமூலத்தையே அதன் கைப்பாவையான டெல்லி காவல் துறையின் சிறப்புப் பிரிவும், தேசிய புலனாய்வு முகமையும் பின்பற்றியது. கைது செய்யப்பட்ட குற்றவாளி எண் 2,5 ஆகியோரிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்று அதனை பதிவு செய்தது டில்லி சிறப்பு பிரிவு.

தங்களுக்கு எது வேண்டுமோ அதனை குற்ற வாளிகளின் வாயிலிருந்து வரவைத்து ஒப்புதல் வாக்குமூலங்களை உருவாக்கி வழக்கின் அஸ்திவாரத்தை போட்டது தேசிய புலனாய்வு முகமை.

தேசிய புலனாய்வு முகமையின் கட்டுப் பாட்டில் இருக்கும் பொழுது எங்களை சித்திர வதை செய்தனர். எங்களிடம் ஒரு குறிப்பைத் தந்து அதில் உள்ளதை போல் நீதிமன்றத்தில் சொல்ல வேண்டும் என எங்களை நிர்ப்பந்தித் தனர். எனவே பயத்தின் காரணமாக நாங்கள் ஒப்புதல் வாக்குமூலங்களை வழங்கினோம். எனவே ஒப்புதல் வாக்குமூலங்களை திரும்பப் பெற்றுக் கொள்கிறோம் என ஒரு மனுவை 10 டிசம்பர் 2013 அன்று தாக்கல் செய்தனர் குற்ற வாளிகள் எண் 2,5 ஆகியோர். குற்றம் சுமத்தப் பட்ட நபர் தன்னுடைய முந்தைய ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்து பின் வாங்கிக் கொள்வது சட்டத்தின் அடிப்படையில் அவருடைய உரிமை. வாக்குமூலத்தை அவரே முன்வந்து அளித்தாரா அதில் உண்மைத்தன்மை இருக்கின்றதா என்பதை நீதி மன்றம் முடிவு செய்யும். இந்த வழக்கைப் பொறுத்த மட்டில் திரும்ப பெற்றுக் கொள்ளும் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இரண்டு மாதத்திற்குப் பின் மனுவை தாக்கல் செய்ததால் அளிக்கப்பட்ட வாக்கு மூலம் உண்மை என்றும் அவர்களாகவே முன்வந்து அளிக்கப்பட்டது என்றும் கருதி மனுவை தள்ளுபடி செய்ததாக கூறியது.

ஆனால் பர்பானி குண்டுவெடிப்பு வழக்கை எடுத்து கொள்ளுங்கள். இதில் குற்றவாளிகள் RSS மற்றும் பஜ்ரங்தள் அமைப்பை சேர்ந்த வர்கள் (தீர்ப்பு 18 ஆகஸ்ட் 2016). நான்கு சாட்சி யங்களின் திரும்பபெறும் மனுவை அமர்வு நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. உச்ச நீதிமன்ற தீர்ப்பை (SC (1972)3 SSC 280) சுட்டிக் காட்டி, நடுவர் நீதிமன்றத்தின் முன் பதிவு செய்த வாக்குமூலத்தை (U/S 164 OF CR. PC) நிராகரித்தது.

இரண்டு வாக்குமூலங்களும் ஒன்றுக் கொன்று முரண்பாடாக இருக்கும்பொழுது, அதாவது நடுவர் நீதிமன்றத்தின் முன் அளித்த வாக்குமூலமும் அமர்வு நீதிமன்றத்தின் முன் அளித்த வாக்கு மூலமும் முரண்பாடாக இருக்கும்பொழுது, வேறு சுதந்திர சாட்சியங்கள் இல்லாத நிலையில், முன்னர் அளித்த சாட்சியத்தை நிராகரித்து விடலாம்.

இதே போன்றதே தில்சுக் நகர் குண்டு வெடிப்பு வழக்கும். நடுவர் நீதிமன்றத்தின் முன் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டது. பின் அமர்வு நீதிமன்றமான சிறப்பு தேசிய புலனாய்வு முகமை நீதிமன்றத்தின் முன் திரும்பபெறும் மனு (2/2013) அளிக்கப்பட்டது. அமர்வு நீதிமன்றம் குற்றவாளி எண் 2, 5 ஆகியோரின் ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்து இருக்க வேண்டும். ஆனால் இந்த வழக்கில் வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு, திரும்பபெறும் மனுவை நிராகரித்துள்ளது நீதிமன்றம்.

## வாக்குமூலங்கள் உறுதிபடுத்தப்பட வேண்டும்

வாக்குமூலங்கள் சுதந்திரமான சாட்சியங் களை கொண்டு உறுதிபடுத்தப்பட வேண்டும் என்பதே சட்டம். சட்டத்தின் விதிக்கு இணங்கியே வழக்கை நடத்த முயற்சி செய்ய வேண்டும். குற்றவாளிகள் எண் 2,5 ஆகியோரின் வாக்குமூலத்தை உறுதிபடுத்த, அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள், ஹவாலா முறையில் அனுப்பபட்ட பணத்தை பெற்றுக்கொண்ட விவரங்கள், இணையதளத்தில் உரையாடுவதற்கு குற்றவாளிகள் சென்ற சைபர் கபே மையங்கள், சில மொபைல் எண்களில் இருந்து எடுக்கப்பட்ட அழைப்பு (Call) விவரங்கள், சில முக்கிய சாட்சிகளின் வாக்கு மூலங்கள் ஆகியவை பயன்படுத்தப்பட்டன. இவற்றை பற்றி பின்னர் விவாதிக்கலாம்.

ICERT நிபுணர்களை கொண்டு குற்றவாளிகள் தெரிவித்த இமெயில் முகவரிகள், உரையாடல் முகவரிகள் இவற்றிலிருந்து எடுக்கப்பட்ட இமெயில்கள், உரையாடல்கள் இவற்றை மையமாகவைத்தே இந்த ஒட்டுமொத்த வழக்கும் சுழன்றுள்ளது. எனவே இந்த இமெயில்கள் குறித்து முதலில் அலசி ஆராய்வோம்.

## உ) இமெயில் முகவரிகளும், இமெயில்களும் – வழக்கின் ஆணிவேர்

வாக்குமூலத்தை சாட்சியாக எடுத்துக் கொண்டு வழக்கை நடத்தினால் அதை எளிதில் உடைத்துவிட முடியும் என்பது தேசிய புலனாய்வு முகமைக்கு தெரியும். எனவே, தேசிய புலனாய்வு அதிகாரிகள் தங்களின் தகவல் தொழில்நுட்ப திறனை பயன்படுத்தி, குற்ற வாளிகள் தெரிவித்ததாக கூறப்பட்ட இமெயில் முகவரிகள், அதிலிருந்து எடுக்கப்பட்ட இமெயில்கள் இவற்றை சாட்சியங்களாக உருவாக்கியுள்ளனர். இதுதான் வழக்கின் ஒரே அஸ்திவாரம்.

குற்றவாளிகள் தாங்களாகவே முன்வந்து பயன்படுத்திய அனைத்து இமெயில், உரை யாடல்கள் முகவரிகளை அளித்தனர். ICERT நிபுணர்களை கொண்டு இந்த முகவரிகளில் இருந்தே மெயில்களும் உரையாடல்களும் எடுக்கப்பட்டன என்று கூறியது காவல்துறை.

ஆனால் இதற்கு ஆதாரமாக எந்தவித சான்றுகளையும் முன் வைக்கவில்லை காவல்துறை. அதாவது குற்றவாளிகள் பயன் படுத்திய கணினிகளை முன்வைத்து குற்றப் பத்திரிகையில் குறிப்பிட்டபடி இமெயில் முகவரிகளும் உரையாடல் முகவரிகளும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுடையது என ஆணித்தரமாக நிரூபிக்கவில்லை. எனவே குற்ற வாளிகளின் ஒப்புதல் வாக்கு மூலத்தை மட்டும் அடிப்படையாக வைத்து பின்னப்பட்டிருக்கும் காவல்துறையின் வழக்கை ஏற்றுக்கொள்வது அபாயகரமானது.

உண்மையில் இந்த வழக்கில் குற்றவாளிகள் ஈடுபட்டிருந்தால் அதை நிரூபணம் செய்ய


vaigarai velicham official

உறுதியான ஆதாரங்களான இணைய தளத்தில் பதிவாகியிருக்கும் தகவல்களை (Digital Footprint) காவல்துறை முன்வைத்திருக்க வேண்டும்.

Digital Footprint என்றால் என்ன என்பதை நாம் புரிந்துகொள்ள சில தொழில் நுட்ப வார்த்தைகளை அறிந்து கொள்ள வேண்டும்

*1)* Email Service Provider – இமெயில் வசதிகளை அளிக்கும் நிறுவனங்களான Hotmail, Yahoo, Gmail, Rediffmail இன்னும் பல.

*2)* IP Address (Internet Protocol – இணைய நெறிமுறை முகவரி) – என்பது ஒரு குறிப்பிட்ட தகவல் பரிமாற்றத்திற்காக ஒரு குறிப்பிட்ட கருவிக்கு இன்டர்நெட் வசதியை அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் எண்

*3)* MAC Address (Media Access Control Address) – என்பது இணையத்தில் ஒரு கருவியை (மொபைல் / கணினி) மற்றொரு கருவியிடமிருந்து வேறுபடுத்தி காட்ட வழங்கப்படும் தனிப்பட்ட அடையாள எண். கணினியை இணையத்தோடு தொடர்புபடுத்த உதவும் சாதனத்தை தயாரிக்கும் உற்பத்தியாளர்களே இந்த எண்ணை பெரும்பாலும் வழங்குவார்கள். இந்த எண் அக்கருவியில் சேமித்து வைக்கபட்டிருக்கும்.

*4)* Internet Service Provider - இன்டர்நெட் வசதிகளை வழங்கும் நிறுவனங்களான பிஎஸ் என்எல், ஐடியா, ரிலையன்ஸ் போன்றவை.

ஒரு கம்ப்யூட்டரில் ஒரு குறிப்பிட்ட இமெயில் முகவரிக்கும் இமெயில் வசதிகளை வழங்கும் நிறுவனத்திற்கும் தொடர்பு ஏற்பட்டு விட்டால், தகவல் பரிமாற்றம் நடந்த தேதி, சரியான நேரம், IP அட்ரஸ், MAC அட்ரஸ், கணினியின் இடம் ஆகிய தகவல்களை நம்மால் பெறமுடியும்.

உதாரணமாக, நவம்பர் ***10, 2016*** அன்று ***09.36*** மணியளவில் ஒரு குறிப்பிட்ட கருவியில் இருந்து ஒரு குறிப்பிட்ட இமெயில் முகவரியை பயன்படுத்தி இமெயில் வசதியை உபயோக் கின்றோம் என்றால், இன்டர்நெட் வசதியை வழங்கும் நிறுவனம் ஒரு IP முகவரியை இதற்கு நிர்ணயிக்கும்.

உதாரணமாக ***122.176.228. 226:80*** என்ற எண்ணோடு அந்த கருவியை இணைக்கும். இந்த IP முகவரி, கருவியின் MAC முகவரியோடு இணையும். அதேசமயம் இன்டர்நெட் வசதியை வழங்கும் நிறுவனம் எந்த இடத்திலிருந்து இந்த தகவல் பரிமாறப்படுகின்றது என்பதையும் காட்டும். இப்படி ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நடந்த தகவலை குறித்த அனைத்து விஷயங் களையும் நாம் தெரிந்துகொள்ளலாம். எந்த முகவரியில் இருந்து எந்த முகவரிக்கு எந்த மெயில் அனுப்பபட்டது அல்லது பெறப்பட்டது என்பதையும் அறியலாம்.

அமெரிக்க அரசாங்கத்தின் வழியாக இமெயில் வசதிகளை வழங்கும் நிறுவனத்திடம் கேள்வி எழுப்பி (இந்த வழக்கில் yahoo) ஒவ்வொரு இமெயில் முகவரிக்கும், ஒவ்வொரு தகவல் பரிமாற்றம் நடந்தவற்றிற்கும் இந்த விவரங்களையும் காவல்துறை கேட்டுப் பெற்றிருக்க வேண்டும். ICERT நிபுணர்களை கொண்டு எடுத்த தகவலை யாஹூ நிறுவ னத்தின் அனுமதியுடன் கேட்டு பெற்றதைப் போன்று மற்ற விவரங்களையும் பெற்றிருக்க வேண்டும்.

இணையதளத்தில் பதிவான குறிப்புகளை மீண்டும் பெற்றுக் கொள்ளும் அளவுக்கு நெறி முறைகள் இருக்கின்றன. இதனை கொண்டு எந்த கருவியிலிருந்து அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் தெரிந்துகொள்ள முடியும். இந்த விவரங்களை கொண்டு குற்றவாளிகள் பயன்படுத்திய கருவியை காவல்துறையால் கண்டுபிடித் திருக்க இயலும். அதனை சான்றாக சமர்ப்பித்திருக்கவும் முடியும். இப்படி செய்வதன் மூலம் காவல்துறையின் கூற்றை உறுதிபடுத்தியிருக்க முடியும். இணையதளத்தில் பதிவான குறிப்புகளை எடுக்காததாலும் எந்த கருவிகளையும் குற்றவாளிகளிடமிருந்து இந்த வழக்கில் கைபற்றாததாலும், வெறுமனே இமெயில் முகவரிகளும் இமெயில்களும் குற்ற வாளிகளுடையது என்பதை ஏற்றுக்கொள்ள இயலாது.

இமெயில் முகவரிகளையும் உரையாடல் முகவரிகளையும் குற்றவாளிகள் தாங்களாகவே தந்தார்கள் எனக்கூறும் காவல்துறையின் கூற்று பெரும் சந்தேகத்தை எழுப்புகிறது, ஏனென்றால் YAHOO மெயில் சர்வரிலிருந்து கேட்கப்படும்

எளிய பாதுகாப்பு தொடர்பான கேள்விகளை கூட குற்றவாளி எண் 5–ஆல் பதில் அளிக்க இயலவில்லை. பல இமெயில் முகவரிகளையும் அதன் கடவு சொற்களையும், மேலும் பல கோப்புகளின் கடவு சொற்களையும் ஞாபகம் வைத்திருந்த குற்றவாளிக்கு, YAHOO கேட்கும் எளிய பாதுகாப்பு கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியவில்லை என்பது நம்புவது மாதிரி இல்லை. அதிலும் இந்த கேள்விகள் பயன்படுத்துபவரின் தனிப்பட்ட விவரங்களை கேட்பவை.

குற்றவாளி எண் 5 இந்த எளிய பாதுகாப்பு கேள்விகளுக்கு பதில் அளிக்க இயலாததால், ICERT–யிடம் உதவி கேட்டது தேசிய புலனாய்வு முகமை. ICERTயின் அறிவுரையின்படி, கணினியின் முகவரியையும், கடவு சொற்களையும் தெரிந்துகொண்டு அதிலிருந்து தகவல்கள் எடுப்பதற்கு நேபாளில் ஒரு கணினியையும் CRPF பாவனா முகாமில் ஒரு கணினியையும் தொடர்பு கொண்டுள்ளனர். இந்த கூற்று எப்படி பார்த்தாலும் ஏற்றுக்கொள்வது மாதிரி யில்லை. குற்றவாளி எண் 5ஆல் ஏன் பாதுகாப்பு தொடர்பான கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியவில்லை என்றால் அவர் அந்த இமெயில் கணக்கை திறந்துகூட பார்த்திருக்க மாட்டார். ஏனெனில் அது அவர்மீது திணிக்கப் பட்ட ஒன்று.

காவல்துறையின் கூற்றை மறுப்பதற்கான மூன்றாவது காரணம்: இமெயில்கள், உரை யாடல்கள் இவற்றை சுற்றி பொதிந்திருக்கும் மர்மங்கள்.

வழக்கில் கூறப்பட்டுள்ளபடி, குற்றவாளிகள் தங்களுடைய உண்மையான அடையாளங்களை மறைத்து கொண்டு குறியீட்டு பாஷைகளை பயன்படுத்தி தங்களுக்குள் பேசியும் ரகசியமாக ஆவணங்களை அனுப்பியும் உள்ளனர்.

உதாரணமாக, பதான சிங் என்ற பெயரை ரியாஸ் பத்கலும் (குற்றவாளி எண் 1), சாட் என்ற பெயரை ஜியாவுர் ரஹ்மானும் (குற்றவாளி எண் 3) JJ என்ற பெயரை யாசின் பத்கலும் ( குற்றவாளி எண் 5) HSS அல்லது HAZIL என்ற பெயரை தஹ்சீன் அக்தரும் (குற்றவாளி எண் 4) பயன்படுத்தியுள்ளனர். தங்களுக்கு மட்டும் புரியும்படியான குறியீட்டுப் பாஷைகளை பயன்படுத்தியுள்ளனர்.

உதாரணமாக, CAPITAL என்பதற்கு பதிலாக CAPPT, EXPLOSIVES-க்கு பதிலாக KULUNGI, NITRATE-க்கு பதிலாக NNN, DETONATOR-க்கு பதிலாக ELAICHIII, PALTALKக்கு பதிலாக PT (உரையாடலுக்கு பயன்படும் மென்பொருள் / APP). காவல் துறையின் கூற்றுப்படி, உரை யாடல்கள் நடத்தியவர்களின் உண்மையான பெயர்களை குற்றவாளிகளே முன்வந்து தெரிவித் தார்கள்.

குறியீட்டு பாஷைகளின் உண்மையான அர்த்தங்களை அவர்களே தெரிவித்து பகிரப் பட்ட தகவல்களின் அர்த்தங்களையும் குற்ற வாளிகளே தெரிவித்தனர். புத்தியுள்ளோர் யாரும் இக்கதையை நம்புவார்களா? உண்மையான குற்வாளிகளின் பெயர்களை மறைத்துவிட்டு கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் பெயர் களை காவல்துறையே இதில் இணைத்துள்ளது. மேலும், தங்கள் கதைக்கு ஏற்பவண்ணம் அவர்களே பகிரப்பட்ட தகவல்களுக்கு விளக்கம் அளித்துள்ளனர்.

மேலே கூறப்பட்ட காரணங்களின் அடிப் படையில், காவல்துறையின் கூற்றை நாம் மறுத்தால், அதாவது இமெயில் முகவரி களையும் உரையாடல் முகவரிகளையும் குற்றவாளிகளே முன்வந்து தெரிவித்தனர் என்ற கூற்றை நாம் மறுத்தால், நம் முன் ஓர் கேள்வி எழும் அது, காவல்துறைக்கு எப்படி இவ்வளவு முகவரிகளும் தெரியும் என்பதே. இதற்கு லாஜிக்கான பதில் என்னவென்றால் இவற்றை எல்லாம் தெரிந்த ஒருசிலபேர் காவல் துறைக்கு இதனை தெரிவித்திருக்க வேண்டும். இப்படிக் கூறினால் நம் முன் இன்னொரு கேள்வி எழும். யார் அந்த ஒருசிலபேர், எதற்காக காவல்துறை அவர்களை மறைக்க வேண்டும். அவர்கள்தான் தில்சுக் குண்டுவெடிப்பில் ஈடுபட்ட உண்மையான குற்றவாளிகளாக இருக்க வேண்டும். அவர்களை காவல்துறை அடையாளம் கண்டிருக்க வேண்டும். அவர் களிடமிருந்தே இமெயில் முகவரிகளை பெற்றிருக்க வேண்டும். சில காரணங்களுக்காக காவல்துறை அவர்களை காப்பாற்ற விரும்பி யுள்ளது. எனவே வேறு சிலரை கைது செய்து, இமெயில் முகவரிகளை அவர்கள் மீது சுமத்தி,


vaigarai velicham official

சாட்சியங்களில் தங்கள் கைவண்ணத்தை காட்டி, கைது செய்யப்பட்டவர்களை குற்ற வாளிக்கியுள்ளது.

## இந்த கூற்றிற்கு வலு சேர்க்கும் பின்வரும் உண்மைகள்

பின் கூறப்பட்டிருக்கும் உண்மைகள் இந்த கூற்றிற்கு வலுச்சேர்க்கும்.


*1)* குற்றவாளி தெரிவித்த இமெயில் முகவரி களில் பலவற்றை திறந்தவர் ICERT நிபுணர் (PW81). தன்னுடைய திறமையை பயன்படுத்தி இமெயில் தகவல்களையும் உரையாடல்களை யும் வெளிக்கொண்டு வந்த அவர், தகவல் பரிமாற்றத்தின் IP முகவரி, தேதி, நேரம் ஆகிய வற்றையும் இமெயில் கணக்கை வைத்திருந் தவர், தகவலை அனுப்பியவர் மற்றும் பெற்றுக் கொண்டவர் இவர்களின் இருப்பிடத்தையும், கருவியின் MAC முகவரியையும் கண்டு பிடிக்கவில்லை. இமெயில்களின் IP முகவரியை கண்டுபிடிக்க இயலவில்லை எனக் கூறினார் RC எண் *6/2012* NIA என்ற வழக்கின் தலைமை விசாரணை அதிகாரி (டெல்லி). ஆனால் அது உண்மையல்ல. இவற்றை கண்டுபிடிக்கவில்லை என்றாலும், மற்ற முகாந்திரத்தின் வழி இவற்றை பெற்றிருப்பர்.

ஆனால் இவற்றையெல்லாம் விசாரணை செய்ய அவர்கள் விரும்பவில்லை. ஏனெனில் உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிக்க அவர்கள் விரும்பவில்லை

இந்திய அரசின் ஒரு உதவிச் செயலாளரான V. விஸ்வநாதன் (PW148) தன்னுடைய வாக்கு மூலத்தில் இமெயில்களின் IP முகவரிகளை அமெரிக்க அரசின் நீதித்துறை *11* அக்டோபர் *2013* அன்று அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட் டுள்ளது என்று கூறினார். Yahoo மெயில் முகவரி களின் கீழுள்ள தகவல்களை பயன்படுத்துவதற்கு அமெரிக்க அரசின் உதவியை பெறும் நடவடிக் கையை ஆய்வு செய்தவர் இவர். இந்த தகவல் இன்னொரு முக்கிய உண்மையையும் நிரூபணம் செய்கிறது. அது தேசிய புலனாய்வு முகமை வாதிட்டபடி இமெயில் முகவரிகள் பிராக்சி சர்வரிலிருந்து உருவாக்கப்படவில்லை. அப்படி பிராக்சி சர்வரிலிருந்து உருவாக்கப்பட்டிருந்தால் yahoo- வால் IP முகவரியை தந்திருக்க இயலாது.

மேலும் வழக்கில் சில ஆவணங்கள் (D14 to D34) சேர்க்கப்பட்டுள்ளன. இதில் பல இமெயில் முகவரிகளின் IP முகவரிகளும் அதன் நேரமும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த IP முகவரிகளும் இதர விவரங்களும் இமெயில் கணக்கை திறந்தவர் யார், மெயில் அனுப்பியது யார், அதை பெற்றது யார் என்பதை கண்டுபிடிக்க காவல்துறைக்கு வழிகாட்டியிருக்கும். ஏற்கனவே காவல்துறை கைது செய்த நபரை நோக்கி இந்த விவரங்கள் அமைந்திருந்தால், அவர்களுக்கு எதிராக இதனையும் வழக்கில் சேர்த்திருப்பார்கள். அல்லது கைது செய்யப்பட்ட நபரை நோக்கி இந்த விவரங்கள் அமையவில்லை என்றால் உண்மையான குற்றவாளிகளை யார் என்பதை நோக்கி அமைந்திருக்கும். ஆனால் இதை நோக்கி எந்தவித விசாரணையும் மேற்கொள்ளப்பட வில்லை. ஏன், IP முகவரியை பற்றி எந்தவித விவாதமும்கூட தீர்ப்பில் இல்லை. வெளிப் படையாக பார்த்தால் உண்மை குற்றவாளிகளை பாதுகாக்கவே இந்த முயற்சி.

**தொடரும்...**





# கையில் கிடைத்தப் போராளி

**அண்ணன்** கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள் ஒரு பொதுவுடைமை போராளி என்ற அளவில்தான் கல்லூரி நாள்களில் எனக்கு அறிமுகம்.

எனது சொந்த ஊர் குமரி மாவட்டம், வடக்குச்சூரன்குடி. கொடிக்கால் ஷேஹ் அப்துல் லாஹ்வின் சொந்த ஊரான "கொடிக்கால்". எனது ஊரிலிருந்து மூன்று கிலோ மீட்டர்தான். ஆனாலும் கலந்து பழகிட வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

நான் கல்லூரி படிப்பிற்குப் பின் ரெயில்வே-இல் வேலைக் கிடைத்ததால், சென்னை சென்றுவிட்டேன்.

அப்போது நான் இந்தியா மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் பல்வேறு பொறுப்பு களிலும் பணியாற்றிக் கொண்டிருந்தேன். பின்னர் 30 வயதைத் தாண்டியதால், அவ்வியக்கத்திலிருந்து ஓய்வு பெற்றிருந்தேன்.

பொதுவான இஸ்லாமிய நிகழ்ச்சிகளில் உரையாற்றி வந்தேன். அந்நிலையில்தான், ஜமாஅத்தே இஸ்லாமியின் மாணவர் அமைப் பான இந்திய மாணவர், இஸ்லாமிய அமைப்பு, ஆபாச எதிர்ப்பு சென்னை நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றினேன்.

அந்த நிகழ்ச்சியில்தான் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களுடன் ஒரு பார்வையாள ராகக் கலந்துகொண்டார்கள்.

எல்லோரும் நிகழ்ச்சியில் ஆற்றிய உரையை வெகுவாகப் பாட்டினார்கள். அதேபோல் கொடிக்கால் ஷேஹ் அவர்களும் பாராட்டி னார்கள்.

அதற்குப் பின் ஒருவேளை கொடிக்காலுக்குத் தெரிய வந்திருக்கும், நான் அவருடைய ஊருக்குப் பக்கத்து ஊரைச் சேர்ந்தவன் என்பது.

அந்த நிகழ்ச்சிக்குப் பின் ஏனோ என்னை நேரில் பார்க்க வேண்டும் என கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களுக்குத் தோன்றி இருக்கிறது.

என்னை என் வீட்டுக்கு வந்தே சந்தித் தார்கள், பாராட்டினார்கள். நாங்கள் பல விஷயங்களைப் பற்றிப் பேசினோம். அதன்பின் நாங்கள் அடிக்கடி சந்தித்தோம். மனந்திறந்து பல விஷயங்களைப் பேசினோம். கொடிக்கால் அவர்கள் தன் வாழ்க்கையின் ஓட்டத்தை என் முன் விவரித்துக் கூறினார்கள்.

நான் அவர்களிடம் இந்தியாவில் இஸ்லாத்தை நிலைநாட்டிடும் இயக்கம் பற்றிப் பேசினேன். கொடிக்கால் அவர்கள், இந்தியாவைக் கவ்விப் பிடித்திருக்கும் தீண்டாமைக் கொடுமைகள், ஜாதிய அடக்குமுறைகள் ஆகியவற்றைப்பற்றி என்னிடம் விரிவாகப் பேசினார்கள். அந்தத் திசையில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்கள்.

அதற்காகக் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும் என்றார்கள். அவர் ஓர் களப் போராளி. களம் கண்டுகொண்டே இருப்பார்.

கிராமங்களுக்கு எங்களை அழைத்துச் செல்வதில் குறியாக இருந்தார். அந்தக் கிராமங்


vaigarai velicham official

களில் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்யத் தலைப்பட்டோம். தம்பி மன்சூர் அலீ அவர்கள் கொடிக்காலோடும், என்னோடும் எல்லா விவாதங்களிலும் உடனிருந்தார்.

இஸ்லாத்தை நிலை நாட்டுவதில் மிகுந்த ஆர்வமுடையவராக இருந்தார். அவருடன் கலந்து பேசினோம். இந்தப் பணிகளை அவரும் ஒத்துக்கொண்டார்கள். விவாதங்களின் மையப்பகுதியாக அவர் அமைந்தார்.

இஸ்லாத்தை நிலைநாட்டிடும் பெரும் பணியின் ஒரு முக்கிய பகுதி தாஃவா - இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும் பணியில் அனைவருக்கும் ஏற்புடையதாக அமைந்தது.

அத்தோடு இஸ்லாத்தின் மூலம் இந்தியாவை விடுதலை அடையச் செய்வது.

இஸ்லாமிய ஆட்சியை நிலைநாட்டுவது அல்லது இஸ்லாத்தை மேலோங்கச் செய்வது என்ற இலட்சியங்கள் நாங்கள் ஏற்றுக் கொண்டோம்.

அடிப்படையில் நமது பணிகள் அமைந்திட வேண்டும் என்பது எங்கள் முடிவு. இந்த முடிவுகளில் எல்லாம், தம்பி மன்சூர் அலீயோடு அவருடைய இளவல் அப்துல் ரவூஃப் அடிக்கடி பங்கு பெற்றார்.

விரிவான செயல்திட்டங்களை வகுத்து அதன்வழி உழைத்திட டாக்டர் ரஃபாத் அவர்கள் பெரிதும் பயன்படுவார் என எங்களுக்குத் தோன்றியது. அதனால் டாக்டர் ரபாத் அவர் களைச் சந்திப்பது டெல்லி சென்று என முடிவு செய்தோம். இந்நிலையில் கொடிக்கால் எங்களிடம் ஒரு செய்தியை முன்வைத்தார். அது,

> ஆகஸ்ட் - 15, 1947ஆம் ஆண்டு இந்தியா விடுதலை அடைந்தது என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டுள் ளோம். அது ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை நம்மவர்கள் கைகளில் விட்டுச் சென்ற நாள்தான்.
>
> ஆனால் இங்குள்ள கோடானுக் கோடி மக்கள் இன்றளவும் தங்கள் அடிமைத் தளையிலிருந்து விடுதலை அடைந்திட வில்லை.
>
> ஜாதியக் கொடுமைகள், இனவெறி, நிறவெறி போன்ற கொடுமைகள், ஓர் இனத்தவரே மொத்த பலன்களையும் அனுபவிப்பது, இந்தியாவுக்கு எந்த துரோகத்தையும் செய்வோம், எங்கள் வளமான வாழ்வுக்கு என்ற ஆதிக்க வெறி, துரோகம் இவற்றிலிருந்து இந்தியாவைக் காப்பாற்றிட வேண்டும். இந்த வழியில் இஸ்லாத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதுதான்.)

டாக்டர் ரஃபாத் அவர்கள், இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் தலைவராக இருந்தவர்.

திருக்குர்ஆன், நபிமொழி, நபிவழி ஆகிய வற்றில் நன்கு தேர்ச்சி பெற்றவர். அதேபோல உலகக் கல்வியிலும் தேர்ச்சி அடைந்தவர். IIT என்ற இந்தியன் இன்ஸ்டிடியூட்டில் முனைவர் பட்டம், டாக்டர் பெற்றவர். இஸ்லாத்தை நிலைநாட்டுவது என்ற கொள்கைகளில் எந்த நிலையிலும் சமரசம் செய்துகொள்ளமாட்டார். இன்றளவும் செய்யவில்லை என்பதை அவரை டெல்லியில் சந்திக்கும் போதெல்லாம் உறுதி செய்து கொள்வோம்.

அப்போது மராட்டிய மாநிலத்திலுள்ள மவுண் அபு என்ற இடத்தில், அங்கே ஓர் இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் ஓர் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். எனக்கும், தம்பி மன்சூர் அவர்களுக்கும் அழைப்பு கிடைத்தது. நான் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களையும் உடன் அழைத்து வருகிறேன் என்றேன். தாஃவாவைப் பற்றி, இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும் செயல்முறைகளைப் பற்றி அவர் சிறிது நேரம் பேசுவார் என்றேன். அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். ஆக, நானும் அண்ணன் கொடிக்காலும், தம்பி மன்சூர் அலீ அவர்களும், நாக்பூர் பயணமானோம்.

மவுண்ட் அபூவில் உரைகளை நிகழ்த்திவிட்டு மீண்டும் நாக்பூர் வந்தோம். அங்கே மூன்று நாள்கள் நானும், தம்பி மன்சூர் அலீ, கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ், டாக்டர் ரஃபாத் ஆகியோர் தொடர்ந்து, திருக்குர்ஆன் நபிமொழி, நபிவழி ஆகியவற்றை அதிகமாக விவாதித்தோம். இந்தியாவில் இஸ்லாத்தை

மேலோங்கச் செய்வது எப்படி என்பதை எங்கள் விவாதத்தின் மையப்பகுதி.

வெறும் விவாதமாக அல்லாமல் சிலபல முடிவுகளையும் எடுத்தோம். அவற்றை செயல் படுத்திட ஆவண செய்திடவது என முடிவு செய்து கலைந்தோம். ஒரு செயல்முறை திட்டத்தையும் வகுத்திருந்தோம். இதுவெல்லாம் நடந்தது 1982களில்...

அந்தச் செயல்திட்டத்தின் அடிப்படையில் கிராமம் கிராமமாக இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வது, உண்மையைச் சொன்னால் வீதி-வீதியாக இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வது என முடிவு செய்தோம்.

இதில் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள் செய்த மிகப்பெரிய சேவை என்ன வெனில் எங்கள் கவனத்தை தலீத் மக்களை நோக்கித் திருப்பியது. அந்த மக்களின் அவலங் களை, அந்த மக்களை நேரில் சந்திக்க அழைத்துச் சென்றது. எங்களுக்குப் புரிய வைத்தார். நாங்கள் அந்த மக்களின் விடுதலையை அதாவது இஸ்லாத்தின் வழி அந்த மக்களின் விடுதலையை முழுமையாகப் பெற்றுத் தருவது என முடிவு செய்தோம்.

கொடிக்கால் தன்னால் இயன்ற மட்டும், தலீத் மக்களை நிரந்தரமாக அடிமைத்தளை யிலிருந்து விடுவித்துவிடுவது என்பதில் கவனமாக இருந்தார். அதில் அவர் காட்டிய அழைப்பு , அக்கறை அலாதியானது. கொட்டிய உழைப்பு ஈடு,இணையற்றது.

டாக்டர் ஹபீப் முஹம்மத் அவர்களிடம் இதைச் சொல்லி அவரையும் அணியில் சேர்த்துக் கொண்டாம்.

நானும், டாக்டர் ஹபீப் முஹம்மது அவர் களும் இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத் திலிருந்து ஓய்வுப் பெற்றிருந்தோம். எனினும், அதன் பயிற்சி முகாம்களில் உரை நிகழ்த்தும்படி அழைக்கும் போதெல்லாம் சென்று உரை நிகழ்த்துவோம்.

இப்போது நாங்கள் தாஃவா களத்தில் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் களத்தில் வேகமாக இறங்கி இருந்தோம்.

ஊர், ஊராகச் சென்று தாஃவாவை செய்து கொண்டிருந்தோம்.

நான், தம்பி மன்சூர் அலீ, கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ஆகியோர் அமர்ந்து மசூராவில் கலந்து ஆலோசிப்போம். அடுத்து எந்த ஊர் என்பதை முடிவு செய்வோம்.

இடத்தை முடிவு செய்தபின், கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள்தாம் அந்த ஊருக்கு முதலில் செல்வார்கள். அங்குள்ள முஸ்லிம்கள், தலீத்கள் ஆகியோரைச் சென்று பார்த்துப் பேசி அரங்கத்தைத் தயார் செய்வார்கள். பெரும்பாலும் அந்த நிகழ்ச்சியில் முழுநாள் நிகழ்ச்சிகளாகத்தான் இருக்கும். ஆகவே அந்த ஊர் மக்களுக்கு மதிய உணவுக்கு ஏற்பாடுகள் செய்தி வேண்டும். இதற்காகவும் கொடிக்கால் அவர்கள் அந்த ஊர் மக்களைச் சந்திப்பார்கள்.

ஊர் மக்களை ஒரே சந்திப்பில் சந்தித்து விடுவது என்பதில் வல்லவர் கொடிக்கால் அவர்கள்.

சந்திப்புகளில் அந்த ஊர் மக்களோடு கொடிக்கால் அவர்கள் இரண்டறைக் கலந்து விடுவார்கள். இந்நிலையில் கொடிக்கால் அவர்களுக்கு எல்லாம் சாத்தியமாகிவிடும். ஆகவே ஊர் மக்களுக்கு ஒன்றாக மதிய உணவுக்கு ஏற்பாடு செய்வது ஒன்றும் கடினமாக காரியமாக இருக்கவில்லை.

அல்ஹம்துலில்லாஹ்.

அடுத்து நிகழ்ச்சி நிரலை தயார் செய்து விடுவோம். பெரும்பாலும் எங்களுடைய தாஃவா இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் நிகழ்ச்சிகள் மூன்று அமர்வுகளைக் கொண்டவை யாக இருக்கும்.

**முதல் அமர்வு**

தலீத் தலைவர்கள் அதாவது தீண்டாமை கொடுமைகளுக்கெதிராகப்போராடிவரும்தலை வர்கள், உண்மையைச் சொன்னால் தலீத் களப் போராளிகள். தாழ்த்தப்பட்ட, அமுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் அவலங்களை, துயரங்களை எடுத்துரைப்பார்கள்.

பேசுபவரும் கண்ணீர் வடிப்பார், அதனை விழிமூமாமல் கேட்டுக் கொண்டிருக்கும் தாழ்த் தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களும் கண்ணீர் வடிப்பார்கள்.


vaigarai velicham official

பெரும்பாலான நிகழ்ச்சிகளில் அந்த ஊர் முஸ்லிம்கள் பெருமளவில் கலந்துகொண் டார்கள்.

இதில் T.M. மணி, உத்திராசு, சிக்கல் நாயக்கன்பேட்டை ஜக்கரியா பாய், முன்னாள் கண்ணைய்யா, கொடிக்கால் ஷேஹ் அப்துல் லாஹ் ஆகியோர் நிரந்தரமான பேச்சாளர்கள்.

ஒருநாள் நிகழ்ச்சியில் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் முதன்மைப் பொறியாளர் ஜெகநாதன், பின்னாளில் முஹம்மத் இஸ்மாயீல், இராமநாதபுரம், கூரியூர் ஜின்னா, முன்னாள் செல்லையன் இராஜாங்கம் ஆகியோர் உரையாற்றி உள்ளார்கள்.

இதில் அன்புச் சகோதரர் டி.எம்.உமர் பாரூக் அவர்கள் ஆற்றிய உரைகள், பின்னர், நாங்கள் ஏற்படுத்தி இருந்த இலக்கியப் பணிமனை என்ற நூல் வெளியீட்டகத்தின் வழியாக வெளிவந்தன.

கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள், பல நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் சிந்திக்கவும், சிலிர்க்கவும் வைத்தன.

முன்னதாக, இந்த இலக்கியப் பணிமனையின் வழி வந்த முதல் நூலாக "நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி" என்ற கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களின் நூலினை ஆங்கில ஆக்கத்தை வெளியிட்டிருந்தோம்.

எனக்குத் தெரிந்து, இன்று டி.எம்.மணி அவர்களின் உரைகளும், எழுத்துக்களும் நூல்களாகக் கிடைக்கின்றன என்றால் அதற்கு இலக்கியப் பணிமனையே முழு முதற்காரணம்.

**இரண்டாம் அமர்வு**

தெருத் தெருவாக நாங்கள் நடத்திவந்த, இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பிரச்சாரத்தின் இரண்டாம் அமர்வு.

இஸ்லாத்தை குழுமி இருக்கும் அந்த மக்களுக்கு எடுத்துச் சொல்வதாக அமையும். இதில் பல நேரங்களில் மைய்ய உரையை நான் நிகழ்த்தி இருக்கின்றேன். சிலபல நேரங்களில் டாக்டர் ஹபீப் முஹம்மத், சில நேரங்களில் தம்பி மன்சூர் அலீ, சகோதரர் இஸ்மாயீல் நாஜி என எங்கள் உரைகள் அமைந்தது. இஸ்லாத்தை விளக்கிச் சொன்னோம்.

இந்த இரண்டு அமர்வுகளும் முடியும்போது உணவு இடைவேளை வந்துவிடும். அதனை கண்ணுங்கருத்துமாகக் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள்தாம் முன்னின்று கவனித்து வந்தார்கள்.

**மதிய உணவு விருந்து உபசரிப்பு அதுவும் தாஃவா அழுத்தமான தாஃவாதான்**

மதிய உணவை, அதாவது விருந்தை பரிமாறுவதில், முஸ்லிம் முக்கியஸ்தர்களே முன்னே நின்றார்கள். அவர்களின் உபசரிப்பால், கவர்ந்து நின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், மகிழ்ந்தார்கள். ஏனைய சமுதாயத்தவர்களெல் லாம், எட்டி நில் எனச் சொல்லி தூரத்தில் நிறுத்தியபோது, நம்மவர்கள்தாம் முஸ்லிம்கள் தாம், நமக்கு மனம் உவந்து உணவுகளைத் தந்தார்கள் எனச் சொல்லி சந்தோஷப்பட் டார்கள். இந்த உபசரிப்பால் எத்தனை பேர் இஸ்லாத்தை ஏற்றார்கள் என கணக்கு எங்களிட மில்லை. ஆனால் இந்த உபசரிப்புகள் நிச்சய மாக அவர்களை இஸ்லாத்தின் பக்கம் ஈர்த்தது என்பதை மட்டும் என்னால் சொல்லிட இயலும். (அல்லாஹ்வே அனைத்தையும் அறிந்தவன்)

இந்த நிகழ்ச்சியின்போது பலர் இந்த உபச்சாரங்களால் மலைத்து நின்ற வாயாற பாராட்டியதை என்னுடைய காதுகளால் கேட்டிருக்கின்றேன். சிலபல நிகழ்ச்சிகளின் போது கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களும், என்னிடம் சிலாகித்துக்கூறி இருக்கின்றார்கள்.

இந்த நிகழ்ச்சிகளில் முத்தாய்ப்பாக, ஆடுதுறை கும்பகோணத்திற்கு அருகாமையில் வீற்றிருக்கும் இடம் இங்கு நடந்த நிகழ்ச்சி. தருவாய்ப்பாடி - திருப்பனந்தாளுக்குப் பக்கத்தில் உள்ள கிராமம் இவற்றைக் குறிப்பிடலாம்.

**மூன்றாம் அமர்வு**

எப்போதுமே இந்த மூன்றாம் அமர்வு முத்தாய்ப்பாக அமைந்துவிடும். இதில் உரை யாற்றுபவர்கள் - தீண்டாமைக் கொடுமைகளி லிருந்து தங்களை முழுமையாக விடுவித்துக் கொண்ட தலித் மக்கள் விடுதலைப் போர் வீரர்களான முஸ்லிம்கள் உரையாற்றுவார்கள்.

இந்த உரையில் - இஸ்லாத்தை ஏற்றுக்

கொள்வதற்கு முன் அவர்கள் பட்ட அல்லல் களையும், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பின் அவர்கள் பெற்ற கண்ணியத்தையும் பெற்றகரிய பேறுகளையும் விளக்கிச் சொல்வார்கள்.

உரைகள் உள்ளுவர் உள்ளத்தையும் உறுத்தும், உரையச் செய்யும், கவர்ந்திழுக்கும்.

பின்னர் இந்த இடங்களுக்குத் தொடர்ந்து பயணங்களை மேற்கொண்டு, அந்த மக்களில் இஸ்லாத்தை மனமுவந்து ஏற்றிட முன்வருபவர்களைக் கண்டறிந்து இஸ்லாத்தில் இணைப்போம்.

தமிழகத்தில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடக்காத மாவட்டங்களே இல்லை.! இதுபோன்ற நிகழ்ச்சிகளில்தாம், டி.எம்.மணி, மாறன், நெய்வேலி ஜெகநாதன் போன்றவர் களைப் போராளிகளாக அறிமுகப்படுத்தினோம்.

அந்த நாள்களில் கொடிக்காலின் உழைப்பு அல்லாஹ்வின் மார்க்கத்தை, மௌட்டீகத்தில் மூழ்கிக் கிடக்கும், மக்களிடையே கொண்டு செல்வதில் கொட்டிய உழைப்பு அலாதியானது.

காய்தல் உவத்திலின்றி, கூடுதல் குணவின்றி சொல்வேண்டி, கொடுக்கால் ஷேஹ் அப்துல் லாஹ் அவர்கள் இதற்காக அல்லாஹ்விடம் அளவற்றக் கூலியைப் பெறுவார்கள்.

அவர்கள், மழலைப் பருவம் முதலே பல்வேறு வகையான போராட்டங்களை நடத்தி இருக் கின்றார்கள். தியாகங்களைச் செய்திருக்கின் றார்கள். அந்தத் தியாகங்களின், தடங்களையும் தழும்புகளையும் அவருடைய உடலில் காணலாம்.

அவை அனைத்தையும் காட்டிலும், என்னுடைய பார்வையில் அல்லாஹ்விடம் அளப்பறிய கூலியைப் பெற்றுத் தருவது, இந்த இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பதில் கொட்டிய உழைப்பும் அர்ப்பணிப்புகளுந்தான்.

**தாஃவா களத்தில்**

இந்த நிகழ்ச்சிகளில் முத்தாய்ப்பாக அமைந்த முதல் நிகழ்ச்சி நீடூர் நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சி யில்தான், கண்ணைய்யா என்ற ஜக்கரிய்ய பாய் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றார்கள். ஏற்றதோடு நின்றுவிடாமல், அவர்கள் அன்று முதல் இன்றுவரை இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியை தடையின்றி, தடங்கலின்றி தொடர்ந்து செய்து வருகின்றார்கள்.

அவர்களுடைய இடைவிடா உழைப்பில், இஸ்லாத்தை ஏற்றவர்கள் ஏராளம்! எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே!!

நீடூர் நிகழ்ச்சி கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ஆகியோரின் சாதனை.

**காரைக்கால்**

அடுத்த நிகழ்ச்சிகள் காரைக்கால் பக்கம் திரும்பியது MGM என்ற சகோதரரின் வீட்டில் வைத்து நடந்தது. கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களுடன் இன்னும் இரண்டு இளவல்கள் கிடைத்தார்கள். அவர்கள்தாம் உமர் அல் கத்தாப். அமைதியானவர், ஆழமானவர், என்னோடு எல்லா சோதனையிலும் வார்த்தெடுக் கப்பட்ட தூணாய் துணை நின்றவர்.

அடுத்தவர் MSA என்று எங்களால் அழைக்கப்பட்ட செய்யித் அஹ்மத். இருவரும் தப்லீக் ஜமாஅத்-இல் தீவிரவமாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்.

எங்களுடைய பணிகளில் தங்களை இணைத் துக் கொண்டு திறம்பட உழைத்தவர்கள். அங்கே ஜெயபால் என்ற பெயரில், தலித்-ஆக அதாவது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தவராக இருந்து கிருஸ்தவத்தை ஏற்றுக்கொண்டு அங்கும் தீர்வு கிடைக்காமல், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர் இருவரும், எங்கள் இயக்கத்தில் கலந்து, இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியில் அங்கேயே நின்றார்கள். இவரது பெண் மக்கள் ஆலிம்களாக இருக்கின்றார்கள் என்ற செய்தியை அண்மையில் அவரை சந்தித்த போது அறிந்தேன். அகமகிழ்ந்தேன்.

அவர் நீண்ட நாள்கள் எங்கள் தாஃவா களத்தில் முழுநேர ஊழியராக இருந்தார். காரைக்காலில் இந்த இரு சகோதரர்களாக தொடர்ந்து - இன்றளவும் தாஃவா நடந்து கொண்டேதான் இருக்கின்றது.

அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலிகளை நிரம்பத் தந்திடுவானாக!

அடுத்து போடி கலவரம் நடந்த பகுதிகளை நோக்கி நடந்தோம்...


vaigarai velicham official

## திட்டச்சேரி

எங்கள் இஸ்லாமியப் பிரச்சார பணிகள் தொடர, தொடர எங்கள் பொதுமக்கள் தொடர்பும் வளர்ந்துகொண்டே வந்தது.

இந்நிலையில்தான், கொடிக்கால் அவர்களிடம் திட்டச்சேரி மணிமாறன், இளைய பெருமாள் ஆகியோருடன் தொடர்களை ஏற்படுத்தினார்கள்.

மணிமாறன் திட்டச்சேரி சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர். தலீத் சிறந்த போராளி - சட்டசபையில் சிறந்த பல உரைகளை நிகழ்த்தியவர்.

இளையபெருமாள் அவர்கள் தலீத் தலைவர், காங்கிரஸ் கட்சியின் முக்கியப் பிரமுகர். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவுமிருந்தார்.

இந்தியாவில் தீண்டாமை, ஜாதிவெறி இவற்றைப் பற்றி ஆய்வு செய்திட ஓர் குழுவை அமைத்தார். அன்றைய பிரதமர் இந்திராகாந்தி.

அந்த அறிக்கையைத் தயாரிக்கும் குழுவின் தலைவராகமிருந்தார் இளையபெருமாள்.

இந்த இளையபெருமாள் "சமூக நீதி கட்சி என்றொரு கட்சியையும் வைத்திருந்தார். அதன் பொதுச் செயலாளராக சிலகாலம் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களும், சிலகாலம் டி.எம்.மணி அவர்களுமிருந்தார்கள்.

இந்த இளையபெருமாள் ஏதோ சில ஆவணங்களைக் கேட்டு கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களை அழைத்திருந்தார்கள். கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள் என்னையும் அழைத்துச் சென்றார்கள். இளைய பெருமாள் அவர்களை சென்னை அரசு தோட்டத்தில் அமைந்திருக்கும் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் தங்கி இருந்தார்கள். நாங்கள் அங்கு சென்றுதான் இளையபெருமாள் அவர்களைச் சந்தித்தோம்.

இளையபெருமாள் அவர்களின் பேச்சின் ஊடே, என்ன அவசரம் என இஸ்லாத்திற்கு சென்றீர்கள்? என்றொரு கேள்வியைக் கேட்டார். கொடிக்கால் அவர்கள் சற்றும் ஆலோசிக்காமல் என்நேரமும் மரணம்வரும், வந்தால் நரகத்திற்கா போக முடியும்? என்றொரு கேள்வியை முன் வைத்தார்கள்.

இந்தக் கேள்வியால் இளையபெருமாள் அவர்கள், திடுக்கிற்று நின்றார். அவரைப்போல் நானும் சற்றே திடுக்கிற்று நின்றேன். முதலில் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களின் பதிலின் வேகம். அடுத்து, அதில் தெளிந்த ஈமானிய பலம். அல்ஹம்துலில்லாஹ்.

இதன்பின்னர் இடம்பெற்ற திட்டச்சேரி தாஃவா ஒருநாள் நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் மணிமாறன் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

தாஃவா நிகழ்ச்சி மிகப்பெரிய வெற்றி என்பதற்கான அடையாளம். அங்கும் பலர் திருக் கலிமாவை மொழிந்து இஸ்லாத்தை ஏற்றார்கள்.

இப்படி தஞ்சை மாவட்டத்தில் நடந்த தாஃவா நிகழ்ச்சிகளைப் பற்றி, அண்ணன் டி.எம்.மணி, பிற்றை நாள்களில் டி.எம்.உமர் ஃபாரூக் அவர்கள், அண்ணே நாம் மாற்றிய ஒரு ஆள் இன்று 35 பேர்களாக மாறியுள்ளார்கள் என அடிக்கடி சொல்வார்கள் மேடைகளில் பேசுவார்கள். நாங்கள் மகிழ்ச்சி அடைவோம்.

அல்ஹம்துலில்லாஹ்

## ஆடுதுறை நிகழ்ச்சி

ஆடுதுறை என்றாலே வழக்கறிஞர் இக்பால் அவர்களின் நினைவுகளே முந்திக்கொண்டு வரும்.

வழக்கறிஞர் இக்பால் அவர்கள் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணிகளில் காட்டிய ஆர்வம், ஒரு வழக்கறிஞரிடம் சற்று எதிர்பாராதது. பின்னர் தெரிந்து கொண்டோம். அவருடைய குடும்பம் ஓர் சமூக போராளிகள் கூட்டம்.

அவருடைய தந்தை ஓர் விடுதலைப் போர் வீரர் தியாகி எனப் பட்டம் பெற்றவர்.

இப்போது ஆடுதுறையிலும் ஓர் நிகழ்ச்சி ஏற்பாடு செய்ய வேண்டும் என முடிவு, பொறுப்பை எப்போதும்போல் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள்தாம் சுமந்தார்கள். அவர்களுக்கு உற்ற துணையாக ஆடுதுறை வழக்கறிஞர் இக்பால் அவர்கள் இருந்தார்கள். தொடக்க காலத்தில் வேலைகளை கவனித்தபின் நான் சென்னை சென்றுவிட்டேன்.

நிகழ்ச்சி அன்று காலையில்தான் வந்தேன். நான் கொடிக்கால் ஷேஹ் அவர்களைப் பார்க்கும்போது அவர் ஹாலில், இஞ்சி, பச்சை, பூண்டு முதலானவற்றைப் போட்டு இடித்துக்

கொண்டு நிற்கின்றார். அதாவது காலை, உணவு, மதிய உணவு ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு நிற்கின்றார்கள். பார்த்ததும் இதயம் கனத்தது, உடனேயே உடனிருந்த சகோதரர்களிடம் நீங்கள் அந்த வேலையை கையிலெடுங்கள் என்றேன். எல்லோரும் அப்போதுதான் விழித்தெழுந்ததுபோல் நின்றார்கள்.

ஆனால், கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள், அவர்களின் ஏனைய சகோதரர்களின் அன்பிற்குரிய மாமா அவர்கள் அவர்களோடு இரண்டற கலந்திருந்தார்கள். அதனால், எல்லோரும் மகிழ்ச்சியுடன் வேலைகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

இந்த ஆடுதுறை நிகழ்ச்சியில் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களும், டி.எம்.மணி அவர்களின் உரை ஓர் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்த ஆய்வறிக்கையைப் போல் அமைந்திருந்தது.

அந்த நூலை "எங்கே சமத்துவம், இங்கே கிடைக்கும் வாரீர்" என்ற தலைப்பில் வெளியிட்டோம். இது இலக்கியப் பணிமனை இலக்கியச் சோலை இவற்றைக் கடந்து, இப்போது வேர்கள் வெளியீட்டகத்தின் வழி வெளிவந்தது. இன்னும் அதில் தொளிக்கும் அறிவாழத்தைக் கண்டு மலைத்துப் போயிருக்கின்றேன்.

கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களின் உரைகள், உள்ளத்தை உறைய வைத்திடும். கண்களில் கண்ணீர் கரைபுரண்டோடும் அளவில் அமைந்திருக்கின்றது. ஆனால் அவற்றை உட்கார்ந்து எழுதித் தந்திடும் பழக்கம் ஏனோ கொடிக்கால் அவர்களிடம் படிய மறுத்துவிட்டது.

ஆடுதுறை நிகழ்ச்சியிலும், மதிய உணவு, மிகவும் நன்றாகவே அமைந்தது.

....... பரிமாறியதில் வழக்கறிஞர் இக்பால் அவர்கள் காட்டிய ஆர்வம், இவையெல்லாம் வந்திருந்த மக்களை பெரிதாகக் கவர்ந்தது. நாங்களும் மக்களோடு மக்களாக பந்தியிலே அமர்ந்து உணவருந்தினோம்.

நம்மை இத்துணை கண்ணியத்தோடு நடத்துகின்றார்களே! என அங்காலாயித்தவர்களும் உண்டு.,

டெல்லியிலே இருந்து வந்தவர்கள் இத்துணை Grass Root நிகழ்ச்சிகளில் நாங்கள் கலந்துகொண்டதே இல்லை. நீங்கள் இஸ்லாத்தின் செய்திகளை வேர்களுக்கு எடுத்துச் சென்று வீட்டீர்கள் என்றார்கள்.

**தேனி மாவட்டம்**

1982 போடி கலவரம் அப்போதுதான் நடந்து முடிந்திருந்தது. கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அந்தக் கலவரத்தின்போது களம் கண்டவர். அந்த மக்களுக்கு நிவாரணங்கள் பலவற்றை வழங்கியவர்.

இதெல்லாம் கொடிக்கால் அவர்கள் எங்களைப் போடிக்கு அழைத்துச் சென்றபோது தான் எங்களுக்குத் தெரியும்.

போடி விலக்கை எங்களுக்குக் காட்டினார்கள் கொடிக்கால் அவர்கள். அங்கு நடந்த துப்பாக்கிச் சூட்டில் இரண்டு தலீத்கள் இறந்துபோனார்கள்.

இந்தக் கலவரம், துரை ராஜபுரத்திலிருந்து தான் தொடங்கியது.

- அடுத்த இதழில் தொடரும்...



# உம்மு சல்மா என்ற அஸ்மா பின்த் யசீத் பின் அஷ்குன் (ரழி)

**இஸ்லாம்** என்ற கொள்கை நிலை நாட்டப் பட இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் எடுத்த முயற்சிகள், எதிர்கொண்ட போர்க் களங்கள் ஏராளம்! ஏராளம்!

பெருமானார் (ஸல்) அவர்களின் காலங் களிலும் அவர்களுக்குப் பின்னரும் நமது வீர சகோதரிகள் படைத்த சாதனைகளை இங்கே பட்டியல் போட்டு வருகிறோம்.

நமது சகோதரிகளின் வரலாற்றை எழுதினாலே வீரமும் போர்க் களங்களும் அவற்றில் தவறாமல் இடம் பிடித்துவிடும்.

அந்த அன்பு சகோதரிகளின் வாழ்க்கையை நாம் இங்கே பட்டியல் போடுவ தற்கு காரணம் இங்கே ஒரு பேச்சு எப்போதும் அடிபட்டுக் கொண்டிருக்கின்றது.

‘அது இஸ்லாத்தில் பெண்களுக்கு உரிமைகளே இல்லை பெண்கள் அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள். குறிப்பாக முஸ்லிம் பெண்கள் பர்தாவில் மூடப்பட்டு மூலையிலே முடக்கிப் போடப்படுகிறார்கள்.’ என்றொரு ஒப்பாரி ஒலம், நாள் தவறாமல் கேட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால் முஸ்லிம் பெண்கள் அவர்களுக்கான உரிமைகளைப் பெற்று, 1424 வருடங்கள் ஆகிவிட்டன.

அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்த காலங்களில் அவர்கள் தங்கள் உரிமைகளுக்காகக் கொடி பிடித்துக் கோஷம் போட்டுக் கொண்டிருக்க வில்லை. அல்லது உண்ணாவிரதங்கள் இருந்து சாலைகளை மறித்து உரிமைகளை யாசகமாகக் கேட்டுக் கொண்டிருக்கவில்லை.

அவர்கள் எல்லா உரிமைகளையும் இறை வனின் அருட்கொடையாகவே பெற்றார்கள். அவர்களின் இருப்பிடம் தேடிச் சென்றன அவர்களுக்கு வேண்டிய உரிமைகள். இஸ்லாம் என்ற ஒளி அவர்களுக்கு கிடைப்பதற்கு முன் அவர்கள் இன்றைய நவீன பெண்களைப் போல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழ்ந்தார்கள்.

இன்றைய நவீன சினிமாக்களில் வரும் பெண்களைப்போல் காட்சிப் பொருளாகவும் போகப் பொருளாகவும் அவர்கள் அந்த மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்தார்கள்.

ஆனால் இஸ்லாம் அவர்களின் பார்வையை



விசாலமாக்கி அவர்களின் ஆற்றல்களை அவர் களுக்கு உணர்த்திக்காட்டி அவர்களை சாதனை யாளர்களாய் வாழச் செய்தது. அவர்கள் வரலாறாய் வாழ்கிறார்கள்.

அதனால் தான் அவர்களின் வரலாற்றை எள்முனைஅளவுகூடபுரட்டினால்விரசங்களோ, ஆபாசங் களோ தலைகாட்டவில்லை, மாறாக அவர்களின் புனித வீர சாகசங்களே விரவிக் கிடக்கின்றன.

அவர்கள் கார் உள்ளவரையும், கதிர் உள்ளவரையும், வான் உள்ளவரையும். இந்த வையம் உள்ளவரையும், வாழும் போகும் வனப்பான கொள்கையாம் இஸ்லாத்தை இந்த உலகில் நிலைபெற தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தந்தவர்கள். அவர்கள் பொன்னை மிஞ்சும் வாழ்க்கையால் பல்லாயிரம் ஆண்டுகள் வாழப்போகும் மகளிர் தலைமுறைக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்து கொண்டிருப் பவர்கள்.

ஆக அவர்கள் உரிமைகளுக்காக ஊர்வலம் போனார்கள் என்பதைவிட ஓர் உன்னத கொள்கையின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் தங்களை தந்தார்கள் என்பதே உண்மை. இந்தப் பின்னணி யில் தான் முஸ்லிம் பெண்களை நாம் பார்த்திட வேண்டும்.

இந்த வகையில், அஸ்மா பின்த் யசீத் பின் அஷ்குன் (ரழி) அவர்களின் வாழ்க்கை நமக்கோர் அழகிய எடுத்துக் காட்டு. இஸ்லாம் நிலை நாட்டப்பட தன் வாழ்க்கையைத் தந்த சகோதரி தான் அஸ்மா பிந்த் யசீத் பின் அஷ்குன். அவர்களின் இன்னொரு பெயர் உம்மு சல்மா (ரழி).

இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து இடம் பெயர்ந்து மதினாவுக்கு வந்தபின் இவர்கள் இன்னும் பல பெண்களோடு வந்து பெருமானார் (ஸல்) அவர்களிடம் ‘பைஅத்’ செய்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

இவர்கள் ‘பைஅத்’ செய்திட இறைவனின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்தபோது இறை வனின் தூதர் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்கள் சிலருடன் அமர்ந்திருந்தார்கள்.

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு அதன் வழிகாட்டுதல்கள் வழி வாழ்ந்திட தமாராக இருப்பதாக உறுதி கூறிய இந்தச் சகோதரி பெருமானார் (ஸல்) அவர்களிடம்:

நான் முஸ்லிம் பெண்களிடமிருந்து உங்களுக்கு ஒரு செய்தியை கொண்டு வந்திருக் கிறேன். அல்லாஹ் ஆண்களுக்கும் பெண் களுக்கும் ஒன்றுபோலவே வழிகாட்ட உங்களை தூதராக அனுப்பினான். நாங்கள் உங்கள் வழிகாட்டுதல்களின் வழி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம். ஆனால் எங்களது உடல் பலம் ஆண்களின் உடல் பலத்திலிருந்து வேறுபட்டது. இதனால் அவர்கள் பல்வேறு சிறப்பான பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். நாங்கள் வீடுகளிலிருந்து குழந்தைகளை பராமரித்து வருகிறோம். அவர்களின் வீடுகளையும் உடமைகளையும் பாதுகாத்து வருகிறோம். எங்களுக்கு அவர்களைப் போல் (ஆண்களைப்போல்) நற்கூலிகள் கிடைக்குமா? எனக்கேட்டார்.

இதற்கு பெருமானர் (ஸல்) அவர்கள் இப்படிப் பதில் சொன்னார்கள்:

“தன் கணவனின் அன்பும் திருப்தியும் ஒரு பெண்ணுக்கு மிகவும் முக்கியம். அவள் ஒரு மனைவி என்ற அடிப்படையில் தனது கடமை களை அக்கறையுடன் நிறைவேற்றினால் அவளுக்கு நிச்சயமாசு ஆண்களுக்குக் கிடைப் பதைப் போன்ற நற்கூலிகள் கிடைக்கும்.”

இன்னொரு முறை அதே அஸ்மா, என்ற உம்மு சல்மா (ரழி) அவர்களிடம் இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் பல உறுதி மொழிகளை வாங்கினார்கள். அப்போது இந்த அன்பு சகோதரி இப்படிக் கூறினார்கள்:

நாங்கள் உங்கள் கைகளில் ‘பைஅத்’ எடுக்க விரும்புகிறோம். உங்கள் கையை நீட்டுங்கள்.’

இதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள்.

நான் பெண்களின் கைககளைத் தொட்டு பைஅத் எடுப்பதில்லை.”

பெருமானார் (ஸல்) அவர்கள் பெண்களிடம் பைஅத் எடுப்பதை பொருத்தவரை, அவர்கள் வாயால் கூறுவார்கள். பெருமானார் (ஸல்)


vaigarai velicham official

அவர்களும் வாய் மொழியில் பொருந்திக் கொள்வார்கள்.

ஆண்களுக்கு நிகராக அல்லாஹ்விடம் கூலியை பெற்றிடுவதில் இந்த அன்புச் சகோதரி காட்டிய ஆர்வத்திற்கு அளவே இல்லை.

'ஹந்தக்' என்ற அகழ் போரில் முஸ்லிம் களுக்குப் பணிவிடை செய்வதில் இந்தச் சகோதரி முன்னணியில் நின்றாள். இந்தப் போர் இஸ்லாமிய வரலாற்று ஓட்டத்தை மாற்றியது என்பதை அறிவர்.

ஹுதைபியா உடன் படிக்கையின் போது 'பைஅத்துல் ரிழ்வான்'ல் இந்தச் சகோதரியும் இடம் பெற்றார்கள். இந்த உடன்படிக்கையை அல்லாஹ்வே 'மகத்தான வெற்றி எனக் கூறினான். ' கைபர் போரிலும் இந்தச் சகோதரி கலந்து கொண்டாள். இப்படி இஸ்லாமிய வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளிளெல்லாம் இந்தச் சகோதரி உண்டு.

பெருமானார் (ஸல்) அவர்களின் மறைவுக் குப் பின்னும் இஸ்லாத்திற்காக தொடர்ந்து உழைக்கும் உத்தம பெண் மணியாய் திகழ்ந் தார்கள் இந்தச் சகோதரி. இஸ்லாமிய வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது 'யர்முக்' என்ற போர். இதில் தான் 'சிரியா' என்ற சிறப்பும் வளமும் நிறைந்த பகுதி இஸ்லாத்தின் ஆட்சியின் கீழ்வந்தது.

பைசாந்திய மன்னர் 'ஹிராக்கிளி யஸ்' மிகவும் அதிகமாக நேசித்த பூமி 'சிரியா'. ஆகவே என்ன விலை தந்தும் இந்தப் பூமியை காப்பது எனக் கங்கணம் கட்டிக் கொண்டு நின்றான் அவன்.

இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் (2,40,000) போர்வீரர்களை அவன் ஒன்று திரட்டினான். நீண்டதொரு பயிற்சிக்குப் பின் முஸ்லிம்களை எதிர் கொள்ள நின்றான்.

முஸ்லிம்கள் தரப்பில் வெறும் 40000 (நாற்பதாயிரம்) பேர்கள் மட்டுமே இந்தப் போரில் கலந்துகொண்டார்கள். போர் பல நாட்கள் நீடித்தது. வெற்றியும் தோல்வியும் மாறி, மாறி வந்துகொண்டிருந்தது. முஸ்லிம் படைவீரர்களுக்குத் தண்ணீர் தருவது, காயம் பட்ட வீரர்களுக்கு மருத்துவம் செய்வது போன்ற பணிகளை மட்டுமே பெண்கள் முதலில் செய்து வந்தார்கள்.

இந்தப் பணிகளில் முன்னணியில் நின்றது உம்மு சல்மா என்ற இந்த அஸ்மா பிந்த் யசீத் (ரழி) அவர்கள்தாம். முஸ்லிம்களில் சிலர் பின் வாங்கிய போது இந்தச் சகோதரி இப்படிக் குரல் கொடுத்தார்கள்.

"எங்களை (முஸ்லிம் பெண்களை) அல்லாஹ்வை நிராகரிக்கும் இவர்களிடமா விட்டுச் செல்லுகிறீர்கள்'

இந்தக் குரல் கேட்டதும் புத்துணர்வு பெற்ற வர்களாய் முஸ்லிம்கள் மீண்டும் களத்தில் குவிந்தார்கள். இத்தோடு நிற்கவில்லை தங்களுடைய கைகளிலிருந்த ஈட்டியால் குத்தி எதிரிகளில் பலரை வீழ்த்தவும் செய்தார்கள் இந்தச்சகோதரி. சில நேரங்களில் கூடாரங்களில் அமைக்கப் பயன்படுத்தப்படும் தூண்களைப் பிடுங்கி எதிரிகளைத் தாக்கினார்கள்.

இந்த உம்மு சல்மா என்ற அஸ்மா பிந்த் யசீத் (ரழி) அவர்களின் கீழ் ஒரு பெண்களின் படையே நின்று போரிட்டது என்கின்றார்கள் 'யர்முக்' போரை வரையும் வரலாற்று வல்லு நர்கள். போரின் பின்னணிபடை இவர்களு டையது என்று பெருமையோடு கூறுகிறார்கள் முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள்.

அஸ்மா பிந்த் யசீத் (ரழி) அவர்கள் கூடாரத் தின் தூண் ஒன்றை தன் கைகளில் ஏந்திக் கொண்டு நடத்திய தாக்குதலில் ஒன்பது ரோமர்கள் மாண்டார்கள் என்பது பிரிதொரு வரலாற்றுக் குறிப்பு. இந்தப் போருக்குப் பின் செல்வம் கொட்டிக்கொண்டே இருந்தது.

சிரியாவைவிட்டுப் பிரியும்போது "எத்தனை எழிலும் வளமும் கொஞ்சும் சிரியாவை விட்டுப்பிரிய நேரிட்டுவிட்டது" என்றா னாம் பேரரசன் ஹிராக்கிளியஸ். அந்த அளவுக்கு அன்று வளம் கொழித்த பூமி அது. இந்த வளம், இந்த அன்புச் சகோதரியின் எளிய வாழ்க்கையை எள்ளவும் பாதிக்கவில்லை. தன் இலட்சிய வாழ்க்கையில்தான் கொண்ட எளிமையை இந்த வீராங்கனை தனது இறுதி மூச்சு வரை காப்பாற்றிக் கொண்டார்களாம்.

இவர்களைப்போல் இந்தப் போரில் கையில் கிடைத்ததையெல்லாம் ஆயுதமாக ஆக்கிக் கொண்ட ஏனைய சகோதரிகளும் எளிமையாக வாழ்ந்தார்கள். உண்மையைச் சொல்வதானால் அவர்கள் செல்வத்தின் தாக்குதலிருந்து தங்கள் எளிய வாழ்க்கையைத் தற்காத்துக் கொண்டார்கள். இவர்கள் சிரியாவிலேயே இறந்தார்கள். (இன்றளவும் இவர்களின் அடக்கஸ்தலம் சிரியாவில் உள்ளதாம்.)

இந்தச் சகோதரிகளைப் பற்றிதான் அன்றைய கவிஞன் ஒருவன் இப்படிப் பாடினானாம்.

“BYZANTINE LICENTIOUS AND PER- SIAN LUXUARY HAD NOT DESTORYYED THE SIMP LICITY AND FREEDOM OF THE DESERTO”

அதாவது, பைசாந்தியர்களுடைய ஆபாசங்களும் பாரசீகர்களுடைய ஆடம்பரமும் பாலைவனத்தின் எளிமையையும் விடுதலை வேட்கையும் விழுங்கிட முடியவில்லை.”


இந்தப் பெருமைமிகு பாரம்பரியத் திற்கு சொந்தக்காரர்களான இன்றைய முஸ்லிம் பெண்கள் இப்படி சூளுரைக் கலாம். இன்றைய சினிமாக்கள் தரும் ஆபாசமும் வேண்டாம் ஜாஹிலிய்யாவின்

ஆடம்பரமும் நமக்கு வேண்டாம். இஸ்லாம் கூறும் எளிய வாழ்க்கையே நமக்குப் போதும் என்றும் நல்ல முஸ்லிம் பெண்களாய் வாழ்ந்திடுவோம்! வரலாறு படைப்போம் இந்த உலகில் இஸ்லாத்தை நிலைநாட்டி, அதன்மூலம் பெண்களுக்கு இறைவன் வழங்கிய உரிமைகள் எல்லோருக்கும் கிடைக்கச் செய்வோம்.

கட்டுரைக்கு உதவிய நூல்கள்:

1) THE IDEAL MUSLIM!
2) A SHORT HISTORY OF THE SARACENS
3) WOMEN COMPANIYAN OF THE HOLY PROPHET (SAW)
4) HISTORY OF THE ARABS BY PHILIP K. KITTY

**MGM**





நூலைப்பெற

போன்:
7401213394
7358278146
8148129887

விலை
ரூ.50/-

முஸ்லிம்களை ஏன் கட்டுப்படுத்தாது என்றால், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையினருக்கும் மத விவகாரங்களில் முழு சுதந்திரத்தை வழங்குகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ஆற்றல் மிக்கவையா? வழிகாட்டும் கொள்கைகள் ஆற்றல் மிக்கவையா என வருகின்றபோது அடிப்படை உரிமைகளே ஆற்றல் மிக்கவை. ஆகவே வழிகாட்டும் கொள்கையில் அமைந்துள்ள பிரிவு 44 நம்மை எந்த விதத்திலும் முஸ்லிம்களை கட்டுப்படுத்தாது. (ஆதாரம் *The Muslim of India. A Documentary Record by A.G.Noorani P.157-158)*

- நூலிலிருந்து




நூலைப்பெற

போன்:
7401213394
7358278146
8148129887

விலை
ரூ.25/-

இந்த சித்திரவதைக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள், தாங்கள் எங்கே அழைத்துச் செல்லப்படுகின்றோம் என்பதை அறிந்திடவே மாட்டார்கள். அவர்களின் கண்களை கட்டித்தான் அழைத்துச் செல்வார்கள். அவர்களை யாரும் சந்திக்க இயலாது. அவர்கள் தங்களை சித்திரவதைப் படுத்துபவர்களை மட்டுமே பார்த்திட இயலும். இவற்றில் முக்கிய சித்திரவதைக் கூடம் மும்பையிலுள்ளது. ஹயசநல - ஆய்ரி வசதி கூடம் என இதற்குப் பெயர். இங்கே நான்கு அறைகள் இருக்கின்றன. இங்கே வைத்துதான் 2006 மாலேகான் குண்டு வெடிப்போடு சம்மந்தப்பட்ட செய்யத் கான் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவர் விசாரிக்கப்பட்டார். சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

- நூலிலிருந்து


vaigarai velicham official





# நமது பிள்ளைகளின் எதிர்காலம் நம் கையில்.!

**நமது** குழந்தைகளைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்புகின்றோம். ஆனால் எல்லா குழந்தைகளும் நன்றாகப் படிப்பதில்லை. ஒரு சில குழந்தைகள் மிக நன்றாகப் படிக்கும். சில குழந்தைகள் நடுத் தரமாகப் படிக்கும். சில குழந்தைகள் மோசமாகப் படிக்கும்.

நமது குழந்தைகள் மோசமாகப் படிக்கின்றது என்றால் நாம் கவலைப் படுகின்றோம். அந்தக் குழந்தைகளை ஏசுகின்றோம். அவனைப் பார். இவனைப் பார்... எவ்வளவு நன்றாகப் படிக்கின்றான் என்று அங்கலாய்க்கின்றோம்.

நமது குழந்தைகள் மோசமாகப் படிப்பதற்கு என்ன காரணம் என்று எத்தனை பெற்றோர்கள் ஆராய்ந்துள்ளார்கள்? நமது குழந்தைகளின் படிப்புத்திறன் எந்த அளவில் உள்ளது என்று நாம் அறிவியல் பூர்வமாக ஆராய்ந்துள்ளோமா?

சில குழந்தைகள் படிக்க இயலாமை என்ற குறையால் அவதியுறும். சாதாரணமாக, இந்தக் குறை முதல் அல்லது இரண்டாம் வகுப்பு படிக்கும் பொழுதே சீராகிவிடலாம்.

ஆனால் அதன் பின்னும் இந்தக் குறை நீடிக்கும் குழந்தைகளை உடனடியாகக் கவனிக்க வேண்டும். என்ன காரணத்தினால் சரியாகப் படிக்க முடியவில்லை என்று கண்டுபிடிக்க வேண்டும். மருத்துவ நிபுணர்களின் கூற்றுப்படி, குழந்தைகள் எப்பொழுதும் உயர்ந்த நிலையிலேயே, முதல் தர வரிசையிலேயே இருக்க விரும்புவார்களாம். பிரபல குடும்பநல மருத்துவர் ஆப்ரஹாம் பவுல் இவ்வாறு கூறுகிறார்:

"குழந்தைகளுக்குப் படிக்க இயலாமை என்ற குறைபாடு வருவதற்கு முக்கிய காரணமாக கண் பார்வைக் கோளாறு இருக்கலாம். இந்தக் குழந்தைகளால் கரும்பலகையில் ஆசிரியர் எழுதிப் போடும் பாடங்களை சரிவர எழுத முடியாது. நாம் அதன் கண் பார்வை பிரச்னை தெரியாமல் ஏன் எழுதி விட்டு வரவில்லை என்று அந்தக் குழந்தையை அடிப்போம்.

சில குழந்தைகளுக்கு மதிநுட்பப் பிரச்சனைகள் (Intellectual Problems) இருக்கலாம். சில குழந்தைகளுக்கு பழக்க வழக்கங்களில் பிரச்சனைகள் (Behavioural Problems) இருக்கலாம். சில குழந்தைகளுக்கு படிக்க இயலாமை பிற்காலத்திலும் ஏற்படலாம். இந்தப் பிரச்சனைகள் குழந்தைகள் வளரும் போதும் தொடர்வதற்கு மாறுபட்ட வீட்டுச் சூழலோ, மாறுபட்ட பள்ளிச் சூழலோ காரணமாக இருக்கலாம்." இந்தப் படிக்க இயலாமைக் குறை இருக்கும் குழந்தைகளிடம் சில அறிகுறிகள் தென்படும். அவர்கள் எது இடது பக்கம், எது வலது பக்கம் என்று சொல்லக்கூட மிகவும் சிரமப்படுவார்கள். எளிதில் அவர்களால் இதனைச் சொல்ல முடியாது. நீண்ட நேரம் யோசித்துத்தான் சொல்வார்கள்.

வகுப்பில் ஆசிரியர் சொல்லும் அறிவிப்பு களை அவர்களால் வீட்டில் வந்து சொல்ல முடியாது.

அவர்களால் அதனைத் திரும்ப நினைத்துப் பார்க்க முடியாது. அவர்களால் வகுப்பில் பாடங் களைச் சரிவர கவனிக்க முடியாது. அவர்களால் மனதை ஒருமுகப்படுத்த முடியாது.

ஆனால் படிப்பது, எழுதுவது ஆகியவை சம்பந்தப்படாத இதர விஷயங்களில் அவர்கள் அதிக ஆர்வம் காட்டுவார்கள். உதாரணமாக, விளையாட்டு, பெயிண்டிங் போன்ற இதர துறைகளில் சிறப்பாக ஈடுபடுவார்கள்.

அதிகமான மந்தத்தன்மையும், எந்தக் காரியத் தையும் ஒருங்கிணைந்து செய்ய முடியாத தன்மையும் படிக்க இயலாமை என்ற குறையின் ஆரம்பக்கால அறிகுறிகள்...

இந்தக் குறைபாட்டிற்கு ஆங்கிலத்தில் டிஸ்லெக்சியா' என்பார்கள்.

இந்த 'டிஸ்லெக்சியா' என்ற வார்த்தை கிரேக்க மொழியிலிருந்து வந்தது. கிரேக்க மொழியில் இதன் பொருள் 'எழுத்துகளுடன் சிரமப்படுதல்' என்பதாகும்.

இன்னும் சில குழந்தைகளுக்கு வேறு மாதிரியான குறை இருக்கலாம்.

மனநல மருத்துவர் ஃபிலிப் ஜான் என்பவர் இவ்வாறு கூறுகிறார்:

“எதிலும் கவனம் செலுத்த முடியாமை, ஒரு காரியத்தை முடிக்காமலேயே அடுத்த காரியத்திற்குச் செல்வது, அடிக்கடி உடலை படபடப்புடன் அசைத்துக் கொள்வது, விளையாட்டுகளில் அவர்களது முறை வரும் வரை காத்திருக்க முடியாதது, அவர்களிடம் யாரும் பேசினால் அதனைக் கவனிக்க முடியா மலிருப்பது, விளைவுகளைப் பற்றிக் கவலைப் படாமல் காரியங்களில் ஈடுபடுவது போன்ற குறைகளும் குழந்தைகளிடம் இருக்கலாம்.

இன்னொரு மனநல மருத்துவர் ஜீசன் சி. உன்னி என்பவர் கூறுவதைக் கேளுங்கள்:

“டிஸ்லெக்சியா என்ற எழுத்துக்களுடன் சிரமப்படுதல் என்ற குறை உள்ள குழந்தையின் மூளையின் மொழி சம்பந்தமான பகுதி, சாதாரண குழந்தையின் மூளை போன்று இல்லாமல் சற்று வித்தியாசமாக இருக்கும். இந்த வித்தியாசம்தான் தகவலைச் சேகரிக் கவும், வெளிப்படுத்தவும் முடியாமல் அந்தக் குழந்தைகள் இருப்பதற்குக் காரணமாக இருக்கிறது.”

ஆனால் இந்தக் குறைகள் இருக்கும் குழந்தை களின் பெற்றோர்கள் கவலைப்படத் தேவை யில்லை. அவர்களை நல்ல முறையில் கவனித்துக் கொண்டால், உரிய சிகிச்சை அளித்தால் இந்தக் குறைகள் தாமாக மறைந்துவிடும். இதற்கென நிறைய குழந்தை நல சிகிச்சை மையங்கள் நாடு முழுவதும் உள்ளன. குஜராத்தில் காந்தி நகரில் குழந்தை நல மையம் ஒன்று உள்ளது. இது 'குழந்தை நலத்துக்கான இந்திய அகாடமி'யால் (Indian Academy of Paediatrics - TAP) நடத்தப் படுகிறது. இந்த மையத்திற்கு மட்டும் ஒரு வருடத்திற்கு 1000 குழந்தைகள் இம்மாதிரி சிகிச்சைக்காக வருகின்றார்களாம்.

சிசிச்சை என்றதும் பயந்து விட வேண்டாம். எல்லாம் அறிவுப்பூர்வமானவை. எளிதில் குழந்தைகளால் தாங்கிக் கொள்ளக் கூடியவை.

இந்தக் குழந்தை நல மையத்தில் ஐந்து பயிற்சியாளர்கள் இருப்பார்கள். பேச்சு, மொழிக் காக ஒருவர் இருப்பார். மந்தமாகப் படிப்பது சம்பந்தமாக ஒருவர் இருப்பார். இன்னும் ஒவ்வொரு குறைக்கும் ஒருவர் இருப்பார்.

இந்த மையங்கள் CBSE எனப்படும் உயர் நிலைக் கல்விக்கான மத்திய வாரியத்தினால் (Central Board of Secondary Education) அங்கீ கரிக்கப்பட்டவை.

இங்கு வரும் குழந்தைகளுக்கு சிறப்பான கவனம் செலுத்தப்படுகின்றது. முதலில் அவர்களது குறைகள் கண்டறியப்படுகின்றன. பின்பு அதற்கேற்றவாறு அக்குழந்தைகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பயிற்சிகளைத் தொடர்ந்து செய்து வந்தால், அந்தக் குழந்தை களை நன்கு கவனித்துக்கொண்டால் நாளடை வில் இந்தக் குறைகள் மறைந்துவிடும். ஆதலால் படிப்பில் ஆர்வம் குன்றிய எல்லாக் குழந்தை களும் முட்டாள்கள் அல்ல என்பதை நாம் உணர வேண்டும். அவர்களது இயல்பான பலவீனங்களை அறிந்து கொள்ளாமல் அடிப்பது, ஏசுவது என்பது அந்தக் குழந்தைகளை இன்னும் மோசமாகத்தான் ஆக்கும். அறிவியல் பூர்வமாக குழந்தைகளிடம் உள்ள பிரச்னைகளை அணுகினால் நமக்கு மன உளைச்சல் குறையும்; குழந்தைகளின் எதிர்காலமும் ஒளி மிக்கதாக இருக்கும்.

நமது பிள்ளைச் செல்வங்களில் எதிர்காலம் நமது கைகளில்தான் இருக்கின்றது!



vaigarai velicham official

### ஹஜ்ஜத்துல்-விதா அரஃபா தினத்தில்...

# பெருமானார் (ஸல்) அவர்கள் அள்ளித்தந்த அணிமணிகள்...

*அன்று மிக்குயர்ந்த மேடையில் பெருமானார் (ஸல்) அவர்கள்*

*1,24,000 இஸ்லாமிய மழவர்கள் அவர்கள் சொல்வதைக் கூர்ந்து கவனிக்கின்றார்கள். 23 ஆண்டுகால இடைவிடா உழைப்பால் திரட்டிக் காட்டிய மக்கள் திரள்.*

*பெருமானார் அவர்கள் பிரகடனப்படுத்துகின்றார்கள்.*

*ஐய்யாமுல் ஹாஹிலிய்யா என்ற அஞ்ஞான காலத்துப் பழக்க வழக்கங்கள் என் காலடியில்... உரையைத் தொடர்ந்து ஓர் வினா?*

*"நான் என்னுடைய தூதை உங்களிடம் முழுமையாக ஒப்படைத்துவிட்டேனா?"*

*குழுமி நின்றவர்கள் ஏகக்குரலில் ஆமாம்! ஆமாம்! என்றார்கள்.*

*உடனேயே பெருமானார் (ஸல்) அவர்கள் வானத்தை நோக்கி தன் விரலை உயர்த்தி அல்லாஹும்ம அஷ்ஹதன்! அல்லாஹும்ம அஷ்ஹதன்! அல்லாஹும்ம அஷ்ஹதன்! யா அல்லாஹ் நீயே சாட்சி என மூன்று முறை சொன்னார்கள்.*

*இப்போது அல்லாஹ் பிரகடனப்படுத்துகின்றான்....*

*"மார்க்கத்தை உங்களுக்கு முழுமையாக்கிவிட்டேன். இஸ்லாத்தை உங்களுடைய மார்க்கமாக ஆக்கிவிட்டேன்" என்ற வசனத்தை அருளினான். (அல்குர்ஆன்-5:3)*

*பின்னர் யவ்முல் நஹ்ர் என்ற குர்பானி நாளில் இதே கேள்வியை பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள், மக்களின் ஒப்புதலைப் பெற்றார்கள்.*

*பின்னர் கூறினார்கள் - இல்லை கட்டளையிட்டார்கள்.*

*"இங்கே வந்திருப்பவர்கள், இங்கே வந்தவர்களுக்கு இந்தச் செய்தியைக் கொண்டு செல்லுங்கள்"*

*உடனேயே உத்தம நபித்தோழர்கள் தங்கள் குதிரைகள் - எந்தத் திசையை நோக்கி நின்றனவோ அந்தத் திசையை நோக்கிப் பயணம் செய்தார்கள். பலர் மீண்டும் அரேபிய நிலத்திற்குத் திரும்பிடவில்லை.*

*பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மக்களை, எப்படி மாற்றினார்கள் என்பதை பண்டித நேரு அவர்கள் எதற்கும் லாயக்கற்ற மக்களாக வாழ்ந்த அந்த மக்கள் சாதனையாளர்களாக மாறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மக்களுக்குத் தந்தவை.*

*அசையா நம்பிக்கை* - Confidence

*நீங்கா நெஞ்சம்* - Courage


*இலட்சிய நோக்கு* - Vision

*அதை அடையும் வேகம், விவேகம்.*

*இதைத்தான் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் லட்சியம் என்கின்றோம்.*

**- MGM**

# இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு....!




வேர்கள் வெளியீட்டகம்

- மட்காவ்ன் (கோவா) குண்டு வெடிப்பு (2009):

  2009ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி தீபாவளிக்கு ஒரு நாள் முன்பு மட்கால்ன் நகரைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இந்துக்கள் ஒன்று கூடும் இடத்தை வெடிகுண்டு வைப்பதற்கென தேர்வு செய்திருந்தார்கள், சம்பவ இடத்தில் ஒரு கைப்பையை வைத்து விட்ட்டிருந்தார்கள். அதில் கான் மார்கெட் என அச்சிடப்பட்டிருந்தது.

- அந்தப் பையில் முஸ்லிம்கள் பயன்படுத்தும் அத்தர் நறுமணக் குப்பிகள் இருந்தன.

  அதாவது திட்டமிட்டப்படி இந்தக் குண்டு வெடித்திருந்தால் நூற்றுக்கணக்கான அப்பாவி இந்துக்கள் மாண்டிருப்பார்கள். காவல்துறையின் சந்தேகம் உடனடியாக முஸ்லிம்கள் மீது தான் விழும். முஸ்லிம்கள் பலர் சிறைப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகள் புனையப்பட்டு படுபயங்கரமான விஷயங்கள் ஊடகங்களில் பரப்பப்பட்டிருக்கும். அவையாவும் குற்றப்பத்திரிகையாக தாக்கல் செய்யப்படும். அவையும் ஊதி ஊதி பெருக்கப்படும். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இவையாவும் பொய்யானவை, உமையான குற்றவாளிகளை காவல்துறை கைது செய்யவில்லை என்று நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்யும்......

- இந்த நூலிலிருந்து

விலை ரூ.30/-

படியுங்கள்! நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

பாசிசத்தை மாய்க்கவும் - பாரதத்தை பாதுகாக்கவும் முன் வாருங்கள்

போன் : 7401213394 / 7358278146 / 8148129887


## விரைவில் உங்கள் கைகளில்...






**நேற்று**

உலகைப் படைத்தான் இறைவன். அதில் மிகவும் அழகிய படைப்பாய் மனிதனைப் படைத்தான். இந்த மனிதன் பூமியில் வாழும் காலம் வரை தன் வாழ்க்கையை முறையாக அமைத்துக் கொள்ள, அவன் வாழ்வதற்கு வழியையும் காட்டினான். இதற்காக அருளப் பட்டவையே இறைவேதங்கள்.

அவற்றின் வழி வாழ்ந்து, மனிதர்களுக்கோர் அழகிய முன்மாதிரியாக வாழ்ந்தவர்கள் இறைத் தூதர்கள். இப்படி இறைவனால் அருளப்பட்ட இறுதி வேதமே குர்ஆன். மனித இனத்துக்கு அனுப்பப்பட்ட இறுதி நபி முஹம்மத் (ஸல்) ஆவார்கள்.

இறைவனால் மனிதர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்ட இறுதி வழிகாட்டுதலே இஸ்லாம்.

இஸ்லாம் அன்று அந்த மக்களிடம் புரையோடிப் போயிருந்த எல்லா மூடப் பழக்கவழக்கங்களையும் மண் மூடிப்போகச் செய்தது. அவர்கள் வீழ்ந்து கிடந்த அனாச்சாரங் களிலிருந்து அவர்களை விடுவித்தது. நாகரிக மிக்கதொரு மக்கள் கூட்டமாக அவர்களை ஆக்கிக் காட்டிற்று. அவர்களைக் கொண்டே இந்த இறை வழிகாட்டுதலை உலகத்தில் வாழ்ந் திடும் மக்களுக்கெல்லாம் அறிமுகப்படுத்தியது.

இஸ்லாம் எவ்வளவு வேகமாகப் பரவிற்று என்பதை இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித நேரு இப்படிக் குறிப்பிட்டார்:

'முஹம்மத் அவர்களின் மரணத்திலிருந்து சுமார் நூறு வருடங்களுக்குள்ளால் அரபு சாம்ராஜ்யம், பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளின் தென் பகுதியிலிருந்து

வடக்கு ஆப்பிரிக்கா சூயஸ், பாரசீகம், மத்திய ஆசியா மற்றும் மங்கோலியா வரை பரவிற்று. இத்துணை வேகமாகப் பரவிய இஸ்லாம். நான் தொட்ட இடங்களில் மனிதனை மனிதன் அடிமைப்படுத்தும் மடமையை ஒழித்தது. "இனவெறியையும், நிறவெறியையும் இல்லாமல் செய்தது.

மனிதர்களுக்கிடையே சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் நிலைநாட்டிற்று சகோதரத்துவமும் சமத்துவமும் அதன் வெற்றிக்கு மிக முக்கியமான காரணங்களாகும். கறுப்பு அடிமையும், குறைஷிகள் என்ற உயர்ந்த குலத்தவர்களும் சீப்பின் பற்களைப் போலச் சமமாக நடத்தப்பட்டார்கள். இஸ்லாம் பரவிய இடங்களில் எல்லோரும் ஒட்டுமொத்தமாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள் எனச் சொல்வதற்கில்லை. இன்னுஞ்சொன்னால் அது சென்ற இடங்களில் பெரும்பான்மை மக்கள் இஸ்லாத்தை ஏற்காதவர்களே!

இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாத மக்க ளின் உரிமைகளைப் பாதுகாப்பது இஸ்லாமிய அரசின் அல்லது இஸ்லாமியச் சமுதாய அமைப்பின் கடமை.

# இஸ்லாம்:

## நேற்று... இன்று... நாளை...



இஸ்லாமியச் சமுதாய அமைப்பில் முஸ்லிம்களின் உரிமைகளும் கடமைகளும். முஸ்லிமல்லா தவர்களின் உரிமைகளும் கடமைகளும் முறையாக வரையறுக்கப்பட்டிருந்தன.

இதனால் எல்லா மக்களும் எந்த மோதலும் பூசலுமில்லாமல் வாழ்ந்தார்கள். அனைவரின் திறமைகளும் மதிக்கப்பட்டு, அவரவர்களுக்கு உரிய முக்கியத்துவமும் வழங்கப்பட்டது. இதனால்தான் இஸ்லாம் அத்துணை வேகமாகப் பரவிற்று.

இஸ்லாத்தின் பரவலைப் படை கொண்டு தடுக்க வந்தவர்களையும் இஸ்லாம் படை கொண்டு எதிர்கொண்டது.

இதுவும் அதற்கு வலுசேர்த்தது. முஸ்லிம்களுக்கு இஸ்லாம் கற்றுத்தந்த சகிப்புத் தன்மையும், பெருந்தன்மையும் இஸ்லாம் இன்னும் வேகமாகப் பரவுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது. யூதர்களும், கிறிஸ் தவர்களும்கூட முஸ்லிம்கள் ஆண்ட நிலப் பரப்பில்தான் மிகவும் நிம்மதியாக வாழ்ந்தார். கள் என்பது வரலாற்று உண்மை.

வரலாற்று ஆசிரியர்களான லாரி காலின்ஸ், டொமினிக் லேப்பியர் ஆகியோர். ‘ஓ! ஜெரூசலம்’ என்ற நூலில் இப்படிக் குறிப்பிடுகின்றார்கள்:

“ஓரிரு விதிவிலக்குகளை விட்டுவிட்டால் யூதர்கள் அரபுக்களின் கீழ்தான் பாதுகாப்பாக வாழ்ந்திருக்கின்றார்கள். இவர்கள் அலைக்கழிக் கப்பட்ட நாட்களில், இவர்களின் பொற்காலம் ஸ்பெயினை ஆட்சி செய்த கலீஃபாக்களின் ஆட்சியின்போதும், உஸ்மானிய துருக்கியர்களின் ஆட்சியின் போதும்தான் வந்தது. அப்போது ஐரோப்பாவின் கதவுகள் இவர்களுக்குச் சாத்தப்பட்டே இருந்தன. ஜெர்மனியின் மயானங்களில் முடிந்த தொடரான குரூரங்களை இவர்கள் மீது கட்டவிழ்த்துவிட்டது ஐரோப்பாவே அல்லாமல் இஸ்லாமியக் கிழக்குலகு அல்ல.

இஸ்லாம் வேகமாகப் பரவுவதற்கு, அதன் நீதி தவறாத நேரிய நல்லாட்சி காரணமாக அமைந்தது.

**இன்று**

பரவிய வேகத்தில் பல வளமான பகுதிகளில் இஸ்லாம் நிலைத்தது. முஸ்லிம்களுக்கு மிகவும் வளமான ஒரு வாழ்க்கையை அமைத்துத் தந்தது.

இந்த வளமான வாழ்க்கை அவர்களைத் தங்களது இலட்சியத்தில் சற்று தடம் பிறழச் செய்தது. சிலுவைப் போர், மங்கோலியர் தாக்குதல் - அவர்களை ஒட்டு மொத்தமாக அழித்திடுமோ என்ற அச்சம்கூட வந்தது. அல்லாஹ் அவர்களைக் காப்பாற்றினான்.

*1917* வரை அவர்கள் ஒருங்கிணைந்த தலைமை யைப் பெற்றிருந்தார்கள்.

அதுதான் துருக்கியிலிருந்த தலைமை. *1924*-ல் இந்தத் தலைமை பெயரளவில் கூட இல்லாமல் ஆனது. இஸ்லாத்தின் தலைமையின்கீழ் இருந்த நிலப்பரப்பும் பிரிக் கப்பட்டது; இஸ்ரேலும் உரு வாக வழி காணப்பட்டது.

*1947* நவம்பர் *26*-ல் இஸ்ரேல் ஐ.நா.வின் அங்கீகாரம் பெற்றது.

முஸ்லிம் உலகம், சலசலப் புக்கும், பின்னர் கொந்தளிப்புக்கும் ஆளானது. எனினும் முஸ்லிம்களின் அழகிய முயற்சியால் இஸ்லாம் இன்றும் மிகவும் வேகமாகவே பரவி வருகிறது. உலகில் இன்று அதிவேகமாக வளர்ந்து வரும் மார்க்கம் இஸ்லாம்! அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இதுவே நிலை.

இஸ்லாத்தின் இந்த வேகமான வளர்ச்சியைத் தடுக்கும் சதியொன்று அதைவிட வேகமாக வளர்ந்தது. முஸ்லிம்களால் எந்தப் பாதிப்பிற்கும் உள்ளாகிவிட்டாலும் இஸ்லாத்தின் வளர்ச்சியை அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

குறிப்பாக ரஷ்யா என்ற வல்லரசு வீழ்ந்து, அமெரிக்கா மட்டுமே வல்லரசானபோது அது தனது ஏதேச்சதிகாரத்திற்கு ஒரே எதிரி இஸ்லாம்தான் எனக் கருதிக்கொண்டது.

அமெரிக்க வெளி விவகார அமைச்சகமும் இதுகுறித்து அவ்வப்போது விவாதித்தது. இதற்கு ஆதாரமாக சமீபத்தில் சில நூல்களும் வெளிவந்துள்ளன.

ஐந்து வேளை தொழுபவர்கள் எல்லாம் இஸ்லாமிய எழுச்சியை லட்சியமாகக் கொண்டவர்கள் எனக் காட்டும் முயற்சியே ‘இஸ்லாமிய எழுச்சியின் குரல்கள்’ (Votes of Resurgent Islam) என்னும் நூல்.

இஸ்லாமிய அபாயம் உண்மையா? கற்பனையா? (Islamic Threst : Myths of Reality) என்ற விவாத நூல். இந்நூலின் ஆசிரியர் Esposito,

இஸ்லாம் ஓர் அபாயம் என்ற அளவில் பார்க்க வேண்டாம். ஆனால் அதை ஒரு சவாலாகப் பார்க்க வேண்டும் என்கிறார்.

மேலை நாட்டுக் கலாச்சாரத்தின் பிரதான எதிரியாகச் சிலர் இஸ்லாமியக் கலாச்சாரத்தைக் காட்டுகின்றனர்.

இவர்கள் இஸ்லாமிய எழுச்சி என விவாதத்தைத் தொடங்கி, இஸ்லாமிய அபாயம் என்றுபேசி, இப்போது இஸ்லாமியத்தீவிரவாதம் எனக்கொண்டு வந்து, இப்போது "இஸ்லாம்" என்ற சொல்லைப் பயன்படுத்தாமலே அதைத் தீவிரவாதத்தோடு ஒப்பிட்டு விட்டார்கள்.

இது இன்று முஸ்லிம்களுக்கு மிகப்பெரிய தொரு நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கின்றது. அவர்களின் இஸ்லாமியப் பிரச்சாரம் ஸ்தம்பித்துப் போய்விட்டது.

அமெரிக்காவிலும், இன்னும் மேலை நாடுகளிலும் இஸ்லாத்தை வாழ்வின் முழுமை யான வழிகாட்டி எனப் பிரச்சாரம் செய்து வந்தவர்கள், "நாங்கள் தீவிரவாதிகள் அல்ல" என நிரூபிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்.

செப்டம்பர் - 11 நிகழ்வுகளுக்குப் பிறகு ஒரு நொடியில் மொத்த உலகமும் அவர்களுக்கு எதிராகத் திருப்பப்பட்டுவிட்டது. இதுபோன்ற நெருக்கடிகள் அவர்களுக்கு முன்னரும் ஏற்பட்டி ருக்கின்றது. அவற்றிலிருந்தெல்லாம் வெளியே வந்து ஆக்கப்பூர்வமான பணிகளை அவர்களால் செய்ய முடிந்திருக்கிறது. இப்போது அவர்களால்

வெளிவரமுடியும் விரக்திக்கோ விவேக மற்ற முடிவுக்கோ அவர்கள் ஆளாகாமல் இருந்தால் போதும். மீண்டும் ஆக்கப்பூர்வ மான பணிகளுக்கு அவர்கள் திரும்ப முடியும்.

**நாளை**

இனிவரும் நாட்களிலும் மனிதர்களின் பிரச்சனைகளைத் தீர்க்கும் மார்க்கமாக இஸ்லாமே இருக்கும். காரணம்

1. இஸ்லாம் கொண்டு வந்த சமூக நீதி - மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள் என்ற நீதி - இன்றும் கிடைக்காத மனிதர்கள் ஏராளமாக உள்ளனர். டர்பன் நிகழ்வுகள் இதற்கு அப்பட்ட மான சாட்சி.

2. மனிதர்களிடையே நீதி செலுத்துவதில் இஸ்லாம் மேற்கொண்ட நியதிகள் இன்றும். இன்றுபோல் என்றும் மனிதர்களுக்குத் தேவைப்படுகின்றது. உலகின் பல்வேறு பாகங்களிலும் நடக்கும் கபளீகரங்களுக்கும், கொந்தளிப்புகளுக்கும் காரணம். நீதி கிடைக்காததே!

ஆக, இஸ்லாம் செயல்படுத்திய நீதி நெறிமுறை மனி தர்களில் பலருக்கு இன்னும் சென்று சேர வேண்டியிருக் கின்றது.

3. மனித சமுதாயத்தில் நிம்மதி, அமைதி என்பவை எல்லோருக்கும் நீதி கிடைக்கச் செய்வதன் மூலமே நிலை பெறும். நேற்று போல இன்றும். இனி நாளையும் இதனை வழங்கும் வல்லமை இஸ்லாதிற்கு உண்டு.

4. இதைப் போலவே ஒரே நிலப்பரப்பில் பல்வேறு சமூகங்களை, கலாச்சாரங்களை. மத நம்பிக்கைகளை அமைதியாக வாழ வைத்த உன்னத வரலாறு இஸ்லாத்திற் உண்டு. இனிவரும் நாட்களில்" தேவை எப்போதும் இல்லாத அளவுக்கு இருக்கின்றது. ஆகவே இஸ்லாம் எதிர்வரும் நாட்களில் ஏற்புடையதாக இருக்கப்போகின்றது.

5. அனைத்துச் சமுதாயத்தையும் அரவணைத்துச் செல்கின்ற சகிப்புத்தன்மையும் பெருந்தன்மையும் இஸ்லாத்திற்கு உண்டு. இதனால் இந்த உலகிற்கு முன்னெப்போதையும் விட அதிகமாக இஸ்லாம் தேவைப்படலாம்.

இவற்றையெல்லாம் விட, இறப்பிற்குப் பின்னால் வரும் வாழ்க்கைக்கு வழிகாட்ட வல்ல மார்க்கமாகவும் இஸ்லாம் இருக்கின்றது.

முஸ்லிம்களின் வரலாற்றை ஆராய்ந்து அதனை மிகவும் விரிவாக எழுதிய வரலாற் றாசிரியர் பிலிப் கே.ஹிட்டி கூறுகிறார்:'

"அவர்களுடைய வளப்பான பாரம்பரியம். நிகரற்ற இயற்கை வளங்கள், எண்ணெய் வளங்கள். இவற்றைக் கொண்டு அவர்கள் (முஸ்லிம்கள்) மனித இனத்தின் பௌதிக முன்னேற்றத்திற்கும், ஆன்மிக முன்னேற்றத் திற்கும் மிகப்பெரியதொரு பங்கை ஆற்றிட முடியும். இதனைச் செய்ய முஸ்லிம்கள் முன் வரட்டும், இனிவரும் நாள்களும் அவர்களுக்கே!"

(History of the Arabs by Philip K.Hitty, 10th Edition, pp.757)

இறைவனும், இறைத்தூதரும் இதனையே வாக்களித்துள்ளார்கள்.

**- MGM**

# அல்லாஹ் விரும்பும் தியாகம்

**மனித** வாழ்வில் தங்கள் லட்சியங்களில் வெற்றி பெற மிகவும் அவசியமான ஒன்று தியாகம். தியாக உணர்வு இல்லாத தனி மனிதனோ அல்லது ஒரு கூட்டமோ நிச்சயமாக வெற்றி பெற முடியாது.

"இறை நம்பிக்கையாளர்களே! துன்புறுத்தும் வேதனையிலிரந்து உங்களைக் காப்பாற்றக்கூடிய வியாபாரத்தை உங்களுக்கு நான் அறிவித்து தரட்டுமா? அல்லாவின் மீதும் அவனுடைய தூதரின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். மேலும் அல்லாஹ்வின் வழியில் உங்கள் பொருள்களாலும் உயிர்களாலும் தியாகம் செய்யுங்கள். நீங்கள் அறியக்கூடியவர்களாயின் இதுவே உங்களுக்கு சிறந்ததாகும்"

*(அல்ஸஃப்-10.11)*

"நிச்சயமாக அல்லாஹ் இறை நம்பிக்கையாளர்களிடமிருந்து அவர்களின் உயிர்களையும், உடைமைகளையும் சுவனத்திற்குப் பகரமாய் விலைக்கு வாங்கிக் கொண்டான். அவர்கள் அல்லாஹ்வின் வழியில் போர் புரிகின்றார்கள். கொல்லப்படுகின்றார்கள் அவர்களுக்கு சுவனம் கிடைக்கும் எனும் வாக்குறுதி அல்லாஹ்வின் பொறுப்பிலுள்ள ஒரு திடமான வாக்குறுதியாகும்" *(தவ்பா-111)*

அல்லாஹ் எங்கெல்லாம் தியாகத்தை பற்றி குறிப்பிடுகின்றானோ அங்கெல்லாம் செல்வத்தையும், ஒரு முஸ்லிமின் தியாகத்தில் அல்லாமல் இதனால்தான் நபிமார்களும், ஸஹாபாக்களும் தீனுக்காக இந்த இரண்டையும் வாரி வழங்குவதில் அதிக ஆர்வம் கொண்டவர்களாக இருந்தார்கள்.

**உயிர்த் தியாகம்**

*முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள்...*

*உயிர் தியாகிக்கு அல்லாஹ் ஆறு சிறப்புகளை தருகின்றான்.*

*1) அவரது உடலிலிருந்து முதல் சொட்டு இரத்தம் விழுந்தவுடன் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடுகின்றன. சொர்க்கத்திலுள்ள அவரது இருப்பிடம் அவருக்கு காட்டப்படுகிறது.*

*2) மண்ணறையின் (கப்ரு) வேதனையிலிருந்து அவர் காப்பாற்றப்படுகிறார்.*

*3) (மறுமை நாளில் ஏற்படும்) மாபெரும் திடுக்கத்திலிருந்து அவர் பாதுகாப்புப் பெற்றவராக இருப்பார்.*

*4) அவருடைய தலையில் கௌரவ கிரீடம் சூட்டப்படுகிறது. அதில் பதிக்கப்பட்டுள்ள ஓர் இரத்தினக் கல் இவ்வுலகத்தையும் அதில் உள்ளவற்றையும்விடச் சிறந்ததாகும்.*

*5) ஹூருல்ஈன் எனும் (சொர்க்கம்) பேரழகியரில் எழுபத்து இரண்டு பேர் அவருக்குத் துணைவியராக மணமுடித்து கொடுக்கப்படுவர்.*

*6) அவர் தம் உறவினரில் எழுபது பேருக்குச் செய்யும் பரிந்துரை ஏற்படுகிறது.*


vaigarai velicham official

அனஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது,

ஹாரிஸி பின் சுராகா (ரலி) அவர்களின் தாயாரான உம்மு ருபைய்யிஉ பிந்து அல்பராஉ (ரலி) அவர்கள் அருமை நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து “நாயகமே ஹாரிசாவைப் பற்றி எனக்குத் தாங்கள் அறிவிக்க மாட்டீர்களா? அவர் பத்ருப் போரன்று கொல்லப்பட்டிருந்தார். அவர் மீது எங்கிருந்தோ வந்த அம்பு ஒன்று பாய்ந்து விட்டிருந்தது. அவர் சொர்க்கத்தில் இருந்தால் நான் பொறுமையாக இருந்து விடுவேன். அவர் வேறு எந்த நிலையிலாவது இருந்தால் அவருக்காக நான் கடுமையாக அழுவேன் என்று கூறினார்கள்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்...

ஹாரிஸாவின் தாயே சொர்க்கத்தில் பல சோலைகள் உள்ளன. உன்னுடைய மகன் (அவற்றில்) மிக உயர்ந்த “பிர்தௌஸ்” எனும் சொர்க்கச் சோலையை (தன் உயிர்த்தியாகத்திற்கு பிரதிபலனாக) பெற்றுக் கொண்டார்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்....

சொர்க்கத்தில் நுழையும் எவரும் உலகிலுள்ள பொருட்களையெல்லாம் அவருக்கு கிடைப்பதாக இருந்தாலும் உலகிற்குத் திரும்பி வர விரும்ப மாட்டார்கள். உயிர்த் தியாகியைத் தவிர. அவர் தமக்கு (இறைவனிடத்தில் கிடைக்கும் கண்ணியத்தை கண்டுவிட்ட காரணத்தால் உலகிற்குத் திரும்பி வந்து (இறைவழியில்) பத்துமுறை கொல்லப்பட வேண்டும் என்று ஆசைப்படுவார்.

இறைவழியில் செலவு செய்தல்

“இறை வழியில் தங்கள் பொருட்களைச் செலவழிப்போர்களின் உவமானம், ஒரு தானிய விதையைப் பயிரிடுவது போன்றதாகும். அதிலிருந்து ஏழு கதிர்கள் முளைக்கின்றன. ஒவ்வொரு கதிரும் நூறு தானிய மணிகளைக் கொண்டுள்ளது. இவ்வாறு இறைவன் தான் நாடுவோருக்கு அவர்களின் நற்செயல்களின் பயன்களைப் பன்மடங்காக்குகிறான். மேலும் இறைவன் அதிகமதிகம் வழங்குபவனும் யாவற்றையும் நன்கு அறிந்தவனுமாய் இருக்கின்றான். (அல்பகரா-261)

கிராமவாசிகளில் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புவோரும் உள்ளனர். தாம் செலவிடுவதை அல்லாஹ்டம் நெருங்குவதற்குரிய காரணமாகவும் இத்தூதரின் முஹம்மது நபி (ஸல்) பிரார்த்தனைக்குரியதாகவும் கருதுகின்றனர். கவனத்திகொள்க அது அவர்களுக்கு (இறை) நெருக்கத்தைப் பெற்றுத் தரும். அவர்களை அல்லாஹ் தனது அருளில் நுழையச் செய்வான். அல்லாஹ் மன்னிப்பவன், நிகரற்ற அன்புடையோன். (தவ்பா-99)

சகோதரர்களே வருடந்தோறும் தியாகத் திருநாளில் நாம் குர்பானி பிராணிகளை பலியிடுகிறோம். இறைவன் வருடம் ஒருமுறை மட்டும் நம்மிடம் தியாகத்தை எதிர்பார்க்க வில்லை. தியாகத்திற்கு என்று ஒரு தினத்தை இறைவன் நிர்ணயிக்கவில்லை. மாறாக, இந்த தீன் மேலோங்குவதற்காக எப்போதெல்லாம் நம்முடைய உயிர், செல்வம் தேவைப்படுகின்றதோ அப்போதெல்லாம் எந்தவித கணக்குமின்றி நாம் இவைகளை தியாகம் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட தியாகத்தை உணர்வை, நம்மில் ஏற்பட வேண்டும் என்பதற்காகத் தான் அல்லாஹ் இந்த தியாகத் திருநாளை ஏற்படுத்தியுள்ளான்.






# ஷஹாதத்-இரத்த சாட்சியம்

# ஈரான் குடியரசுத் தலைவர் ரெய்சி / அமீர் அப்துல்லாஹியான் ஆகியோர் வீர மரணம்

## இஸ்ரேலி சதியா..? இஸ்லாத்தின் வழிகாட்டுதல் என்ன..?

**19.05.2024** மாலை 4.20 மணிக்கு இவர்கள் இருவரும், ஒரு ஹெலிகாப்டர் விபத்தில் இறந்தார்கள்.

இறந்த இரண்டு பேரும், மிகவும் முக்கியமானவர்கள்...

உலக மக்கள் பார்வையிலும், காஸாவில் போராடும் போராளிகளின் பார்வையிலும்...


இவர்கள் இந்த Axis of Islamic Resistanceக்கு இஸ்லாமியப் போராளிகள் குழுமத்திற்கும் பாலஸ்தீன குழுமத்திற்கும் முக்கியமானவர்கள்.

காரணம், சர்வதேச அளவில் இந்த Axis of Islamic Resistance என்ற இஸ்லாமியப் போராளிகள் குழுக்களை இணைத்தார்கள்.

ஈரானின் வெளி விவகாரத்துறை அமைச்சர் ஹுஸைன் அப்துல்லாஹியான் அவர்கள் எடுக்கும் அனைத்து முடிவுக்கும் குடியரசு தலைவர் செய்யீத் இப்றாஹீம் ரெய்சி அவர்களின் சம்மதம் மிகவும் முக்கியம். அது உடனுக்குடன் கிடைத்துக் கொண்டிருந்தது.

இஸ்ரேலை எதிரியாக நினைத்தார்கள் என்றில்லை. செயற்களத்திலும் இறங்கினார்கள். தங்கள் எதிர்ப்பிற்குப் போர் வடிவம் தந்தார்கள்.

சுப்ரீம் லீடர் Supreme Leader -அல்லது தலைமை இமாம் அயாத்துல்லாஹ் செய்யீத் அலீ காமின் அவர்கள் ஈரானின் குடியரசு தலைவர், செய்யீத் இப்றாஹீம் ரெய்சியிடம்





மிகுந்த மரியாதை உடையவராக இருந்தார்.

இருவரும் ஜிஹாத் ஃபீஸபிலில்லாஹ் என்ற அல்லாஹ்வின் வழியில் போர் என்பதில்தான் தீர்வு இருக்கின்றது என்பதில் அழுத்தமான நம்பிக்கையுடையவர்கள். இவர்கள் ஒரே கருத்தைக் கொண்டிருந்தார்கள். அதனால் குடியரசுத் தலைவர் சம்மதம் கிடைத்தவுடன் சுப்ரீம் லீடர் - தலைமை இமாம் அவர்களிட மும், அனுமதிக் கிடைத்துவிடும். ஆதலால் இஸ்ரேலை எதிர்த்து நிற்பவர்களுக்கு, அதாவது இஸ்லாமியப் போராளிகள் குழுக்களுக்கு உதவிகளைப் பெறுவதில் எந்தச் சிரமமுமிருக்க வில்லை.

**ஆயுதங்கள் :** இலைமறைவு, காய்மறைவு என்ற அளவில் ஓர் உண்மை என்னவெனில், ஹூத்தீஸ், ஹமாஸ், ஹிஸ்புல்லாஹ் என்ற அல்லாஹ்வின் வழியில் போராடுபவர்களுக்கு ஆயுதங்கள், புதுப்புது வடிவிலும் புதுப்புது


vaigarai velicham official

வேகத்திலும் கிடைக்கின்றது. ஈரானிலிருந்து என்பதுதான்.

**ஆயுதங்கள் செய்யும் உக்தி :** ஆயுதங்களை முழுமையாகச் செய்து அப்படியே தூக்கித் தருவதைவிட, ஆயுதங்களைத் தயாரிக்கும் (டெக்னிக்) என்ற உத்திகளை - பொறியியல் களை - ஈரான் கற்றுக்கொடுத்தது. இதனால் போராளிகள் தாங்களாகவே பல புதிய ஆயுதங் களை கண்டுபிடித்துக்கொண்டார்கள்.

ஆக போராளிகளை தற்காலிகமாகவும், நீண்ட காலமாகவும், அழிக்க விரும்புபவர்கள், ஜியோனிஸ்ட் என்ற யூதத் தீவிரவாதிகள் நாம் மேலே சொன்ன தலைவர்களைக் குறிவைத்திட எல்லா முகாந்திரமும் இருக்கின்றன.

அதேபோல், இப்படி Targeted Killing "குறிவைத்துக் கொலை செய்வது" என்பது இஸ்ரேல் தொடக்கக் காலத்திலிருந்தே அதாவது, 1914யிலிருந்தே கடைபிடித்து வரும் ஒரு உக்தி. அதை வைத்துப் பார்க்கும்போது இஸ்ரேல் செய்யும் இனப்படுகொலைகளுக்கு எல்லா உதவிகளையும் செய்து வருபவர்களும் (அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும்) மேலே சொன்னவர்களைக் குறி வைக்க எல்லா முகாந்திரங்களுமிருக்கின்றன.

இப்போது இஸ்ரேல் அடைந்து வரும், அசிங்கமான, அவமானமான தோல்வியை மக்கள் மன்றத்திலிருந்து திருப்பிட வேண்டிய தேவை இஸ்ரேலுக்கு இருக்கின்றது.

அதை வைத்துப்பார்த்திடும்போது இஸ்ரேலின் வீதிகளில் லட்சக்கணக்கில் திரண்டு போராடிக் கொண்டிக்கும் பெரும் திரள் மக்களுக்கு நமது தலைவர்களும் ஏதோ செய்து கொண்டிருக்கிறார்கள் எனக் காட்டிட வும், இதைச் செய்திருக்கலாம். இது மக்கள் கவனத்தை வேறு பக்கம் திருப்பிவிட உதவும்.

சர்வதேச நீதிமன்றங்களில் நீதிபதிகள் - பல நாடுகளிலும் உள்ள மூத்த வழக்கறிஞர்கள் இவர்களுக்கு முன்னால் இஸ்ரேல் கடந்த ஒருவாரமாக அவமானப்பட்டு வருகின்றது. அதிலிருந்து மக்கள் கவனத்தை திருப்பிட வேண்டிய அவசியமிருக்கின்றது இஸ்ரேலுக்கு. இந்த விபத்திற்கு முன்பு இஸ்ரேலைக் கறுப்புப் பட்டியலில் இணைக்கும் முயற்சி ஒன்று நடந்து வருகின்றது. அதிலிருந்து தப்பிக்கும் தேவையுமிருக்கின்றது.

ICC-International Criminal Court (சர்வதேச தண்டனை நீதிமன்றம்) பிடி வாரண்ட்-ஐ உடனேயே வழங்கிட வேண்டும். நெத்யான்ஹு ஜே காலண்ட்(இஸ்ரேலின் இராணுவ அமைச்சர்) Herzi Healvi ஹெல்வி ஆகியோரை கைது செய்திட வேண்டும் என்ற அழுத்தங்கள் அதிகமாகி வருகின்றன. இந்த கோரிக்கையை வைப்பவர்கள் / கருத்தை சொல்பவர்களை இஸ்ரேலியரும் அமெரிக்காவின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மிரட்டி வருகின்றார்கள். அவர்களை அச்சுறுத்தவும் இதை, இஸ்ரேல் செய்திருக்கலாம். இந்த ICC பிடி வாரண்ட்-க்கு அழுத்தம் கொடுப்பவர்கள் தங்கள் உயிருக்கும் பாதுகாப்பில்லை என நினைக்கலாம், அஞ் சலாம். இந்த நிகழ்வுக்குப்பின் ICC பிடி வாரண்ட், ஐ.நா. தீர்மானங்களை எப்படிச் செயல்படுத்துவது என்பதை ஆராய்ந்திர ஈரான் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஓர் மாநாட்டை தெஹ்ரானில் 23.05.2024-இல் ஏற்பாடு செய்திருந்தார். அவருடைய மரணத்தால் அது நடக்கவில்லை.

**இஸ்ரேல் செய்யத் துணியாது?** இவர்களின் மரணத்தில் இத்தனை நன்மைகள் இஸ்ரேலுக்கு இருந்தாலும் ஒரே ஒரு காரணத்திற்காக இஸ்ரேல் செய்யாது. அது ஈரான் எதிர் தாக்குதலை நடத்தும். அதில் இஸ்ரேலும் மொத்தமாக அழியும் இந்த பயம் இஸ்ரேலுக்கு நிரம்பவே உண்டு. பழி தீர்ப்பதில் ஈரான் கெட்டிக்கார நாடு. இதனை நெத்யான்ஹுவே பலமுறை சொல்லி இருக்கின்றார்.

**துருக்கியின் உதவி :** விபத்து 19.5.2024 மாலை 4.20 மணிக்கு நடந்தது. ஹெலிகாப்டர் வீழ்ந்த இடத்தில் பணிமுட்டம் அதிகமாக இருந்ததால், சாதாரணமாகத் தேடிடும் உபகரனங்கள் பயன்படவில்லை.

உலகத்தில் துருக்கி நாட்டில்தான் Night Vision Helicopter நைட் விஷன் ஹெலிகாப்டர்கள் இரவிலும் - பனி முட்டத்திலும் தேடிடும் ஹெலிகாப்டர்கள் இருக்கின்றன. அவை உடனேயே வரவைக்கப்பட்டன. அதன் பின்னரே விபத்திற்குள்ளான ஹெலிகாப்டர் விழுந்த இடத்தைச் சரியாகக் கண்டுபிடிக்க முடிந்தது.

**இஸ்லாம் வழங்கும் நீதியின் அடிப்படை :** ஹெலிகாப்டர் விழுந்த உடனேயே யாரையும் ஈரான் யாரையும் குற்றம் பிடிக்கவில்லை.

மிகவும் பொறுமையாக ஓர் விசாரணைக்கு உத்திரவிட்டது. விசாரணையில் கீழறுப்பு வேலைகள் எதுவும் நடக்கவில்லை என்றே கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் இஸ்ரேலை மாபெரும் சக்தி என்று செய்திகளைப் பரப்பியவை தலைகுனிந்தன.

இதுபோன்ற சூழ்நிலைகளில் இஸ்லாம் நம்மிடம் முஸ்லிம்களிடம் பொறுமையோடும் நீதியோடும் நடந்துகொள்ளச் சொல்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அதைத்தான் ஈரானும் செய்தது.

திருக்குர்ஆன் நம்மிடம் இப்படிக் கூறுகின்றது....

அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவர்களே! நீதியின்மீது நிலைத்து நில்லுங்கள்! ஒரு கூட்டத்தார் மீது நீங்கள் கொண்ட பகைமை அந்தக் கூட்டத்தாருக்கு நீதி செலுத்தாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செலுத்துங்கள். இதுவே இறைவனை அஞ்சி வாழ்வதற்கு மிகவும் நெருக்கமானதாகும். அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பெரியவன், அனைத்தையும் அறிந்தவன். (அல்குர்ஆன்-5:8)

பன்னெடுங்காலமாக ஜியோனிஸ்ட்டுகள் என்ற யூத தீவிரவாதிகள், பாலஸ்தீன் மக்களின் பரம எதிரிகள் - பல லட்சம் அப்பாவி பாலஸ்தீனர்களை, அதாவது முஸ்லிம்களை அவர்களுடைய பூர்வீக இடங்களிலிருந்து விரட்டி இருக்கிறார்கள். அத்தனையும், தீவிரவாதத்தின் வழியாகத்தான்.

பல லட்சம் பாலஸ்தீன முஸ்லிம்களைக் கொலை செய்திருக்கின்றார்கள்.

இப்போதும் இந்த விபத்து நடக்கும் வரைக்கும் 35,000 அப்பாவி முஸ்லிம்களை காஸா பகுதியில் மட்டும் அழித்திருக்கின்றார்கள்.

இப்படிக் கொலை செய்யப்பட்டவர்களில் 75% பெண்களும் குழந்தைகளும்.

பெண்களையும், குழந்தைகளையும் கொலை செய்வதை ஒரு கொள்கையாகவே கொண்டு கொலை செய்கின்றார்கள். இதனால் ஈரான் பாலஸ்தீன மக்களுக்கும் போராளிகளுக்கும் நெடுங்காலமாக உதவிகளைச் செய்து வருகின்றது. அதனால் ஈரானை பகைமை நாடாகப் பார்க்கின்றது இஸ்ரேல்.

இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு, இஸ்ரேல்தான் இந்த விபத்தை நடத்தியது எனச் சொன்னால் - உலகம் மிகவும், எளிதாக எந்த மறுப்புமில்லாமல் ஏற்றுக்கொள்ளும்.

ஈரான் இஸ்ரேலை தாக்கிடும் சக்தியைப் பெற்றது. அதனால் இஸ்ரேலை தாக்கவும் செய்யலாம். பலரை பிணமாகக் குவிக்கலாம். ஆனால் அது மேற்சொன்ன திருக்குர்ஆன் வசனத்திற்கு எதிரானது. அல்லாஹ்வின் உதவிக் கிடைக்காது.

**இஸ்லாமிய இதழியல் :** அடுத்து இது இஸ்லாமிய இதழியலுக்கும் எதிரானது. இஸ்லமிய இதழியல் முதல் அடிப்படை வழிகாட்டுதலை அல்லாஹ் இப்படிக் கூறுகின்றான்

“இப்படி, பாதுகாப்பு அல்லது பயம் பற்றிய ஒரு செய்தி அவர்களுக்கு எட்டுமானால், உடனேயே அதை, அவர்கள் பரப்பி விடுகின் றார்கள். அவர்கள் அதைதூதரிடமும், அவர்களில் அதிகாரம் உடையவர்களிடமும், தெரிவித்திருந் தால், அவர்களிலிருந்து அதை ஆய்வு செய்ப வர்கள், அதனை நன்கு அறிந்துகொள்வார்கள். அல்லாஹ்வின் அருளும், அவனுடைய கிருபையும் உங்கள் மீது இல்லாதிருந்தால் உங்களில் சிலரைத் தவிர மற்றவர்கள், ஷைத்தானையே பின்பற்றி இருப்பார்கள்.” அல்குர்ஆன்-4:83

இந்த நெறிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் முஸ்லிம்கள் செய்திகளை மக்களுக்குச் சொல்லிட முடியும்.

இது இஸ்லாமிய இதழின் ஒழுக்க மாண்பு. பரபரப்பு அதனால் மக்களின் பார்வை நம்மீது விழும், என்பனவற்றிற்காக வதந்திகளை, வாந்தியெடுப்பது, இஸ்லாமிய இதழியலுக்கு, மாண்புகளுக்கு எதிரானது.

அவசரப்பட்டு, கையில் கிடைத்ததை யெல்லாம், காற்றிலே பறக்க விடுவதைப்போல், வதந்திகளை முந்தித் தருபவர்கள், ஷைத்தானின் கைகளில் அகப்பட்டவர்கள் ஆவார்கள்.

### இவர்கள் மனித இனத்தின் எதிரி

அவர்களால் பூமியில் குழப்பந்தான் விளையும் - இரத்தம் ஆறாக ஓடும். இதுபோன்ற குழப்பங்களை இஸ்லாம் இதழியன் முதல் விதியிலேயே தடுத்துவிடுகின்றது. வழிஇல்லாமல் ஆக்கிவிடுகின்றது. அல்ஹம்துலில்லாஹ் **- MGM**


vaigarai velicham official

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்




# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | **சிறையில் எனது நாட்கள்**<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் | - ரூ.350.00 |
| 2. | **ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு**<br>மு. குலாம் முஹம்மது | - ரூ.140.00 |
| 3. | **சாதி ஒழிந்தது** - டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 4. | **End of Casteism** T.M. Mani | - ரூ.50.00 |
| 5. | **அஹமதாபாத் குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 6. | **டெல்லி குண்டுவெடிப்புகள்**, மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 7. | **நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 8. | **மால்கம்**-X, மு.குலாம் முஹம்மது | - ரூ.120.00 |
| 9. | **தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம்** டி.எம்.மணி | - ரூ.20.00 |
| 10. | **செந்தமிழ்நாட்டுச் சேரிகள்**, டி.எம்.மணி | - ரூ.40.00 |
| 11. | **கர்கரேயை கொலை செய்தது யார்?** | - ரூ.250.00 |
| 12. | **சிந்திப்பீர் செயல்படுவீர்**, நா.கோதண்டபாணி | - ரூ.15.00 |
| 13. | **ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்**, ப.கோபால கிருஷ்ணன் | - ரூ.40.00 |
| 14. | **சாதி ஒழிந்தது** (ஹிந்தி) டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 15. | **நாம் பிரிந்து விடவேண்டாம்**, பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.175.00 |
| 16. | **தாலிபானின் பிடியில்**, மு. குலாம் முஹம்மத் | - ரூ.150.00 |
| 17. | **தீண்டாமைக்குத் தீர்வு** | - ரூ.30.00 |
| 18. | **பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு**<br>மு. குலாம் முஹம்மத் | - ரூ.110.00 |
| 19. | **பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள்**, மு. குலாம் மஹம்மத், | - ரூ.90.00 |
| 20. | **இஸ்லாமிய நாகரிகம்**,<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.130.00 |
| 21. | **கஷ்மீரின் பாதி விதவைகள்**, மு. குலாம் முஹம்மத், | - ரூ.70.00 |

| | | |
|---|---|---|
| 22. | **எது முதலில்?**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.450.00 |
| 23. | **சாதி ஒழிந்தது** (கன்னடம்) | - ரூ.50.00 |
| 24. | **அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?**<br>டி.எம். உமர் ஃபாரூக் | - ரூ.20.00 |
| 25. | **கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?** மு. குலாம் முஹம்மத் | - ரூ.30.00 |
| 26. | **முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம்**<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.15.00 |
| 27. | **இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும்** | - ரூ.50.00 |
| 28. | **இஸ்லாம் வழங்கும் தண்டனைகள்** | - ரூ.40.00 |
| 29. | **இஸ்லாமும் விஞ்ஞானமும்** | - ரூ.30.00 |
| 30. | **இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா?** | - ரூ.50.00 |
| 31. | **இஸ்லாமும் பெண்களும்** | - ரூ.60.00 |
| 32. | **இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா?** | - ரூ.70.00 |
| 33. | **தேசப்பிரிவினைக்கு யார் காரணம்?**<br>விரிவாக்கப்பட்ட பதிப்பு, மு. குலாம் முஹம்மத் | - ரூ.100.00 |
| 34. | **திருக்குர்ஆன் கூறும் பொறுமை**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.80.00 |
| 35. | 26/11- **விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்?** | - ரூ.220.00 |
| 36. | **ஒரு தலித் போராளியின் வாழ்வும்,**<br>**அவர் காட்டிய வழியும்** - அ.மார்க்ஸ் | - ரூ.20.00 |
| 37. | **முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்**<br>வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.10.00 |
| 38. | **நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**<br>தி.லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.10.00 |
| 39. | **குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்?**<br>சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் | - ரூ.25.00 |
| 40. | **இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன்**<br>**லேப்டாப்பில் இருந்ததென்ன?** | - ரூ.20.00 |
| 41. | **கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான்**<br>கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | - ரூ.25.00 |
| 42. | **கூரியூர் ஜின்னா ஷஹீத்** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 43. | **முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும்** | - ரூ.20.00 |
| 44. | **இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு,** எஸ்.எம். முஷ்ரிப், | - ரூ.30.00 |
| 45. | **சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்,**<br>**காந்திஜி கொலை ஏன்? எப்படி?** | - ரூ.30.00 |

46. **பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்** - ரூ.400.00
எஸ்.எம். முஷ்ரிப், IPS, தமிழில் : மு. குலாம் முஹம்மத்

47. **குஜராத் : 2002 பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள்,** தமிழில்: வளர்மதி - ரூ.150.00

48. **இஸ்லாம் ஒன்றே வழி!** - ரூ.120.00
அனிசுத்தீன் அஹமத், தமிழில் : மு. குலாம் முஹம்மத்

49. **இஸ்லாம் உங்கள் பார்வைக்கு** - ரூ.400.00
ஹமுத அப்த் அல் அத்தி, தமிழில் : மு. குலாம் முஹம்மத்

50. **முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?** - ரூ.300.00
ஹள்ரத் அபுல்ஹஸன் நத்வி (ரஹ்), தமிழில் : மௌலவி அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ

51. **சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள்** - ரூ.20.00

52. **இஸ்லாம் நாங்கள் தேர்தெடுத்த மார்க்கம்** - ரூ.100.00

53. **முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி** - ரூ.20.00
கரன் ஆம்ஸ்ட்ராங்

54. **நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம்** - ரூ.50.00

55. **பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி** - ரூ.50.00

56. **அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்** - ரூ.40.00

57. **எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர்** - ரூ.60.00

58. **சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை** - ரூ.60.00

59. **பா.ரஞ்சித் அவர்களின் உரையும் ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும்** - ரூ.25.00

60. **முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்** - ரூ.20.00

61. **அயா சோபியா உருவான வரலாறு** - ரூ.50.00

## எமது விற்பனையில்...

01. **கோவை கலவரத்தில் எனது சாட்சியம்** - ரூ.100.00
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான்

02. **மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்** - ரூ.100.00
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு

03. **குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள்** - ரூ.170.00
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி,

04. **நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா?** - ரூ.140.00
தி.லஜபதி ராய், மூத்த வழக்கறிஞர்

05. **பலி கடாக்கள்** - ரூ.300.00

## BOOKS IN ENGLISH

1. **END OF CASTEISM** - T.M. Umar Farooq, - **Rs.50.00**
   English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam
2. **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media - **Rs.695.00**
3. **MUHAMMED THE PROPHET FOR OUR TIME** - **Rs.325.00**
   Karen Armstrong
4. **KAFKA LAND - PREJUDICE LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi - **Rs.350.00**
5. **WHO KILLED KARKARE** - **Rs.300.00**
   The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS,
6. **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif - **Rs.275.00**
7. **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION** - **Rs.60.00**
   Kamaluddin Ahamed
8. **MUSLIMS AGAINST PARTITION OF INDIA** - **Rs.280.00**
   Shamsul Islam, Pharos Media
9. **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN** - **Rs.25.00**
   (EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed
10. **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE** - **Rs.150.00**
    Nilofar Suhrawardy
11. **Innocent Prisoners** - **Rs.495.00**
12. **Brahminists Bombed Muslims Hanged** - **Rs.350.00**
13. **Kodikkal- TheLiving Witness of Social Justice** - **Rs.300.00**

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது**

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது** - டி.எம். உமர் பாரூக் - ரூ.60.00
02. **நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி** - ரூ.30.00
    கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

GPay **8148129887** Vaigarai Velicham Official

தொடர்புக்கு : **8148129887, 7401213394**

வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

Vaigarai Velicham Official   vaigarai velicham official

darultrust@yahoo.com   Website : Darulislam.in



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002